

கல்கி
ALKI 5.9.1971 40 காசு


she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century — For 100% cotton textiles
Adroit/CM/ 43


Enjoy Coke
காலமெதுவாயினும்
கோலாகலம் தரும் கோகா-கோலா!

கல்கி

பொருளடக்கம்

விரோதிக்ருது ஆவணி 20 — செப்டம்பர் 5, 1971



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கிக்கு வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றுள் பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவை, போதிய தபால் தலைகளுடன் கூடிய முகவரியிட்ட உறையோடு வந்திருந்தால் அவ்வப்போது திருப்பி அனுப்பப்படுகின்றன. போதிய தபால் தலைகளுடன் வராத கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் பற்றி இக்காரியாலயம் பொறுப்பேற்பதற்கில்லை.



ட்ரேயான்ஸ் ட்ரேயோ:.பேன்
அதிக நேர்த்திக்கு
அதிக பாதுகாப்புக்கு

ட்ரேயான்ஸ் ட்ரேயோ:.பேன் ஈரம், தூசி, பூச்சிகள், கிருமிகள், எண்ணை, வாயு இவற்றினின்று பாதுகாப்பு அளிக்கிறது. துணிமணிகள், வாசனைப் பொருட்கள், மருந்துகள், சிகரெட், இனிப்பு மிட்டாய் தயாரிப்பாளர்கள் எல்லோரும் ட்ரேயான்ஸ் ட்ரேயோ:.பேன் பாக்கிங்கையே விரும்புவதில் அதிசயம் ஒன்றுமில்லை.

திருவாங்கூர் ரேயான்ஸால் உங்கள் பொருளுக்கு உகந்த ட்ரேயான்ஸ் ட்ரேயோ:.பேன் அளிக்க முடியும்.

ரேயான் ட்ரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண். 1736.
61, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
தந்தி: CELYARN டெலிபோன்: 20117, 20118
கிளைகள்: த. பெ. எண். 253 சேலம், த. பெ. எண். 154, மதுரை
த. பெ. எண். 1372, கோயம்புத்தூர்

NAS - 200 TM

ஒழுக்கத்துக்கும் சுபிட்சத்துக்கும் வழி

நாட்டில் ஒழுக்கமும் பண்பாடும் மிகவும் குறைந்து விட்டன. தார்மிகப் பண்பின் அவசியத்தைப் பற்றிய பேச்சு இப்போது மிக அதிகமாகி வருகிறது. இந்தப் பேச்சு இவ்வளவு அதிகரித்திருப்பதிலிருந்தே, தேசத்தில் அறநெறி எவ்வளவு தூரம் சிதைந்து விட்டது என்று புரிந்து கொள்ளலாம்.

'தார்மிகப் பண்பு' என்பது போன்ற வார்த்தைகள் தெளிவாக இல்லை. மொத்தத்தில், இப்போது செய்ய வேண்டியது மக்கள் நன்னடத்தையுடன் வாழுவதற்கு வழி காண்பதே ஆகும். மக்களின் நடத்தையைத் திருத்த என்ன வழி? தொன்றுதொட்ட காலமாக அந்தந்த மக்களும் பின்பற்றி வரும் மதம்தான் அவர்களின் நன்னடத்தைக்கு அடிப்படையாக இருந்திருக்கிறது. ஒவ்வொரு மதமும், அதைப்பின்பற்றுபவருக்கெனப் பல விதிகளைக் கூறுகிறது. இந்த விதிகளின்படி அவர்கள் ஒழுகினாலே அவர்களுடைய நடத்தை நல்லபடியாக அமைந்துவிடும். எனவே, 'அறநெறி', 'தார்மிகப் பண்பு' இவற்றையெல்லாம் வளர்ப்பதற்கு வழி, மக்கள் மீண்டும் அவரவரது மதங்கள் கூறும் விதிகளை அநுசரிக்குமாறு செய்வதேயாகும். 'அறநெறி' விதிகளும் மத விதிகளும் ஒன்றேதாம்.

விதையிலிருந்து மரம் உண்டாகி வளருவது போல், தார்மிகப் பண்புகள் மதங்களிலிருந்து தோன்றி விருத்தியாகின்றன. அவரவரும் தங்கள் மத விதிகள் காட்டும் வழியில் சென்றால் தேசத்தில் தர்மம் மீண்டும் நிலைபெறும்.

இவ்வாறு மக்களுக்கு மறுபடியும் மதத்தில் பற்று ஏற்பட வேண்டுமாயின், அவர்களுக்கு வழி காட்டக்கூடிய ஸ்தானங்களில் உள்ள உயர் மக்கள் தத்தம் மதத்தின்படி உண்மையில் ஒழுக வேண்டியது அவசியமாகும். தேசத்தில் தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமாயின், முதலில் உயர் வர்க்கத்தினர் மதத்தில் சொல்லப்பட்ட தர்ம விதிகளை அநுசரிக்க வேண்டும். 'மதவிதிகளை அநுசரிப்பது' என்றால், ஒரு மதம் கூறும் சடங்குகளைச் செய்வது என்று மட்டும் ஆகாது. மதங்கள் விதிக்கும் ஒழுக்க முறைகளை அன்றாட வாழ்க்கையில் மேற்கொண்டு, நடத்தையில் காட்ட வேண்டும்.

இன்னமும் நமது பொதுமக்கள் சீர்திருத்த முடியாத அளவுக்குத் தார்மிகப் பண்புகளை இழந்துவிடவில்லை. பொதுவாக, அதர்மத்துக்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆனால் இக்காலச் சூழ்நிலையில் அவர்கள் தர்மத்தைப் புறக்கணிக்கும்படியான சபலங்கள் ஏராளமாக ஏற்பட்டு விட்டன. இப்படிப்பட்ட சபலங்களைக் காட்டாவிடில், பொதுவில் நம் மக்கள் தத்தம் மத விதிகளை விசுவாசத்துடன் பற்றியொழுகி, நல்ல பிரஜைகளாகவே இருப்பார்கள். இப்போது உயர் மட்டத்தில் உள்ள மக்கள் மற்றவர்களுக்கு நன்னடத்தையில் உதாரணமாக வழிகாட்ட வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும். அவர்களுக்கு இந்த உணர்வை ஊட்டும் முயற்சியில் நாம் வெற்றி பெற்றால், தேசத்தில் தர்ம வாழ்வுக்காக நடக்கும் போரிலே வெற்றி பெறுவோம்.

இப்போது வழி காட்ட வேண்டியவர்கள் ஆண்டவனை வழிபடவில்லை. அதற்குப் பதில் பணத்தையும், அதிகாரத்தையுமே வழிபடுகிறார்கள். அவர்கள் மீண்டும் ஆண்டவனை நினைவுக்குத் தந்து கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும். எல்லாச் சீர்திருத்தத்துக்கும் கதவு திறந்துவிடுகிற திறவுகோல் ஒன்றுதான்: மக்களை ஆண்டவனிடம் மெய்யாக, அந்தரங்கசுத்தமாக பக்தி செலுத்தச் செய்வதே அந்தத் திறவுகோல். இதற்கு நாம் முயலாவிடில், ஆத்மிகமாக மட்டுமின்றி லௌகிகமாகவும் சரிவுப் பாதையில் வேகமாகச் சென்று அழிய வேண்டியதுதான்.

ஆண்டவனிடம் நம்பிக்கை இல்லாதவர்களோடு — அல்லது 'ஆண்டவனிடம் எங்களுக்கு நம்பிக்கை இல்லை' என்று சொல்லிக் கொள்பவர்களோடு வாதிப்பதில் நமது காலத்தையும் சக்தியையும் வீணாக்க வேண்டியதில்லை.

தேர்தல் மூலம் சட்டசபைகளை அமைத்து ஆட்சி நடத்துகிற முறை நம் நாட்டில் நடந்து வருகிறது. இம்முறையின் கீழ் தில்லி பார்லிமெண்டில்

பலம் வாய்ந்த கோஷ்டிகளை உண்டாக்கி, மக்களின் அடிப்படை உரிமைகளை யெல்லாம் சிதைக்க வழி ஏற்பட்டு விட்டது. சட்டசபை ஜனநாயகத்தில் இதைவிடப் பெரிதாக இன்னொரு துரதிருஷ்டம் விளைந்திருக்கிறது. அதிகாரப் பசியினால் தேர்தல் முறைகளை ஊழலாக்கி மக்களின் தார்மிகப் பண்புகளைச் சிதைத்திருப்பதே இந்தத் துரதிருஷ்டம். அப்பட்டமான, வெட்கமற்ற லஞ்ச ஊழல் இப்போது சர்வ சாதாரணமாகி விட்டது.

நான் மேலே சொல்லியிருப்பது போல், உயர் வர்க்கத்தினருக்கு மத விதிகளில் பற்று ஏற்படுத்தினாலே, எதிர் காலத்தைப் பற்றி நம்பிக்கை வைக்கலாம். இந்த முயற்சியில் நாம் வெற்றி பெற்றால் நமது சமுதாயம் முழுவதையும் காப்பாற்றியவராவோம். உலகமெல்லாம் நம் நாட்டை மதிக்கும்படி செய்தவர்களாவோம். பொருளாதார சுபிட்சம் பெறவும் இதுவே வழி வகுத்துக் கொடுக்கும்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

இரண்டாவது இமாலய வெற்றி!


அன்னிய மண்ணில் முதல் தடவையாகக் கிரிக்கெட்டின் முடிசூடா மன்னர்களோடு, அபாரமாக ஆடி இந்திய கோஷ்டி வென்றதை 'இமாலய வெற்றி' என்று வர்ணிக்காமல் இருக்க முடியுமா? முதல் இமாலய வெற்றி மேற்கிந்தியத் தீவுகளில்; இரண்டாவது இங்கிலாந்தில். இரட்டிப்பு மகிழ்ச்சிக்கும் ஆரவாரத்துக்கும் கேட்பானேன்?

ஓவல் இறுதி டெஸ்டில், அற்புதமான 'லெக் ஸ்பின்னர்' என உலகப் புகழ்பெற்ற சந்திரசேகர் இந்தியாவை வெற்றிப் பாதைப் பக்கம் திருப்பினார். இரண்டாவது இன்னிங்ஸில் 38 ரன்களுக்குள் ஆறு விக்கெட்களை வீழ்த்தினார். இங்கிலாந்து கோஷ்டி இரண்டாம் இன்னிங்ஸில் 101 ரன்களுக்குள் மைதானத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. அவர் போட்ட வெற்றி அஸ்திவாரத்தில் இந்திய கிரிக்கெட்காரர்கள் சோடை போகாமல் 'ஆடி இந்தியாவின் பெருமையை உயர்த்தினார்கள். ஆலன் நாட் அடித்த பந்தை ஸோல்கர் பாய்ந்து விழுந்து பிடித்த அற்புதத்தை மறக்க முடியுமா? அபீத் அலி கடைசியாக மூன்று ரன்கள் தேவைப்பட்ட போது பவுண்டரி அடித்தது இந்தியாவுக்கு மகத்தான வெற்றியைத்தேடித் தந்தது. இந்திய கோஷ்டியில் எல்லா ஆட்டக்காரர்களுமே வெற்றிக்குப் பாடுபட்டதை மறக்க முடியாது. காப்டன் வாடேகர் அதிர்ஷ்டசாலி. தொடர்ந்து இரண்டாவது இமாலய வெற்றியும் அவரது தலைமையிலேயே கிட்டியிருக்கிறது. விநாயக சதுர்த்தியன்று இந்திய கிரிக்கெட் கோஷ்டியினர் இந்தப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். காப்டன் இல்லிங்வொர்த்துக்கு இந்திய வெற்றி ஓர் அதிசயம்! இந்திய மக்களுக்கோ ஒரே கொண்டாட்டம்!

இமாலய வெற்றிகள் பெற்ற இளம் இந்திய கிரிக்கெட் கோஷ்டியினரை ''வருக! வருக!'' என்று அகமகிழ்ந்து வரவேற்கிறோம்.

நிற்பவர்கள்: காவஸ்கர், விசுவநாத், மன்காட், கிருஷ்ணமூர்த்தி, கிர்மானி, பேடி, கோவிந்தராஜ், ஜயந்திலால், ஸோல்கர், அபீத் அலி. அமர்ந்திருப்பவர்கள்: ஆர். பி. மெஹ்ரா (பொருளாளர்) சந்திரசேகர், அப்பாஸ் அலி பெய்க், உதவி காப்டன் வேங்கடராகவன், காப்டன் வாடேகர், சர்தேசாய், பிரசன்னா, மானேஜர் கர்னல் அதிகாரி.

படம் - நன்றி: 'ஸ்போர்ட்ஸ் இந்தியா'



ராஜாஜியின் கருத்துக்கள்

அமெரிக்காவின் அவிவேகம்

ஆசிய விவகாரங்களில் அசிரத்தை காட்டுவதை அமெரிக்கா தனது கொள்கையாக்கிக் கொண்டுள்ளது. இதனாலேயே ஐரோப்பிய விவகாரங்களிலும் தான் சிக்காமல் ஒதுங்க வேண்டியது அமெரிக்காவுக்கு இன்றியமையாததாகி விட்டது. இந்த நிலையில் அந்த நாடு தனது பண்டங்களின் விற்பனை செழிப்பதற்காகக் கம்யூனிஸ்ட் சீனத்தின் பக்கம் திரும்பியுள்ளது. கம்யூனிஸ்ட் சீனம் இப்போது நன்கு ஸ்திரப்பட்டு விட்ட ஆட்சியாகி விட்டதால் அமெரிக்கா அதன் பக்கம் திரும்பி விட்டது. இதனால் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கு மிடையே நட்பில் ஒரு விரிசல் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இந்த விரிசலுக்கு ஓர் அடையாளமே இந்திய — ருஷிய உடன்படிக்கை.

இப்போது இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நல்லுறவு ஏற்படுத்துவது பற்றிப் பேச்சு அடிபடுகிறது. வெறும் ராஜதந்திரத்துக்காகவோ, அல்லது சொந்த நலனை உத்தேசித்தோ, அமெரிக்கா இவ்விதம் செய்யாமல் உண்மையாகவே இந்தியாவுடன் நட்பை வளர்க்க விரும்பினால், அது இப்போது புதிதாகக் கைக்கொண்டுள்ள சீனக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். முன்பு கம்யூனிஸம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கே திரும்ப வேண்டும். இந்தியாவுக்குக் கம்யூனிஸ விஸ்தரிப்பு எத்தகைய பேராபத்து என்பதை அமெரிக்கா உணர வேண்டும்.

கம்யூனிஸத்தையோ, கம்யூனிஸ ஆதிக்கத்தையோ இந்தியா விரும்பவில்லை. எனவே இந்தியாவில் கம்யூனிஸத்தைப் பரப்ப வேண்டுமாயின் வன்முறையிலேயே அதைச் செய்ய வேண்டியிருக்கும். இப்போது பகிரங்கமாக இந்த வன்முறை தொடங்கிவிட்டது. பாகிஸ்தான் உள்நாட்டுப் போர் ஒரு தாற்காலிக விவகாரமே. அது பேச்சு வார்த்தையில்தான் முடிந்தாக வேண்டும். உள்நாட்டிலேயே அதற்குத் தீர்வு காணப்படும். ஆனால் சீனத்தின் விஸ்தரிப்பு அபாயம் தாற்காலிகமானதல்ல.

ஒருபுறத்தில் சைத்தான், மறுபுறத்தில் ஆழ்கடல், நடுவிலே நாம் நிற்கிறோம் என்றால் அந்தச் சந்தர்ப்பத்தில் ஆழ்கடலில் விழுந்து நிச்சயமாக மூழ்கிப் போவதைவிடச் சைத்தானைச் சரிக்கட்ட முடியுமா என்று பார்ப்பதே விவேகம். இந்திய — ருஷிய உடன்படிக்கைக்கு நான் ஆதரவு தெரிவித்திருப்பது சரியா என்ற கேள்வி எழுப்பியுள்ள நண்பர்களுக்கு இதைத் தான் நான் எடுத்துக் காட்டி யிருக்கிறேன். இப்படியாக நம்மைச் சைத்தானுக்கும் ஆழ்கடலுக்கும் மத்தியில் கொண்டு விட்டிருப்பது அமெரிக்காவே. ஆசிய விவகாரங்களிலிருந்து ஒதுங்கி யிருக்க வேண்டுமென அமெரிக்கா உத்தேசித்ததுதான் இந்த நிலைமைக்குக் காரணம். அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு நிலைமை மாறலாம்.

பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவது, பாகிஸ்தானின் ஆதரவாளரான சீனத்துடன் நட்புறவு கொண்டு அமெரிக்கப் பண்டங்களுக்குச் சந்தை பிடிப்பது, அதேசமயத்தில் இந்தியாவின் விரோதத்தைத் தணிப்பதற்காக அகதிப் பிரச்னைக்கென டாலரை வாரி இறைப்பது — இப்படிச் செயல்படுகிறது அமெரிக்கா.





ஜனநாயக ஆட்சியில் முக்கியமான அம்சம் பலமான எதிர்க்கட்சி செயற்படுவது. தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சி பலம் பெரிதும் சுருங்கிவிட்ட நிலையில், சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான டாக்டர் ஹண்டே எம். எல். ஏ. அவர்கள் ஒருவரே தமது கூரிய கேள்விக் கணைகள் மூலம் ஆளும் கட்சியைத் திணற அடித்து, நாட்டில் ஏராளமான மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றிருக்கிறார். மக்களின் சார்பில், சமீபத்தில் டாக்டர் ஹண்டே அவர்களுக்குத் தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு சி. இரா. சந்தானம் வெள்ளிச் சவுக்கினை வழங்கிக் கௌரவித்தார்.

அத்தேச சுதந்திர பிதாக்களும், இந்திய தேச பிதா காந்திஜியும் இதை நேர்மையான நடவடிக்கை என்று ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

உயர்வில் சமமா, தாழ்வில் சமமா?

சமூகத்தில் உள்ள தாரதம்மியங்களை இரண்டு வழிகளில் நீக்கிச் சமப்படுத்தலாம். ஒன்று, தாழ்மட்டத்தில் உள்ளோரை உயர்த்துவது; மற்றது, உயர் மட்டத்தில் உள்ளோரைக் கீழே தள்ளுவது. இரண்டாவதாகச் சொன்னதே இன்றைய சர்க்காரின்கொள்கை. மத்திய—மாநில அரசுகள் பலவிதப் பறிமுதல் சட்டங்களும், உற்பத்தியைக் குலைக்கும் வரிகளும் இதற்காகவே போடுகின்றன. இந்த 'நீதி'யின்படி ஒரு சிலர் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெற்று மற்றோரைவிட உயர்வதை மட்டும் அநுமதிக்கலாமா? ஆனாலும் கல்விக்கு வெளிப்படையாக 'வரம்பு' விதிக்க முடியவில்லை. எனவே, மறைமுகமாக, நல்ல தகுதி உள்ளோருக்குக் கல்லூரிகளில் அட்மிஷன் மறுக்கப்படுகிறது. இதெல்லாம் தேச நலனுக்கு மகத்தான ஊறு விளைவிப்பதாகும். கீழே தள்ளுவது விரைவில் முடியும். மேலே தூக்குவது சிரமம். ஆனால் வேகமாகப் போவது விபர்த்தத்திலும் விபரீதத்திலும் முடியும். நிதானமாகச் சென்று, தாழ்மட்டத்தில் உள்ளோரையும் உயர்த்தும் கடினப் பணியை மேற்கொண்டாலே தேசம் நலன் பெறும்.

பக்கத்திலே பகவான்

சத்தியத்தையும் அஹிம்சையையும் வழிபட்டார் காந்திஜி. மற்றவர்களும் வழிபட வேண்டுமென விரும்பினார். சத்தியம் என்று அவர் சொன்னது உண்மையை வாயால் பேசுவது மட்டுமல்ல. மக்கள் தங்கள் நடவடிக்கைகள் அனைத்திலும் நேர்மையுடன் ஒழுகுவதையே அவர் சத்தியம் என்றார். அதே போல் அஹிம்சை என்பது விஷக் கிருமிகள் உட்பட எதையுமே கொல்லக் கூடாது! என்ற வறட்டுச் சித்தாந்தமும் அல்ல. நாம் ஹிம்சை மார்க்கத்தில் ஈடுபடக் கூடிய அவசியமே இல்லாதபடி முன்கூட்டியே அன்பைச் செலுத்தி ஹிம்சையைத் தவிர்ப்பதே அஹிம்சை.

காந்திஜி பெரிதும் மதித்த சத்தியமும் அஹிம்சையும் தனிமனிதர்களுக்கு மட்டுமின்றிச் சமுதாயங்களுக்கும் பொருந்தும். அச்சமின்மையும், ஆழ்ந்த நம்பிக்கையும் இருந்தாலே இவற்றை நடத்திக் காட்ட முடியும். இவற்றோடு நம் பக்கத்தில் பகவானும் இருக்க வேண்டும் என்பதைச் சொல்லவே தேவை இல்லை. பகவானின் மீது நாமாகக் கதவைச் சாத்தாவிடில் அவன் நம் பக்கத்திலேயேதான் நிற்பான். நாம் அகக் கண்களை மூடிக் கொள்ளாவிடில் பகவான் நம் பக்கத்திலேயே வந்து அமர்ந்து கொள்வான். நம்மோடு பேசுவான்.

முருகன் திருப்பணி

சென்னை அயன்புரம் ஸ்ரீ கமலவிநாயகர் ஆலயத்தில் ஸ்ரீ முருகனுக்கும் நவக்கிரகங்களுக்கும் சந்நிதிகள் அமைக்க, ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாசாரியர்களின் ஆசிகளுடன் ஸ்ரீ கமலவிநாயகர் ஸத் சங்கத்தாரால் நன்முயற்சி நடந்து வருகிறது. இவ்வாலய நிர்மாணத்துக்கு நிதி சகாயம் சுமார் இருபதாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆஸ்திக அன்பர்கள் கீழ்க்காணும் முகவரிக்குப் பொருளனுப்பி ஸ்ரீ முருகப் பெருமானின் அருளைப் பெற வேணும்: பொருளாளர், ஸ்ரீ கமல விநாயகர் ஸத் சங்கம், 64/4, ஐ. சி. எப். காலனி, சென்னை-38.



இருபத்திரண்டாம் அத்தியாயம்

சுவாமி மகானந்தர்

மகுடபதியும் பெரியண்ணனும் மறு நாள் மத்தியானம் கூனூரில் உள்ள சச்சிதானந்த மடத்தை எவ்வித இடையூறுமில்லாமல் போய் அடைந்தார்கள். மடத்தின் தலைவர் சுவாமி மகானந்தர், தலையில் கட்டுடன் படுத்திருப்பதைக் கண்டதும் மகுடபதி திடுக்கிட்டான். அவரிடம் மகுடபதிக்கு விசேஷ பக்தி உண்டு. சுவாமியாருக்கும் மகுடபதியிடம் அதிக பிரேமை. அவனை அரசியல் தொண்டை விட்டு விட்டுத் தம்முடன் சேர்ந்து பாரமார்த்திகத் தொண்டு செய்யவருபம்படி சுவாமியார் சில சமயம் அழைத்ததுண்டு. மகுடபதி அதற்கு இணங்காம லிருந்ததற்கு முக்கிய காரணம், அவனுடைய இருதய அந்தரங்கத்தில் குடிகொண்டிருந்த செந்திருவின் நினைவுதான் என்று சொல்லலாம். அரசியல் கிளர்ச்சியில் அவனுக்கு இருந்த ஆர்வமும் ஒரு காரணந்தான். சமீபத்தில் ஒரு வருஷ காலமாக அவன் கூனூர் மடத்துக்கு வரவே யில்லை. தான் அரசியலில் ஈடுபட்டவனாதலால் மடத்துக்குத் தன் மூலமாய்ப் போலீஸ் தொந்தரவு ஏற்படக் கூடாதென்று அவன் கருதியிருந்தான்.

இப்போது மண்டையில் கட்டுடன் சுவாமியாரைப் பார்த்ததும் அவன் பரபரப்புடன், ''சுவாமி! தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? தங்களிடம் ஓர் உதவி கேட்கலாமென்று எண்ணியல்லவா வந்தேன்?'' என்றான்.

''வீணாக ஒருவர் மேல் சந்தேகப்பட்டதால் வந்த விபத்து இது; ஆண்டவனுடைய தண்டனை!'' என்றார் சுவாமியார்.

''தாங்களாவது, ஒருவர் மேல் வீணாகச் சந்தேகப்படவாவது? ஆண்டவன் தண்டனையாவது? ஒன்றையும் நம்ப முடியவில்லையே?'' என்றான் மகுடபதி.

''கார்க்கோடக் கவுண்டரைப் பற்றிக் கேட்டிருக்கிறாயோ, இல்லையோ?'' என்று சுவாமியார் சொன்னதும், மகுடபதிக்கு எவ்வளவு வியப்பாயிருந்திருக்குமென்று சொல்லவே வேண்டியதில்லை.

''ஆமாம்; அவருக்கு என்ன? சுவாமி! ஒருவேளை...'' என்று மகுடபதி திடுக்கிட்டுக் கேட்டான்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அவன் என்னை அடித்துப் போட்டார் என்று பயப்படுகிறாயா? மனுஷன் செய்யக் கூடியவர்தான். ஆனால் அதற்கு முன்னாலேயே சுவாமி என்னைத் தண்டித்து விட்டார்.''

''என்ன சுவாமி! திருப்பித் திருப்பித் தண்டனை என்கிறீர்களே?''

''சொல்லுகிறேன். இந்த ஊருக்குக் கொஞ்ச தூரத்தில் கார்க்கோடக் கவுண்டருக்கு ஓர் எஸ்டேட் இருக்கிறது.. தேவகிரி என்று பெயர். அங்கே ஒரு பங்களாவும் இருக்கிறது. அந்த பங்களாவைப் பற்றி என்னவெல்லாமோ கெட்ட பெயர் உண்டு. கவுண்டருடைய விரோதிகளை அங்கே கொண்டு வந்து

திர்த்து விடுகிறார் என்று வதந்தி. ஆறு மாதத்துக்கு முன்பு யாரோ ஒரு பணக்காரப் பையனை அங்கே கொண்டு வந்து ஜெயிலிலே வைக்கிறதுபோல் வைத்திருந்து பதினையிரம் ரூபாய்க்கு நோட்டெழுதி வாங்கிக் கொண்டுதான் விட்டாராம். இன்னும் அங்கே அநாதைப் பெண்களைக் கொண்டு வந்து சிறைப்படுத்தி வைத்து அட்டூழியம் செய்வது பற்றியும் கர்ண கடூரமான விவரங்களைக் கேள்விப் பட்டிருக்கிறேன்... இருக்கட்டும் தம்பி, உன்னைப் பார்த்தால் ஒரு மாதம் பட்டினி கிடந்தவன் மாதிரி இருக்கிறது. ஏன் இப்படி? முதலில் கொஞ்சம் பிரசாதம் எடுத்துக்கொண்டு இளைப்பாறுங்கள். அப்புறம்...''

மருடபதிக்கு உண்மையில் பசியாகத்தானிருந்தது. சச்சிதானந்த மடத்தில் பிரசாதங்கள் பிரம்மானந்தமாக இருக்குமென்றும் அவனுக்குத் தெரியும். ஏனெனில், மகானந்த சுவாமியார் பட்டினி போட்டு உடலை வருத்தும் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல. நன்றாகச் சாப்பிட்டு, தேகாப்பியாசம் செய்து, திடசரீரம் பெற்றிருந்தால்தான் எந்த விதமான தொண்டும் சரியாகச் செய்யலாம் என்ற கொள்கையுடையவர். ஆகவே சாதாரண நிலைமையில், ''ஆமாம், முதலில் பிரசாதத்தைக் கவனிக்கலாம். இன்றைக்கு என்ன பிரசாதம்? சர்க்கரைப் பொங்கல், பஞ்சாமிர்தம் ஏதாவது உண்டா?'' என்று மருடபதி கேட்டிருப்பான். ஆனால் இப்போது சுவாமியார் சொல்ல ஆரம்பித்திருந்த விவரம் அவனுக்கு அசாத்தியமான ஆவலை உண்டாக்கியிருந்தது. அதுவும் பெண்களைப் பற்றிய அட்டூழியங்கள் என்று சுவாமியார் குறிப்பிட்டவுடன், மருடபதியின் உடம்பில் உள்ள இரத்தம் கொதிக்க ஆரம்பித்துத் தேகமெல்லாம் தகதகவென்று எரிந்தது. இந்த நிலையில் 'அவனுடைய மனம் பிரசாதத்தில் செல்ல முடியாதல்லவா?

''சுவாமி! பிரசாதமெல்லாம் இருக்கட்டும். எங்களுக்குப் பசியே யில்லை. ஆரம்பித்த விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றான்.

அதன் மேல் சுவாமியார் சொன்னதாவது:

''தேவகிரியை அடுத்துள்ள கிராமத்தில் தினம் சாயங்கால வேளையில் வயதானவர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்தி வருகிறேன். ஒரு மாதமாக நடக்கிறது. அந்தக் கிராமத்துக்குக் குறுக்கு வழி, தேவகிரி பங்களாவின் ஓரமாகப் போகிறது. தினமும் அந்த வழியாக ஒரு மாதமாகப் போய்க் கொண்டு வருகிறேன். பங்களாவுக்குச் சமீபமாக நான் போகும் போதெல்லாம் அதைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கும் விஷயங்கள் எல்லாம் ஞாபகத்துக்கு வந்து கொண்டிருந்தன. ஏழெட்டுத் தினங்களுக்கு முன்னால் ஒரு நாள் அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது ஒரு பெண்ணின் பரிதாபமான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனேன். ஆனாலும் நமக்கேன் இந்தத் தொல்லை என்று எண்ணியவனாய் மடத்துக்குத் திரும்பி வந்து விட்டேன். ஆனால் அன்று ராத்திரியெல்லாம் அந்தப் பெண்ணின் தீனமான அழுகுரல் என் காதில் கேட்டுக்



கொண்டேயிருந்தது; மனத்தை வேதனை செய்து கொண்டே யிருந்தது. இம் மாதிரி விவகாரங்களில் தலையிட்டால் நான் இங்கே எடுத்துக் கொண்டிருக்கும் தொண்டுகள் எல்லாம் தடைப்பட்டுவிடு மென்பதை நினைத்தும் 'பரதர்மோ பயாநக!' என்ற பகவத்கீதை வாக்கியத்தை நினைத்தும் மனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு என் வேலைகளில் கவனம் செலுத்தினேன். மறுநாள் அந்தப்பக்கம் போனபோது என்னை யறியாமலே அழுகுரல் இன்றைக்கும் கேட்கிறதா என்று செவிகள் கூர்மையாகக் கவனித்தன. ஒன்றும் கேட்கவில்லை. மனம் சற்று நிம்மதி யடைந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பங்களாவின் முன் தோட்டத்தில் ஒரு பெண் உலாவிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். மறுபடியும் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. இவள் இங்கே இஷ்டப்பட்டு வந்திருக்கிறாளா, பலாத்காரமாகக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்களா, என்ன நோக்கத்துடன் சிறைப்படுத்தி யிருக்கிறார்கள், முதல் நாள் ஏன் இவள் அழுதாள் என்றெல்லாம் மனத்திற்குள் கேள்விகள் எழுந்து கொண்டே யிருந்தன. இதையெல்லாம் யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது? கார்க்கோடக் கவுண்டர் அங்கே இல்லை. இருந்தாலும் அவரை எனக்கு முன்பின் தெரியாது. ரொம்பப் பொல்லாத மனுஷன் — அக்கிரமக்காரன் — என்று கேள்விப்பட்டிருந்தது தான்! மற்றப்படி, பங்களாத் தோட்டக்காரன் ஒருவன் காணப்பட்டான். அவனைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. யமகிங்கரனைப் போல இருந்தான். அவனிடம் எப்படி, என்ன கேட்பது? கேட்டால், நிச்சயமாக அவன் சண்டைக்கு வருவானே தவிர, சரியான பதில் சொல்லப் போவதில்லை....

இப்படியே இன்னும் இரண்டு நாள் போயிற்று. மூன்றாநாள் நான் அந்தப் பக்கமாகப் போன போது, பங்களாவுக்குள்ளிருந்து வந்த அலறும் குரல் மயிர்க்கூச்செறியச் செய்தது. 'ஐயோ! பாவி! சண்டாளா! பழி வாங்குகிறேன், பார்!' என்று இப்படி என்னவெல்லாமோ



பயங்கரக் கூக்குரல் அழுகையுடன் கலந்து கலந்து வந்தது. இதற்குப் பிறகு என்னால் சும்மா இருக்க முடியவில்லை. பங்களாத் தோட்டத்தின் வாசல் கேட்டுக்கு அருகில் சென்று தோட்டக்காரனைச் சமிக்ஞை செய்து கூப்பிட்டேன். நான் எதிர்பார்த்தது போலவே அவன் கண்களில் தீப்பொறி பறக்க வந்தான். 'என்ன?' என்று வள்ளென்று விழுந்தான். 'ஏனப்பா, இப்படிக் கோபிக்கிறே? யாரோ ஒரு பெண் அலறுதே, என்ன சமாசாரம் என்று கேட்கத்தான் வந்தேன். வைத்தியர் கியித்தியர் வேணுமானால் அனுப்புகிறேன்' என்றேன். தோட்டக்காரனும், சற்றுச் சாந்தமடைந்து, 'இதெல்லாம் உங்களுக்கு என்னாத்துக்கு, சாமி! உங்க வேலையைப் பார்த்துக்கிட்டுப் போங்க, சாமி! அப்படி ஏதாவது கேட்க வேணுமானா, நாளைக்குக் கவுண்டர் வராரு, அவரை வந்து கேட்டுக்குங்க!' என்றான். அவனிடம் மேலே பேசுவதில் பயனில்லை என்று என் வழியே போய் விட்டேன். மறுபடியும் அன்றிரவெல்லாம் என் மனம் அமைதி இல்லாமல் தவித்தது.

அடுத்த நாள் பிற்பகலில் நான் மடத்திலிருந்து கிராமத்துக்குக் கிளம்பிக் கொஞ்ச தூரம் போனதும் ஒரு பெரிய மோட்டார் எதிரே வந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அதில் நாலைந்து பேர் — பெரிய மனுஷர்கள்— இருப்பது தெரிந்தது. என்னருகில் வந்து, வண்டி மெதுவாகி நின்றபோது பெரும் வியப்பு உண்டாயிற்று. வண்டி ஓட்டியின் ஸ்தானத்தில் நின்றவர் என்னைப் பார்த்து 'சுவாமி! சௌக்கியமா?' என்று கேட்டார். அவர்தான் கார்க்கோடக் கவுண்டர் என்று என் மனத்துக்குத் தெரிந்து விட்டது. எந்தவிதமான கொலைபாதகத்துக்கும் அஞ்சாத மனுஷன் என்று முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. மனத்தில் தோன்றிய வெறுப்பைக் காட்டிக் கொள்ளாமல் 'சௌக்கியந்தான்' என்றேன். 'பங்களாவில் இருக்கும் குழந்தையைப் பற்றி விசாரித்தீர்களாம்' என்றார் கவுண்டர். அப்போது அவருடைய முகத்தில் விஷம் கக்கிய புன்னகை தாண்டவமாடியது.

ஏதோ சண்டைக்குத்தான் ஆரம்பிக்கிறார் என்ற எண்ணத்துடன், நானும் குரலைக் கடுமைப்படுத்திக் கொண்டு, 'ஆமாம், விசாரித்தேன்' என்றேன். 'ரொம்ப சந்தோஷம், சாமி! தங்களைப் போன்ற பரோபகாரிகள் — மகான்கள் இருப்பதனால்தான் இந்த நீலகிரி மலையிலே மழை பெய்கிறது; இல்லாவிட்டால் பெய்யுமா? பங்களாவிலே இருக்கிற பெண் குழந்தைக்குச் சித்தப் பிரமையா யிருக்கிறது — ஆறு மாதங்களாய். இப்போது ரொம்பக் கடுமை. குத்து, வெட்டு என்கிற நிலைமைக்கு வந்திருக்கிறது. இவர்கள் யார் தெரியுமோ, இல்லையோ? டிபுடி சூபரிண்டெண்டு சங்கநாதம் பிள்ளைவாள்; ஸப்-ஜட்ஜ் அய்யாசாமி முதலியார்வாள்; இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டு வந்து காட்டினேன். பட்டணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கோ, இல்லாவிட்டால் குற்றாலத்துக்கு அனுப்புங்கோ என்கிறார்கள். உங்களுக்கு என்ன தோன்றுகிறது, சுவாமி! அல்லது ஏதாவது மந்திரம், தந்திரம் வைத்திருக்கிறீர்களா? நீங்களே ஏதாவது செய்ய முடியுமா?' என்று கேட்டார். கடைசியில் கேட்டது கிருதக்காகச் சொன்ன வார்த்தை என்று தெரிந்து விட்டது. 'பைத்திய சிகிச்சையில் எனக்கு அவ்வளவாக அனுபோகமில்லை; மன்னிக்க வேண்டும்' என்று சொல்லி விட்டு நடந்தேன். மோட்டாரும் கிளம்பிச் சென்றது.

பள்ளிக்கூடத்துக்குப் போகும் போது என் மனம் சரியான நிலைமையில் இல்லை. நாலு பேர் முன்னிலையில் அவமானப்பட்டதனால் ஆத்திரமா யிருந்தது. அந்த மனுஷன் சொன்னது முழு நிஜம் இல்லை, ஏதோ பித்தலாட்டம் இருக்கிறது என்று தோன்றியது. அவர் சொன்னதெல்லாம் பொய்யாகத்தான் இருக்கும் என்றும், பாவம், யாரோ ஓர் ஏழைப் பெண்ணை இங்கே கொண்டு வந்து கொடுமைக்கு ஆளாக்கி விட்டு, பைத்தியம் என்று சொல்லி உலகத்தை ஏமாற்றப் பார்க்கிறார் என்றும் நினைத்தேன். இதெல்லாம் எவ்வளவு அநியாயமான எண்ணங்கள் என்பதையும், கார்க்கோடக் கவுண்டருக்கு நான் எவ்வளவு அநீதி செய்துவிட்டேன் என்பதையும் நினைக்கும்போது ரொம்பவும் வருத்தமா யிருக்கிறது. அவரைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் ஒழிய என் மனம் சாந்தி அடையாது...''

இதுவரையில் மிக்க ஆவலுடன் மௌனமாகக் கேட்டு வந்த மகுடபதி இங்கே குறுக்கிட்டு, ''ஐயையோ! என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? கள்ளிப்பட்டிக் கவுண்டரிடம் நீங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதா? எதற்காக? நீங்கள் நினைத்ததுதான், சுவாமி, உண்மை! அந்தக் கொலைபாதகக் கள்ளுக்கடைக் கண்டிராக்டர்....'' என்று உரத்த குரலில் பேசத் தொடங்கினான்.

''பொறு, தம்பி! பொறு! பாக்கிக் கதையையும் கேட்டுவிட்டல்லவா பேச



ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமியின் முந்நூறுவது ஆராதனை விழா புதுடில்லியில் வெகு விமரிசையாக நடந்தது. விழாவை ஜனாதிபதி வி. வி. கிரி ஆரம்பித்து வைத்தார். டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், டாக்டர் சரோஜினி மஹிஷி ஆகியோரைக் காணலாம்.

வேண்டும்? கார்க்கோடக் கவுண்டர் எவ்வளவோ பொல்லாத மனுஷராயிருக்கலாம். எத்தனையோ கொலை பாதகங்களைச் செய்திருக்கலாம். ஆனால், இந்த விஷயத்தில் அவர் கூறியது உண்மை என்று அரை மணி நேரத்துக்குள் தெரிந்து போயிற்று. மேற்படி பங்களாவை நான் நெருங்கியபோது, அந்தப் பெண் தோட்டத்தில் உலாவிக் கொண்டு நிற்பதைக் கண்டேன். வேலைக்காரனைக் காணவில்லை. கேட்டண்டை போய் அவளைக் கூப்பிட்டுப் பேசி, உண்மையை ''அறிந்து கொண்டாலென்ன என்ற எண்ணம் தோன்றியது. பங்களா தோட்டத்தின் ஓரமாய்க் கீழே போகும் பாதையில் போய்க் கொண்டிருந்த போது, தற்செயலாய் மேலே பார்த்தேன். வேலி ஓரத்தில் சேலைத் தலைப்பு தெரிந்தது. எதற்காக வேலி ஓரமாய் வந்து நிற்கிறாள் என்று நான் எண்ணி முடிவதற்குள், என் பின்னோடு வந்த பையன், 'சாமி! சாமி!' என்று கத்தினான். அதே சமயத்தில் தலையில் ஒரு கல் வந்து விழுந்தது. விழுந்த அதிர்ச்சியில் கண் இருண்டு மயக்கமாய் வந்தது. கீழே உட்கார்ந்து விட்டேன். இரத்தம் பெருகி வழிந்து துணியையெல்லாம் நனைத்தது. அப்போதே கபாலம் திறந்து மோட்சமடையாமல் இன்னும் இந்த உடலில் உயிர் இருப்பது கடவுளுடைய செயல்தான். பாவம்! அந்தப் பெண்ணுக்குப் பைத்தியந்தான் என்பது நிச்சயமாயிற்று. கவுண்டரைச் சந்தேகித்ததற்குத் தண்டனை கிடைத்தது!''

மகுடபதியின் ''ஆகாசக் கோட்டையெல்லாம் இவ்விதம் சிதைந்து போயிற்று. தொண்டை அடைக்க, நாத் தழுதழுக்க அவன், ''சுவாமி! உங்கள் மேல் வேண்டுமென்று அந்தப் பெண் கல்லை எறிந்தாளென்று சொல்கிறீர்கள்? என்னத்திற்காக?'' என்றான்.

''பைத்தியக்காரர்களின் செயலுக்குக் காரணம் இருக்குமோ? என் பின்னோடு 'லைட்' எடுத்துக்கொண்டு வந்த பையன் மேலே அண்ணாந்து பார்த்துக் கொண்டே வந்தானாம்! கல்லைக் குறி பார்த்து என் தலைக்கு நேரே எறிவதைக் கண்ணால் கண்டதாகச் சொல்கிறான். அவன் இப்போது கிராமத்துக்குப் போயிருக்கிறான். நேற்றுக் கிராமத்துக்குப் போகாமலே மடத்துக்குத் திரும்பி விட்டேன். தலைக் காயம் குணமாகும் வரையில் ஒரு வாரத்துக்குப் பள்ளிக்கூடம் கிடையாது என்று சொல்லி விட்டு வரும்படி அவனை அனுப்பியிருக்கிறேன்...அதோ அவனே வந்து விட்டான் போலிருக்கிறதே?'' என்றார். ஒரு சிறு பையன் மடத்து வாசற்படியண்டை வந்து கொண்டிருந்தான்.

''ஏண்டா, கிருஷ்ணா! அதற்குள்ளே எப்படித் திரும்பினாய்?'' என்று சுவாமியார் சிறிது வியப்புடனே கேட்டார்.

''நான் கிராமத்துக்குப் போகவில்லை, சாமி! வழியிலேயே திரும்பி விட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே கிருஷ்ணன் சுவாமியார் அருகில் வந்து, சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தான்.

''சாமி! எஸ்டேட் பங்களாவுக்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு செடியில் வெள்ளையாய்த் தெரிந்தது. கிட்டப் போய்ப் பார்த்தேன். இந்தக் கடிதம் கிடந்தது. வாசித்துப் பார்த்ததும் முக்கியமான விஷயம் என்று எண்ணி, கிராமத்துக்குப் போகாமலே திரும்பிவிட்டேன்'' என்று சொல்லிக் கடிதத்தையும் சுவாமியார் கையில் கொடுத்தான்.

சுவாமியார் கடிதத்தைப் படித்த போது, அளவுகடந்த ஆச்சரியத்தினால் அவருடைய புருவங்கள் நெரிந்து உயர்ந்தன.


(தொடரும்)

எந்தக் காரணத்தால் உங்களுக்குத் தலைவலி வந்தாலும், அதைப் போக்க ஒரே ஒரு ஸாரிடான் போதும்!

தலைவலி பலவிதம். எந்தக் காரணத்தால் உங்களுக்குத் தலைவலி வந்தாலும், அதை விரைவில் போக்க ஒரே ஒரு ஸாரிடான் சாப்பிட்டால் போதும். ஸாரிடானில் சேர்க்கப் பட்டுள்ள கலவைப் பொருள்கள் தலைவலி, உடல்வலி மற்றும் பல்வலியுடன் கூடவே அனுபவமாகும் சோர்வையும் போக்குகின்றன; மற்றும் இதமளித்து புத்துணர்ச்சியும் ஊட்டுகின்றன. அதுவே ஸாரிடானின் தனிச் சிறப்பு!

ஸாரிடான்

'ரோஷ்'



'ரோஷ்' தயாரிப்பு

வாழ்க்கைத் தரம்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள்


மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக அரசாங்கத்தார் அநேக திட்டங்களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாட்டிலும் தரித்திரம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது. 'ஒருவன் இரண்டு வேளை காப்பி சாப்பிடுவது நான்கு வேளையாக உயர வேண்டும்; இரண்டு வேஷ்டி வைத்துக் கொண்டிருப்பவன் இருபது வேஷ்டி வைத்துக் கொள்ள வேண்டும்; இதுவே வாழ்க்கைத் தர உயர்வு' என்கிற அபிப்பிராயம் வளர்ந்தால் அது பெரிய தப்பு. வாழ்க்கைத் தரம் உயர்வது என்று சொல்லிக் கொண்டு வாழ்க்கைத் தேவைகள் நாளுக்கு நாள் மனுஷ்யர்களுக்கு அதிகமாகிக் கொண்டே போனால் நாட்டில் தரித்திரம்தான் மிஞ்சும்.




மனுஷ்யர்களுக்கு மானம், உயிர் இரண்டையும் காப்பாற்றிக் கொள்ள மிக மிக அத்தியாவசியமானவை எவையோ அவை நாட்டில் உள்ள அத்தனை ஜனங்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்குத்தான் திட்டம், ஒழுங்கு எல்லாம் வேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட வேண்டுமானால் வசதி உள்ளவர்கள் கூட நாட்டில் இருக்கும்படியான பரம ஏழை எப்படி வசிக்கிறானோ அப்படி வசிக்கப் பிரயத்தனம் பண்ண வேண்டும். அவன் குடிசையில் இருந்தால் இவனும் குடிசையில் இருப்பது, அவன் கஞ்சி குடித்தால் இவனும் கஞ்சி குடிப்பது என்று சௌகர்யம் இருக்கிறவர்களும் கூடத் தங்களிடம் பணம் இருக்கிறது என்று தேவைக்கு மேல் அதிகமான வசதிகளையெல்லாம் பெருக்கிக் கொள்ள முயலாமல் இருக்க வேண்டும். வசதி இருக்கிறது என்று இவர்கள் பண்ணுகிற காரியங்களெல்லாம் அபரிக்ரஹம் என்ற பெரிய தருமத்துக்கு விரோதம்தான். இந்த தோஷம் வந்துவிட்டால் ஈசுவரானுக்கிரஹம் கிடைக்காது! மனுஷ்ய ஜன்மா பிரயோஜனம் உள்ளதாக ஆக வேண்டுமானால் நமக்கு எவ்வளவு தேவையோ அதற்கு மேல் ஓர் இம்மிகூட விரும்பக் கூடாது. இதுவே அபரிக்ரஹம். வசதி இருக்கிறது என்றால் அதைக் கொண்டு கஷ்டப்படுகின்ற இதர குடும்பங்களுக்கு — அந்தக் குறைச்சலான வசதியைக் கூடப் பெற முடியாதவர்களுக்கு — உதவி செய்வதுதான் புண்ணியம். அதுதான் இவனுக்கு மோக்ஷத்தை அளிக்கும்.

இது தெரியாமல் வசதி இருக்கிறவர்கள் தேவைக்கு மேல் பட்டுப் புடவை, ஸில்க் ஷர்ட் என்று தோஷத்தை அதிகமாக இப்போது வளர்த்துக் கொண்டிருப்பது ஒரு பக்கம். அதே சமயம் இவர்களைப் பார்த்து வசதி இல்லாதவர்களும் கூடக் கடன் வாங்கியாவது அவைகளை வாங்க வேண்டும் என்று கடனாளியாகி அநேக உபத்திரவங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். ஐம்பது, நூறு வருஷங்களுக்கு முன்னால் யாரும் காப்பி சாப்பிட்டது இல்லை. குடிசையில்தான் இருந்தார்கள். ஸ்திரீகள் காதில் பனை ஓலைதான் போட்டுக் கொண்டிருந்தார்கள். கேழ்வரகுக் கூழோ, கஞ்சியோதான் சாப்பிட்டார்கள். ஏழைகளோ, பணக்காரர்களோ எல்லோரும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகத்தான் இருந்தனர். நாம் பட்டுத் துணி உடுப்பது இல்லை, காப்பி குடிப்பது இல்லை என்று சங்கல்பம் செய்து கொண்டு விட்டால் இப்போது ஒரு குடும்பத்துக்குச் செலவாகிற பணத்தைக் கொண்டு ஐந்து குடும்பங்கள் வாழ முடியும்.

தேவையை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுத்திக் கொள்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு சாந்தி ஏற்படாது; சௌக்கியம் ஏற்படாது. தரித்திரம், துக்கம் உண்டாகும். Standard of living என்பதை 'வாழ்க்கைத் தரம்' என்று மொழிபெயர்ப்பதே சரியல்ல. 'வாழ்க்கைத் தரம்' என்பது மிகவும் உயர்ந்த விஷயம். நல்ல குணங்களுடன், ஈசுவர பக்தியுடன் வாழ்கிற வாழ்வே 'தரமான' வாழ்வு. வாழ்க்கைத் தரத்தை Quality of life என்று சொல்ல வேண்டும். தற்போது பொருளாதாரத் தேவைகளை அதிகமாக்கிக் கொண்டே போவதைத்தான் 'வாழ்க்கைத் தரம்' என்கிறார்கள். இதைவிட ஆத்மிகத்தில் உயர்ந்து, வாஸ்தவமாகவே வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதைத்தான் பெரிதாக எண்ண வேண்டும்.


இப்போது
புதிய
தோற்றத்தில்!
Swastik
PERFUMED
CASTOR OIL
ஸ்வஸ்திக்
பெர்ஃப்யூம்டு
கேஸ்டர் ஆயில்
பரட்டையான படியாத
கேசத்தையும் பணிடவைக்கும்
நாள் முழுதும் கேசத்தை
எடுப்பாக எழிலோங்கச்
செய்யும்.
பட்டுப்போன்ற படியும் கேசம்...
ஒளிசிந்தும் எழிலோங்கும் கேசம்...
ஆரோக்கிய நறுமணம் வீசும் கேசம்...
நாள் முழுதும் எடுப்பாக விளங்கச்
செய்கிறது ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்டு
கேஸ்டர் ஆயில்.
ஸ்வஸ்திக் ஆயில்
மில்ஸ், பம்பாய்.
Shilpi SOM 17/69 TAM



சென்ட்ரல்

பி.வி.ஆர்

வெயிட்டிங் ரூம் ஃபார் அப்பர் கிளாஸ் பாஸஞ்சர்ஸ்.
- அறையின் பெயர்ப் பலகை.

பிரயாணிகளைத் தவிர, மற்ற எவரும் இந்த அறையில் தங்கவோ, பெயி அறைகளை உபயோகிக்கவோ கூடாது.
- இதுவரையில் எங்கேயும் ஒட்டப்படாத அறிக்கை.


அத்தியாயம் 5

எந்த முத்துவுக்காக மணி கேதாரத்தின் நாற்பத்தி நாலு ரூபாய் அறுபத்தி மூன்று பைசாவை விரல்களால் விளையாடி எடுத்தானோ, அந்த முத்து இப்போது முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கான வெயிட்டிங் ரூமில், கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தான். குளித்தவுடன் நெற்றியில் பென்சில் கீற்றாக இட்ட விபூதி இப்போது உலர்ந்து பளிச்சென்று பிரகாசித்தது. ஜவ்வாது விபூதி என்று நண்பன் ஒருவன் பழநியிலிருந்து வரும்போது வாங்கிக் கொடுத்திருந்தான். இப்போது ஜவ்வாதின் மணம் அவன் நெற்றியிலிருந்து நாசிக்கு எட்டவில்லை. இது ஒரு வகையில் ஏமாற்றத்தை அளிக்கத்தான் செய்தது. இருப்பினும், விபூதியை முகர்ந்து பார்க்கையில் ஜவ்வாது மணம் கண்டிப்பாக வீசுகிறது என்ற திருப்தி இருந்தது.

முன் கதை

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் எத்தனையோ ரயில்கள் வருகின்றன, போகின்றன: எத்தனையோ பேர்வழிகள் வருகிறார்கள், போகிறார்கள். ஆனால் அவர்களது உணர்ச்சிகளையும் நிகழ்ச்சிகளையும் போராட்டங்களையும் அனுபவிக்க முதலில் பெரும் குடும்பியான ஸ்டேஷன் சூப்பரிண்டெண்ட் கணபதியைச் சந்திக்கிறோம். அவரது பதினொரு குழந்தைகளில் என்கொயரி கிளார்க் மங்களா பெண்களில் மூத்தவள். தோழி ரேணுகா பம்பாயிலிருந்து வருகிறாள் என்று வரவேற்கப் போகும்போது மங்களா கேதாரத்தைச் சந்திக்கிறாள். அவள் நினைவிலே நடக்கும் கேதாரம் 'மணிபர்ஸை' பிக்பாக்கெட் மணியிடம் பறி கொடுக்கிறான். அபாய நிலையிலிருக்கும் அம்மாவைக் காணச் செல்லும் முத்துவுக்காக மணி அதைத் தேட்டை போடுகிறான். ரிடையரிங் ரூமில் வந்து தங்கி, போர்ட்டருக்குப் பணம் கொடுக்கப் பர்ஸைத் தேடும்போது கேதாரம் 'ஷாக்' அடைகிறான். இந்தச் சமயத்தில் ரேணுகா மங்களாவுக்குக் கொடுத்த சாக்கலேட்டைப் பெற வரும் அவள் தம்பியிடம் எரிச்சல் பற்றிக் கொண்டு வருகிறது கேதாரத்துக்கு. அவனது மாமா வேறு கேதாரத்துக்குப் பெண் பார்க்கும் படலத்துக்கு ஒத்திகை நடத்துகிறார். கேதாரத்தின் பேச்சில் மங்களாவைப் பற்றிய பிரஸ்தாபம் அவன் மாமாவுக்குச் சந்தேகத்தைக் கிளப்புகிறது....

விபூதியை மறந்து அவன் தலையை அழுத்தி வாரினான். பின்புறம் படியாமல் கொத்தாகத் தூக்கி நின்றது. விரல்களால் அந்தக் கொத்தைத் துழாவி விட்டு மீண்டும் சீப்பால் இலேசாக வாரினான். இப்போது அவனுடைய கிராப்பு அவனுடைய கண்களுக்கே ரம்யமாக இருந்தது. அவனுடைய ஐசுவரியமெல்லாம் இந்தக் கிராப்புத் தான். டைப்பிஸ்ட் தொழிலில் கிடைக்கிற நூற்று எழுபது ரூபாயில் நான்கு ரூபாய் முடி அலங்காரத்துக்கே ஓடியது. முத்து இதை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. அவன் என்ன, எத்தனையோ பேர்களைப் போல வாரத்துக்கு இரண்டு சினிமாக்களா பார்க்கிறான்?



தலை வாரிய பின், குளிக்க வரும் போதே கூட எடுத்துக் கொண்டு வந்திருந்த பாண்ட்டையும் ஸ்லாக்கையும் அணிந்துகொண்டான். அவிழ்த்த வேட்டியை அழகாக மடித்து வட்ட வடிவமான மேஜையின் மேல் வைத்தான். மின்சார விசிறியைச் சுழல விட்டான். நாற்காலியில் உட்கார்ந்து 'ஹிந்து' பத்திரிகையைப் பிரித்துப் படிக்கலானான். அந்தச் சமயத்தில் அறையில் நான் கைந்து பேர் சாமான்களைக் கட்டுவதிலும், கட்டிய சாமான்களை அவிழ்ப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். முத்துவும் தங்களைப் போல ஒரு பிரயாணி, எப்போதோ புறப்பட இருக்கிற ரயிலுக்காக இந்த அறையில் காத்துக் கொண்டிருக்கிறவன் என்றுதான் அவர்கள் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். — அதுவும் அவனைப் பற்றிய சிந்தனை எழுந்திருந்தால்.

ஆனால் முத்து எந்த ரயிலுக்காகவும் காத்திருப்பவனல்ல. ஒரு வருஷத்துக்கு முன்னால், சுவாமிமலையிலிருந்து சென்னை எழும்பூருக்கு வந்தவன். தம்புச்செட்டி தெருவில் ஊரில் பெரிய மனிதரான ஒருவருடைய சிபாரிசில் அவருடைய சம்பந்தி நடத்தி வரும் மின்சாரச் சாமான்கள் விற்கும் கடையில் டைப்பிஸ்ட் வேலை கிடைத்தது. தலைமுறை தலைமுறையாகச் சுகபோகத்துடன் வாழ்ந்து அழிந்த குடும்பம் அவனுடைய குடும்பம். கொள்ளுத் தாத்தா தாத்தாவுக்கு நூறு வேலி வைத்து விட்டுப் போனார். தாத்தா அப்பாவுக்கு இருபது வேலி வைத்தார். அப்பா போவதற்கு முன் பிள்ளைக்குப் பொறுப்பை வைக்காமல் தாமே மஞ்சள் காகிதத்தைக் கொடுத்தார். யாரும் எந்த வேலைக்கும் போகாமல், தாம் தூம் என்று செலவு செய்து கொண்டு நூறு வேலி நிலத்தை மூன்று தலைமுறைகளுக்குள் தீர்த்துக் கட்டினார்கள். இப்பேர்ப்பட்ட பரம்பரையின் அவதாரமான முத்து இன்று நூற்றி எழுபது ரூபாய் சம்பளத்தில் டைப்பிஸ்டு உத்தியோகம் பார்க்கிறான். ஜாகை திருவல்லிக்கேணியில் சிங்கராச்சாரி தெருவில். நரசிம்மாசாரி என்பவருடைய வீட்டில் ஓர் அறை இருந்தது. அதுவும் மாடியில். வாடகை பதினைந்து ரூபாய். ஆறடி நீளம், மூன்



றரை அடி அகலம். வடக்குப் புறத்தில் ஒரு சிறு ஜன்னல். தெற்குப் புறக் கதவு வழியாக எங்கே காற்று வந்துவிடுமோ என்று ஒரு சுவர் எழுப்பி யிருந்தார் வீட்டுக்காரர். நான்கு அடி உயரக் கதவு வழியாக முத்து உள்ளே போனான் என்றால் குளிர் காலத்திலேயே உடம்பு வியர்வையில் குளிக்கும்.

இந்தக் கூத்தில் நரசிம்மாசாரி கீழ்க் கண்ட நிபந்தனைகளை ஒரு காகிதத்தில் எழுதி அவனிடம் கொடுத்துப் பதிலுக்கு ஒப்புதலையும் கையெழுத்துடன் கேட்டார்.

(1) காலை ஆறே கால் மணிக்குள் காலைக் கடன்களை முடித்துக்கொள்ளக் கீழே கிணற்றடிக்கு வந்துவிட வேண்டும். இருபது நிமிடங்களில் திரும்ப அறைக்குப் போய்விட வேண்டும்.

(2) ஈரத் துணிகளைக் கிணற்றுக்குப் பக்கத்திலோ, மொட்டை மாடியிலோ (நான்கு அடிச் சதுரம்) உலர வைக்கக் கூடாது.

(3) இரவு எட்டு மணிக்கு முன்பாகவே அறைக்குத் திரும்பி விட வேண்டும்.

(4) திண்ணையிலோ ரேழியிலோ சிநேகிதர்களுடன் அரட்டை அடிக்கக் கூடாது.

(5) சினிமாப் பாட்டுப்பாடக்கூடாது.

(6) வீட்டு ஸ்திரீகளுடன் பேச்சு கொடுக்கக் கூடாது.

(7) வீட்டுத் தினசரிகளையும் பத்திரிகைகளையும் இரவல் கேட்கக் கூடாது.

(8) அறையைப் பூட்டக் கூடாது. பூட்டினால் சாவியை வீட்டாரிடம் கொடுக்க வேண்டும்.

வாடகை பதினைந்து ரூபாய் என்ற ஒரே காரணத்துக்காக நரசிம்மாசாரியின் இந்த எட்டு கட்டளைகளையும் முத்து சிரசின்மேல் தாங்கி நடந்து வந்தான். அவருடைய அக்கா பெண் குமுதாவுடைய கண்கள் அவனுடைய கண்களைச் சந்தித்தபோதும், ஆறாவது நிபந்தனையை மனத்தில் நினைத்துக்கொண்டு தலை குனிந்து, தன் கிராப்புத் தலையைக் காட்டிவிட்டுப் போனான்.

ஆனால் ஒரு நாள் மத்தியானம் அன்று கோயமுத்தூருக்கு அம்மாவைப் பார்க்கப் போக வேண்டிய காரணத்தால் சீக்கிரமே வீடு திரும்பிய முத்து அறைக்குள் நுழைந்ததும் தேளை மிதித்தவன் போலத் திடுக்கிட்டான்.

குமுதா அழகாக அவனுடைய அறையில் படுத்து, கோதைநாயகி அம்மாள் நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள். முத்துவைக் கண்டதும் அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கவில்லை. புத்தகத்தை மார்பின் மேல் வைத்துக் கொண்டு அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள்.

முத்துவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அறை வாயிலிலேயே ஒரு நிமிடம் நின்றான். புத்தகம் மார்பின் விம்மலில் மேலும் கீழுமாக ஊஞ்சலாடியது. அவளுடைய மதமதப்பான உடல் கட்டும், சிரித்து அழைக்கும் கண்களும், பூரிக்கும் கன்னங்களும் அவனுடைய உடம்பை எரித்தன.

''நான் தினமும் மத்தியானம் இந்த அறையிலேதான் படுத்துண்டு புத்தகம் வாசிக்கிறேன்.''

நரசிம்மாசாரியின் ஆறாவது நிபந்தனை மனத்தில் எழுந்து முகத்தில் அறைந்தது. அவன் மௌனமாகப் பார்த்தான்.

''மாமா, மாமி அம்மா எல்லோரும் மதுராந்தகம் போயிருக்கா.. யாரோ

செத்துப் போய் விட்டார்களாம்.... பாட்டி கீழே தாழ்வாரத்தில் இருக்கிருள். பாவம், அவளுக்குக் கண்ணும் தெரியாது. காதும் சரியாகக் கேட்காது.''

குமுதா சிரித்தாள்.

நிபந்தனையை மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது முத்துவுக்கு.

''நீ வெளியே வந்தால்தான், நான் உள்ளே வரலாம்.''

''நான் ஒதுங்கிக் கொள்கிறேன். உனக்கு வர இடமிருக்கு.''

''வெளியே வர்றியா?''

''வரணும் என்கிருயா?''

''ஆமாம். மாமாவின் நிபந்தனை, நான் உன்னுேடோ அல்லது புடவை கட்டிய யாருடனுமோ பேசக் கூடாது.''

''என் மாமா ஒரு பைத்தியம். பழங் காலப் பஞ்சாங்கம். அந்தக் காலம்.''

''ஆனல் நான் அதற்குக் கட்டுப் பட்டிருக்கேன்.''

''நான் இப்ப வரலேன்னு நீ என்ன செய்வே?''

''ஒண்ணும் செய்யமாட்டேன். நான் இறங்கித்தெருவுக்குப்போய்விடுவேன்.''

குமுதா முகம் சிணுங்கினுள்.

''நீ இந்தக் காலத்துப் பிள்ளேன்னு நான் எடை போட்டேன்.''

''மனுஷனுடைய உண்மையான குணமும், அவன் கடைப் பிடிக்கவேண்டிய தர்மமும் காலத்தினுலே மாற முடியாது. தேவ குணமும் அசுர குணமும் மனுஷாள்கிட்டே எப்போதுமே, எந்தக் காலத்திலுமே உண்டு. நீ இப்போ எழுந்திருந்து வா.''

''எனக்கு இப்போ வயசு இருபத்திரண்டு. மேஜர்.''

''இதை அம்மாவிடம் சொல்லு.''

''இப்போ நான் 'ஐயோ'ன்னு கத்தினல், தெருவிலே கூட்டம் சேர்ந்து விடும். உன்னைத்தான் எல்லாரும் மொத்துவார்கள்.'' குமுதா எக்காளத்துடன் சிரித்தாள்.

நிலைமையின் பயங்கரத்தைத் திடீரென்று உணர்ந்தான் முத்து. குமுதா சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை. எந்த சமூகத்திலும் பெண்ணின் வார்த்தைக்கு எதிராக ஆணின் வார்த்தை செல்லாது. நிச்சயமாகக் கல்லடி படுகிறவன் அவன் தான்.

மின்னலாக ஓர் எண்ணம் அவனுள் தோன்றியது. அப்படித் தோன்றியதற்கு அவன் தன்னையே போற்றிக் கொண்டான்.

''குமுதா, ஒரு முக்கியமான விஷயத்தை நீ மறந்து விட்டே... நானும் நீயும் பழகுவதற்கு இந்த வீடோ, அறையோ லாயக்கில்லே. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் எல்லாருக்கும் தெரிந்துவிடும். எனக்கு உன்னைப் பிடிக்கலேயோன்னு நீ சந்தேகப்படறது எனக்குப் புரிகிறது. ஆனல் நான் என்னையே அடக்கி வைச்சுண்டிருக்கேன்னு எனக்குத்தான் தெரியும்.''

''நீ என்ன சொல்றே?''

''ஆனல் நான் அவசரப்பட்டு எதையும் செய்ய மாட்டேன். கொஞ்சம் பொறு. இன்னிக்கு வெள்ளிக்கிழமை. கோயமுத்தூர் போறேன். திங்கட்கிழமை திரும்பி வருவேன். அன்னிக்கு மத்தியானம் சாந்தி தியேட்டருக்கு முன்னுலே நில்லு. நம்ப சிநேகிதத்தை இந்தத் திருவல்லிக்கேணியிலே, இந்த வீட்டிலே வைத்துக் கொள்ளக் கூடாது. உனக்குப் புரிகிறதா ?''

''புரியறது. நிச்சயமா திங்கட்கிழமையன்னிக்குச் சாந்தி தியேட்டருக்கு முன்னுடி என்னைச் சந்திப்பாயா?''

''சத்தியமா !''

''எனக்கு பீச்மெல்பா ரொம்பப் பிடிக்கும். நான் தின்னதேயில்லே.''

''புஹாரியில் வாங்கித் தரேன்.''

''டூட்டி ஃப்ரூட்டி ?''

''அதுவும் வாங்கித் தரேன்.''

''பாப்கார்ன்.''

''அவசியம் வாங்கித் தரேன் !''

குமுதா திடீரென்று எழுந்தாள், அவன் எதிரே வந்து நின்ருள். முத்து நகர்ந்து கொண்டான்.

''என் கையாலே ஒரு கப் காப்பி கலந்து தரட்டுமா ?''

''ஊஹூம்... வேண்டாம். நான் இப்போதே புறப்படுகிறேன்.''

''இப்போது ஏது ரயில் ?''

''கேரளா எக்ஸ்பிரஸ். நாலரை மணிக்குப் புறப்படறது.''

''நான் இங்கேயே உனக்கு 'டாட்டா' சொல்றேன்.''

''சரி.''


''டாட்டா.''

''டாட்டா.''

ஒரு நீண்ட பெருமூச்சுடன் ஓரிரு நிமிஷங்கள் குமுதா வெளியேறிச் செல்லுவதையே பார்த்து நின்ற முத்து, அவள் தலை மறைந்ததும், அவசரம் அவசரமாகத் துணிகளை அள்ளிப் பெட்டியில் போட்டான். சோப்பு, சீப்பு, கண்ணுடி இவற்றையெல்லாம் கைக்கு வந்தபடி எடுத்து வைத்தான். ஜமுக்காளத்தில் அழுக்குத் துணியை விரித்து, தலையணை போர்வை எல்லாவற்றையும் வைத்துக் கட்டினுன்.

பத்தாவது நிமிஷம் அவன் சிங்காராச்சாரி தெருவில் ஒரு ரிக்ஷாவில் ஏறினுன். நீலகிரி எக்ஸ்பிரஸில் போக இருந்தவனை, குமுதா கேரளா எக்ஸ்பிரஸிலேயே ஏற்றி அனுப்பி வைத்து விட்டாள்!

திங்கட்கிழமை திரும்பி வந்த அவனுக்கு, மீண்டும் நரசிம்மாச்சாரி வீட்









கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்

கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்; உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றிவிடுகிறது. இத்தகைய நிரூபணத்தைப் பெற்றிருப்பது கால்கேட் மட்டுமே! அதன் வியத்தகு பெப்பர்மின்ட் சுவையோடுதான்— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!





தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே... உலகில் அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்

DC G.41 TM

டுக்குச் செல்லப் பைத்தியம் பிடிக்க வில்லை. குமுதா ஓர் இரண்டுங்கெட்டான் என்ற விஷயம் தெரிந்தவுடனேயே, அவளால் தனக்கு என்றைக்குமே ஆபத்து என்று உள்ளுணர்வு உணர்த்தியது.

சென்ட்ரல் ஸ்டேஷனில் காலை ஏழே முக்காலுக்கு இறங்கிய அவனுக்கு எங்கே போவது என்று புரியவில்லை. ஒன்பதரை மணிக்குக் காரியாலயத்தில் இருந்தாக வேண்டும். அதற்குமுன் ஓர் இடத்தில் புகுந்து கொள்ள வேண்டும்; குளிக்க வேண்டும். தலையை வாரி டிரஸ் செய்து கொள்ளவேண்டும்.

திடீரென்று மின்னலாக முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறை நினைவுக்கு வந்தது. அடுத்த நிமிஷம் பெட்டியையும் படுக்கையையும் தூக்கிக் கொண்டு அந்த அறையை நோக்கி நடந்தான். ஜமுக்காளத்தின் நைந்து போன ஓரங்களும், மங்கிப் போன பச்சைப் பெட்டியின் தகரமும் தன்னை மூன்றும் வகுப்புப் பயணி எனக் காட்டிக் கொடுத்து விடுமோ என்ற பயம் ஒரு கணம் எழத்தான் செய்தது. ஆனால், தைரியம் ஒன்றுதான் தேவை என்று அவனே முடிவு செய்து கொண்டான்.

பத்துப் பன்னிரண்டு நாற்காலிகளில் ஏழெட்டு காலியாக இருந்தன. ஒரு நீண்ட பெஞ்சின் மேல் பெட்டி படுக்கையை வைத்துவிட்டு, மின்சார விசிறியை ஓடவிட்ட முத்து, நாலைந்து நாற்காலிகளில் சிதறி உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்தான். ஒரே பிரயாணியின் அருகில்தான் நிறைய பெட்டிகளும் கூடைகளும் இருந்தன. அவருடைய குடும்பத் தலைவி, எட்டு வயதுப் பெண்ணுக்குக் கீழே உட்கார்ந்து தலை வாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். குடும்பத் தலைவர் மும்முரமாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

இன்னொரு நாற்காலியில் ஒரு நீல பாண்ட்டும் காக்கி ஷர்ட்டுமாக ஒருவன் உட்கார்ந்து, டயரி மாதிரி ஒரு புத்தகத்தில் குறிப்புகள் எழுதிக் கொண்டிருந்தான். ரயில்வே சிப்பந்தி என்று முத்துவின் வாய் முணுமுணுத்தது.

மூன்றுவது சாய்வு நாற்காலி. அதில் ஒரு பெரியவர் பேப்பரால் முகத்தை மறைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். நாலாவது நாற்காலியில் இருந்த இளைஞன், நிமிடத்துக்கொரு தடவை, இடது கையால் மீசையைத் தடவி விட்டுக் கொண்டு, வலது கையால் சிகரெட் புகைத்து, கண்களால் நாவல் ஒன்றை விழுங்கியவனாய் உட்கார்ந்திருந்தான்.

''யார் நம்மை என்ன கேட்டுவிடப் போகிறார்கள் ?''

திடீரென்று முத்துவுக்கு ஒரு தைரியம் பிறந்தது. பெட்டியைத் திறந்து, சோப்பையும் துண்டையும் எடுத்தான். ஆறேகால் ரூபாயைத் தாங்கிக் கொண்டிருந்த மணிபர்ஸைப் பாக்கெட்டிலிருந்து எடுத்துத் துண்டுடன் வைத்துக் கொண்டான்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு, முத்து ஆபீஸ் உடையில் காட்சி அளித்தான்.

அடுத்த கேள்வி எழுந்தது. ஆபீஸுக்குப் போகத் தயார். ஆனால் இந்தப் பெட்டியையும் படுக்கையையும் எங்கே கொண்டு வைப்பது ?

மும்முரமாக எழுதிக் கொண்டிருந்த குடும்பத் தலைவர் இப்போது நிமிர்ந்து பார்த்தார். முத்துவுக்கு யோசனை ஒன்று பிறந்தது. இவர் எந்த ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் ?

''உங்களுக்குச் சிரமம் கொடுக்கிறதற்கு மன்னிக்கணும்....!'' என்று ஆரம்பித்தான் முத்து.

'' என்ன ?''

''நீங்க எந்த ரயிலைப் பிடிக்கணும் ?''

''மெயில். பாம்பே மெயில். என் ஏஜண்டுகிட்டே முட்டிக் கொண்டேன், எக்ஸ்பிரஸில் 'புக்' பண்ணுடான்னு. பத்து நிமிஷம் தாமதம் பண்ணியிருக்கான். முட்டாள் ! ஏர்கண்டிஷன் கூடக் கிடைக்கலே. மெயில்லேதான் மூணு பர்த் கிடைச்சுது என்கிறான். அதுவும் எப்போ சொல்கிறான்? நான் இன்னிக்குக் கார்த்தாலே பெங்களூர் மெயிலிலே வந்து இறங்கினப்புறம்.... இப்போ இந்தக் குப்பைகூளத்துக்கு மத்தியிலே காத்திருக்க வேண்டியிருக்கு. பாம்பே மெயில் இராத்திரி ஒன்பது மணிக்கு மேலேதான் கிளம்பறது.''

''ச்சு! ரொம்ப நேரம் நீங்க காத்துண்டிருக்க வேண்டியிருக்குமே!'' முத்து குழைந்தான்.

''என்ன பண்ணறது? பிளேன்லே போகலாம்னு, இவள் ஏகப்பட்ட சாமான்களுடன் பிராணனை வாங்குகிறாள். இந்தக் கூடையெல்லாம் வெறும் வடாம், கறுவடாம், அப்பளாம்..... டர்ட்டி லக்கேஜ்.''

''சாப்பாட்டுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணி விட்டீர்களா? பாவம் உங்க பெண்ணுக்குச் சீக்கிரம் பசிக்குமே?''

''எல்லாம் ஏற்பாடாகி விட்டது.... தாங்க் யூ....''

''உங்களுக்கு ஏதாவது வேணும்னு எங்கிட்டே சொல்லுங்கோ !''

''ஓ, தாங்க்ஸ்...நீங்ககூட என்னோடு விரும்பினால் சாப்பிடலாம்.''

''தாங்க்யூ சார்.... எனக்கு வில்லிவாக்கத்துக்குப் போகணும். அங்கே எங்க ட.ாமா வீடு இருக்கு. அங்கே ஒரு

சின்ன விசேஷம். சாப்பிடப் போகிறேன்.''

''ரொம்ப சரி. ஜமாயுங்கோ !''

'' போய் மத்தியானம் வந்துவிடுவேன், ஸார் !''

''கோ அஹெட், மை பாய்!''

'' ஒரு சின்ன உதவி !''

'' என்ன ?'' குடும்பத் தலைவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

'' பெட்டி படுக்கையை எடுத்துக் கொண்டு போறதானல் அநாவசியமாக டாக்ஸிச் செலவு ஆகும்.''

''நான் பிறத்தியார் அநாவசியமாச் செலவு செய்யறதை விரும்பலே!''

'' இங்கேயே வைத்து விட்டுப் போகிறேன் சார். கொஞ்சம் கவனித்துக் கொண்டால் போதும்.''

''ஓகே, ஓகே.... எங்க சாமான்களுக்குப் பக்கத்திலே ஓர் ஓரமா வை..... சியாமளா, பாரு, இவருடைய பெட்டி படுக்கை நம்ப சாமான்களோடு இருக்கட்டும். நீலு, இந்த மாமாவோட பெட்டி படுக்கை. என்ன ?''

* * *

காலை ஒன்பது மணிக்குச் சென்ற முத்து மாலை ஐந்து மணிக்குத் திரும்பிய போது, அவனுடைய நெஞ்சு திக்கென்றது. குடும்பத் தலைவர், சியாமளா, நீலு அவர்களுடைய சாமான்கள் எதையும் காணும். ஆனல் அடுத்த கணமே நெஞ்சில் பால் வார்த்தாற்போல் உணர்ச்சிகள் பீறிட்டன. அவனுடைய பெட்டியும் படுக்கையும் சீண்டப்படாமல் அங்கேயே கிடந்தன.

அவன் தனது பெட்டியை நெருங்கிய போது, ஒருவன் குறுக்கிட்டான்.

''யார் சாமி, நீ ?''

''ஏம்பா.....''

''இது யார் பெட்டின்னு தெரியுமா?''

''ஏம்பா, என் பெட்டியை எனக்கே தெரியாதா ?''

'' அதெல்லாம் தெரியாது, சாமி. நீ இப்போ எங்கேயிருந்து வர்றே ?''

''எதுக்குக் கேட்கிறே ?''

''நீ கேள்வி கேட்காதே, சாமி. ஒரு பெரிய மனுஷர், கையிலே ஒரு ரூபாய் கொடுத்து, டேய், ஒருவர் சின்னவரா இருப்பாரு. வருவாரு. எனக்கு எக்ஸ்பிரஸிலே ஏ. ஸி. டிக்கட் கிடைக்கக் கிளம்பிட்டேன்னு சொல்லிப் பெட்டி படுக்கையை அவருகிட்டே ஒப்படைச்சுடுன்னரு. நான் கண்ணியமா நடந்துக்கிடவேணுமா ?''

முத்துவுக்குப் பளிச்சென்று யோசனை உதித்தது. அவனுடைய பெயர் தெரியாத பெரியவர், ஒரே ஒரு அடையாளம்தான் கொடுத்திருக்கிருர். அது தான், இவன் அவனிடம் 'எங்கேயிருந்து வர்றே' என்று கேட்டிருக்கிறன்.

'' ஏன், வில்லிவாக்கத்தில் மாமா வீட்டிலிருந்து வருகிறேன்.''

''நீதான் சாமி, அந்த ஆள். பெட்டியைத் திறந்துக்கோ.''

சொன்னவன் தலையைச் சொறிந்து நின்றன்.

'' உன் பெயர் என்ன?''

''நீலமேகம்.''

'' என்ன தொழில் ?''

''ஸ்வீப்பர். இங்கே பெருக்கிச் சுத்தமாக வைக்கிற வேலே.''

''இப்போ ஒரு ரூபாய் தரேன். அப்புறம் வாரா வாரம் ஒரு ரூபாய். என்ன ?''

'' எதுக்கு சாமி?''

''இனிமேல் நான் தினமும் இங்கே தான் குளிப்பேன். டிரஸ் பண்ணிப்பேன். பெட்டி படுக்கையை நீதான் பார்த்துப்பே !''

'' குடு சாமி, அந்தப் பெட்டி படுக்கையை ! என் கூட வா.''

'' எங்கே ?''

''வா, சொல்றேன். இந்த சென்ட்ரல் ஸ்டேஷனிலே ஜாகை வைக்கப் போறே. அதுதானே ?''

'' அதேதான்.''

''என் ஜாதிக்கா பெட்டி ஏழாம் பிளாட்பாரத்திலே ஆர். எம். எஸ்.லாண்டே இக்கீது... அதை ஒழிச்சுத் தாரேன். பூட்டு மட்டும் வாங்கிப் போட்டுக்கோ... சரித்தானே.''

''சரித்தான்.''

''குடைக்கூலி மாசம் அஞ்சு ரூபா!''

''ஜமாய் !'' முத்து துள்ளினன்.

* * *

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன் சென்ட்ரல் ஸ்டேஷனில் கிரகப்பிரவேசம் செய்த முத்து இப்போது, ஞாயிற்றுக் கிழமையன்று காலையில், கோயமுத்தூரில் அம்மாவின் உடம்பு எப்படி இருக்கிறதோ என்ற வேதனை நெஞ்சின் ஒரு மூலையில் வலிக்க, பேப்பரை வாசித்தவனய், மேல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில் உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, '' டேய், முத்து !'' என்ற குரல் கேட்டது.

''ஹலோ, மணி ! குட்மார்னிங் !'' என்றன் முத்து.

சென்ட்ரலில் சந்தித்து, பரிச்சயமாகி, இப்போது நண்பனகிவிட்ட மணியைப் பார்த்த போது முத்துவின் கவலையெல்லாம் பறந்து விட்டது போலத் தோன்றியது. (தொடரும்)

இவர் பாராட்டுக்குரியவர்

பச்சைப் பசேலென நெல் வயல்களால் சூழப் பெற்ற இச்சிற்றூர் பாப விமோசனத்துக்காகத் தேவேந்திரன் சுசீந்திரத்தில் கடுந் தவம் செய்தபோது அவனது தேர் நின்ற இடமென்பது ஐதிகம். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பிறந்த அந்தத் தேரூரில் அவரது வழிவந்த ஸ்ரீமதி ஏ. கமலாட்சியம்மாள் தமது அமைதியான சமூகப் பணியைப் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார்.

கன்னியாகுமரி மாவட்டம் அன்று திருவிதாங்கூர் அரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம். 1938ம் ஆண்டில் சர் சி. பி. இராமசாமி அய்யர் திவானாக இருக்கும்போது அந்த சமஸ்தானத்தில் பொறுப்பாட்சிக்கான போராட்டம் பொங்கி எழுந்தது. அதில் தீவிரமாக ஈடுபட்டுத் தமது கணவர் திரு எஸ். சிவன்பிள்ளை பி. ஏ. பி. எல். (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) சிறை சென்றதும் ஸ்ரீமதி கமலாட்சி, ஸ்ரீமதி சௌந்திரம் இராமச்சந்திரன் அவர்களுடன் சேர்ந்து திருவனந்தபுரம் சென்று தடை உத்தரவை மீறிக் கூட்டம் நடத்த முயன்றார். ஆனால் இருவரும் இரவோடு இரவாகக் கைது செய்யப்பட்டு நகரை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

காந்தியடிகளின் நிர்மாண இயக்கத்தின் முக்கிய அம்சமாகிய கதர் இயக்கத்தில் ஈடுபட்டு ஊர் ஊராகக் கதர் விற்பனை செய்ததுடன் நூற்போர் சங்கத்தின் விற்பனைக் கிளையிலும் ஓராண்டு வேலை செய்தார். ''பெரிய வீட்டுப் பெண்'' இவ்விதம் வெளியே வந்து வேலை பார்ப்பதில் ஏற்படும் எதிர்ப்புக்களையும், இழிச் சொற்களையும் தைரியமாகச் சமாளித்தார்.

அச்சமயம் இவரது முயற்சியால் உருவான நாகர்கோயில் கஸ்தூரிபாய் மாதர் சங்கம் இம்மாவட்டத்தின் முதல் பெண்கள் ஸ்தாபனமாக இன்னும் சிறிய முறையில் இயங்கி வருகிறது. 1969 ஏப்ரல் மாதம் 14ந் தேதி நடைபெற்ற அதன் வெள்ளிவிழாவில் ஸ்தாபகர் ஸ்ரீமதி கமலாட்சியின் உருவப் படத்தை முன்னாள் மத்திய மந்திரி ஸ்ரீமதி லட்சுமி மேனன் திறந்து வைத்துக் கௌரவித்தார்.

காந்தியடிகளின் ஹரிஜன் பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வந்த காரணத்தால் இவருக்கு ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. ஓராண்டு ஆசிரியர் பயிற்சியும் பெற்றார். சென்னையில் நடைபெற்ற தக்ஷிணபாரத ஹிந்தி பிரசார சபையின் வெள்ளி விழாவின் போது காந்தியடிகளின் திருக்கரங்களினால் நற்சான்று இதழைப் பெற்றதையும், அன்று மாலை காந்தியடிகளை நேரில் சந்தித்ததையும் பூரிப்புடன் நினைவு கொள்கிறார்.

1946ம் ஆண்டு மே மாதம் தேரூர் கஸ்தூரிபாய் ஆதாரப் பள்ளியை ஓர் ஓலை வேய்ந்த சிறு கட்டடத்தில் முதல் இரண்டு வகுப்புகளிலுமாகப் பதினாறு மாணவர்களுடன் தொடங்கினார். பல தனியார் பள்ளிகளையும் கட்டாயக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசாங்கம் ஏற்று நடத்திக் கொண்டிருந்த சமயம் அது. எனினும், அப்போது திவானாயிருந்த சர் சி. பி. இராமசாமி அய்யர் இப்பாடசாலையைக் கல்வித் துறையில் புதிய முயற்சி எனக் கருதித் தனித்து இயங்க அனுமதி அளித்தார். ஹரிஜனச் சேரியின் மத்தியிலுள்ள இப்பள்ளியின் வளர்ச்சியும் அதன் சுற்றுப் புறத்தில் உள்ள பின்தங்கிய வகுப்புக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியுமே தம் இலட்சியமாகக் கருதி அப்பள்ளியின் தாயென விளங்குகிறார். இப்பள்ளி இப்பொழுது 397 குழந்தைகளுடன் ஒரு மாதிரி நடுநிலைப் பள்ளியாக விளங்குகிறது. இவரது சிறந்த ஆசிரியப் பணியைப் பாராட்டி 1967ம் ஆண்டுக்கான மாநில ''நல்லாசிரியர்'' விருது இவருக்கு வழங்கப்பட்டது. சேரி நடுவில் வீடமைத்து அங்கேயே 1950ம் ஆண்டு முதல் தம் கணவருடன் தங்கி வருகிறார்.





ஊர் ஊராகக் கதர் விற்று...

சுற்றுப்புற மக்களின் சமூக முன்னேற்றத்துக்காக, ''அறிய சோழ நங்கை மகளிர் மன்றம்'' என்ற சங்கம் ஒன்று நிறுவி அதன் தலைவியாகப் பல சமூகப் பொருளாதாரத் திட்டங்களை நடத்தி வருகிறார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் அழகம்மன் ஆசிரிய விருத்தத்தின் நாயகியான ஊர் தெய்வத்தின் பெயரையே இம்மன்றம் பூண்டிருக்கிறது.

அண்மையில் மதுவிலக்கு ரத்து உத்தரவை எதிர்த்து இம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்னால் அடையாள உண்ணாவிரதத்தைப் பிரார்த்தனையுடன் ஆரம்பித்து வைத்ததுடன், ஸ்ரீமதி கமலாட்சி தம் சகாக்களுடன் சென்று கலெக்டர் அவர்களிடம் ஒரு மகஜரையும் நேரில் சமர்ப்பித்தார்.

இவரது சமூக சேவையைப் பாராட்டும் வகையில் இவரைத் திருத்தி அமைக்கப்பட்ட தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் ஓர் அங்கத்தினராக மத்திய சமூகநல வாரியம் நியமித்துள்ளது.

– சுவாமிநாதன்



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் ஐம்பத்துமூன்று

வானதியின் யோசனை

அருள்மொழி வர்மருக்கும் சிற்றரசர்கள் இருவருக்கும் நடந்த வாக்கு வாதத்தைக் கேட்டுக் கொண்டு நின்ற குந்தவை தேவி இப்போது சற்று முன் சென்று, ''தாத்தா! மாமா! வாசலில் நின்றே பேச வேண்டுமா? உள்ளே வாருங்கள்! உங்கள் பேச்சை மீறிப் பொன்னியின் செல்வன் ஒன்றும் செய்து விட மாட்டான்'' என்றாள்.

மலையமானும் வேளாரும் உள்ளே வந்தார்கள். இளையபிராட்டியைப் பார்த்து வேளார், ''தாயே! இளவரசர் மட்டும் பட்டத்தை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தால் ஒரு தொல்லையும் இல்லை. அவருடைய கட்டளையை நாங்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாவோம். சக்கரவர்த்தியோ இராஜ்யத்தை எப்போது இறக்கி வைப்போம் என்று இருக்கிறார். காஞ்சியில் கரிகாலர் கட்டியுள்ள பொன் மாளிகைக்குப் போய்த் தம்முடைய கடைசிக் காலத்தை நிம்மதியாகக் கழிக்க விரும்புகிறார்!'' என்றார்.

''மாமா! நீங்கள் இருவரும் வந்த போது நானும் இளவரசரிடம் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். இந்தப் பெண் இடையில் வந்து முறையிட்டாள். அதைக் கேட்டு இளவரசர் மனமிரங்கிச் சிறைக்குப் போய் அவரை விடுதலை செய்ய விரும்பினார்...''

''இந்தப் பெண் யார்? எதற்காக இவள் இப்படி விம்மி அழுகிறாள்?'' என்று வேளார் கேட்டார்.

''தெரியவில்லையா, மாமா? இவள் தான் சம்புவரையர் மகள் மணிமேகலை....''

''ஓகோ! சம்புவரையர் சிறையில் இருப்பதை எண்ணி அழுகிறாளாக்கும். அழ வேண்டாம், பெண்ணே! உன் தந்தையை விடுதலை செய்து அழைத்து வரும்படி சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்து விட்டார். பாதாளச் சிறைக்குப் பார்த்திபேந்திர பல்லவன் போயிருக்கிறான்!'' என்றார் மலையமான்.

''தாத்தா! இவள் தன் தந்தையைப் பற்றி மட்டும் கவலைப்பட வில்லை. வாணர் குலத்து வீரரைப் பற்றிக் கவலைப்படுகிறாள். 'அவரை விடுதலை செய்யுங்கள். இளவரசரை நான்தான் கொன்றேன்' என்று புலம்புகிறாள்!'' என்றாள் இளையபிராட்டி.

''ஓகோ! அப்படி இவள் சொல்லுவதா யிருந்தால் இவளையும் வேண்டுமானால் பாதாளச் சிறையில் கொண்டு போய் அடைத்து விடுவோம். வல்லத்து இளவரசனை விடுவிக்க முடியாது!'' என்றார் பெரிய வேளார்.

மணிமேகலை விம்மிக் கொண்டே குந்தவையைப் பார்த்து, ''அதுதான் நான் கோருவதும், இளவரசி! என்னையும் அவர் இருக்குமிடத்தில் கொண்டு போய் அடைக்கச் சொல்லுங்கள்!'' என்றாள்.

சேநாபதி வேளார் தமது நெற்றியை விரலால் தொட்டுச் சுட்டிக் காட்டி, மெல்லிய குரலில், ''இந்தப் பெண்ணுக்குச் சித்தம் பேதலித்து விட்டதாகக் காண்கிறது!'' என்று கூறினார்.

இதுவரை சும்மா இருந்த வானதி இப்பொழுது பேச்சில் குறுக்கிட்டு, ''பெரியப்பா! மணிமேகலையின் சித்தம் சரியாகத்தான் இருக்கிறது. உங்களுக்கும் திருக்கோவலூர்ப் பாட்டனுக்கும் தான் சித்தம் சரியாக இல்லை என்று தோன்றுகிறது. சிறையில் உள்ள வல்லத்திளவரசர் பொன்னியின் செல்வ



ருடைய அருமைத் தோழர். இளைய பிராட்டியிடமிருந்து ஓலை கொண்டு போய் இலங்கையிலிருந்து பொன்னியின் செல்வரை அழைத்து வந்தவர். வீர சொர்க்கம் அடைந்த இளவரசருடைய பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்தவர். அவர்மீது குற்றம் சாட்டிச் சிறையில் வைத்திருப்பவர்களுக்குத்தான் சித்தக் கோளாறாக இருக்க வேண்டும்!'' என்றாள்.

''ஆகா! இந்தப் பெண் எப்போது இவ்வளவு வாயாடியானாள்? வானதி! இளையபிராட்டியிடமிருந்து நீ கற்றுக் கொண்டது இதுதானா? பெரியவர்கள் முன்னால் வாயைத் திறக்காமல் சும்மா இருப்பதற்கு நீ இன்னும் பயிலவில்லையா? உன்னை ஏதாவது கேட்டால் பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும்!'' என்றார் பெரிய வேளார்.

மலையமான், ''சேனாபதி! இந்தக் குழந்தையின் மீது ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்? இங்கே உள்ளவர்களின் மனத்தில் உள்ளதையே இவள் வெளியிட்டாள்!'' என்றார்.

குந்தவை, ''ஆம், மாமா! வானதியை நீங்களும் நானும் இனி மிரட்ட நினைப்பது உசிதமாயிராது. நாளைக்கு அவள் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாகிச் சிம்மாதனத்தில் அமர்வாள். அப்போது அவளுடைய கட்டளையைத் தாங்களும் நானும் நிறைவேற்ற வேண்டியதாகும்'' என்றாள்.

''அருள்மொழி மட்டும் அதற்கு இசைந்தால் ஒரு தொல்லையும் இல்லையே? மகுடாபிஷேகத்தன்று பாதாளச் சிறையில் உள்ளவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்யும்படி கட்டளையிடலாமே?'' என்றார் மலையமான்.

''தங்களையும் என்னையும் வெளியில் உள்ளவர்கள் அத்தனை பேரையும் பாதாளச் சிறையில் பிடித்துப் போடும்படியும் கட்டளையிடலாம்!'' என்றார் சேநாபதி பெரிய வேளார்.

''ஐயா! நீங்கள் இருவரும் பெரியவர்கள். உங்களை மறுத்துப் பேச வேண்டியிருக்கிறதே என்று வருத்தப்படுகிறேன். ஆயினும் அவசரமாகச் செய்ய வேண்டிய காரியத்தை விட்டுவிட்டு ஏதேதோ பேசுகிறீர்கள்....'' என்று இளவரசர் கூறுவதற்குள், சேனாதிபதி, ''இளவரசே! சோழ நாட்டின் பட்டத்து உரிமையை நிர்ணயித்துக் குழப்பம் எதுவும் நேரிடாமல் தடுப்பது மிகவும் அவசரமான காரியம் அல்லவா?'' என்றார்.

''சக்கரவர்த்தி ஒருவர் இருக்கிறார் என்பதையே மறந்து விட்டுப் பேசுகிறீர்கள்!'' என்றார் அருள்மொழி.

''நாங்கள் மறக்கவில்லை. சற்றுமுன் சக்கரவர்த்தியைப் பார்த்து விட்டுத்தான் திரும்பினோம். அவர்தான் இராஜ்யப் பிரச்னையைத் தீர்த்து வைக்க ரொம்பவும் அவசரப்படுகிறார். தீர்த்து வைத்து விட்டுக் காஞ்சியில் கரிகாலர் கட்டிய பொன் மாளிகையில் போய் வசிக்கப் பிரியப்படுகிறார்.''

''இதோ நான் சக்கரவர்த்தியிடம் போகிறேன். வந்தியத்தேவனின் விடுதலைக்குக் கட்டளை வாங்கிக்கொண்டு வருகிறேன். பிறகு நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்களல்லவா?''

''இளவரசே! சக்கரவர்த்தியிடம் தாங்கள் வந்தியத்தேவனைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதே உசிதம் அன்று. பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளுடனும் நந்தினி தேவியுடனும் சேர்ந்து சதி செய்து வந்தியத் தேவன்தான் கரிகாலரைக் கொன்றிருக்க வேண்டும் என்று சக்கரவர்த்தி கருதுகிறார்.....''

''ஆகா! அந்த எண்ணத்தை அவர் மனத்தில் உண்டாக்கியது யார்?''

''நாங்கள் அல்ல, இளவரசே! பார்த்திபேந்திரன்தான் அந்த நம்பிக்கையைச் சக்கரவர்த்திக்கு உண்டாக்கியவன்.....''

''அப்படியானால் பல்லவரையே நான் போய்ப் பார்க்கிறேன். எந்த ஆதாரத்தைக் கொண்டு அம்மாதிரிக் குற்றம் சாட்டுகிறார் என்று கேட்கிறேன்.''

''பார்த்திபேந்திரப் பல்லவனைத் தாங்கள் இப்போது சந்திக்க முடியாது. சக்கரவர்த்தியின் கட்டளையுடன் அவன் சம்புவரையரை விடுதலை செய்து கொண்டு குடந்தைக்குப் போயிருக்கிறான். அங்கே சின்னப் பழுவேட்டரையர்களையும் மற்றச் சிற்றரசர்களையும் சந்தித்துப் பேசி உடனே அவர்களை அழைத்து வரும்படி சக்கரவர்த்தி சொல்லி அனுப்பியிருக்கிறார். இராஜ்ய உரிமையைப் பற்றிச் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று செய்தி அனுப்பியிருக்கிறார். மதுராந்தகருக்கே பட்டம் கட்டச் சம்மதம் என்றும் தெரியப்படுத்தியிருக்கிறார்.''

பொன்னியின்செல்வர் முகமலர்ச்சியுடன் இளைய பிராட்டியையும் வானதியையும் பார்த்துவிட்டு, ''ரொம்ப நல்ல செய்தி சொன்னீர்கள்'' என்றார்.

''கொஞ்சம்கூட நல்ல செய்தி அல்ல. குடிகளின் விருப்பத்துக்கும் போர் வீரர்களின் கருத்துக்கும் மாறாக என்று மதுராந்தகன் சோழ சிங்காதனம் ஏறு

கிறானே, அன்றைக்கே நூறு ஆண்டுகளாக மேன்மை பெற்று வளர்ந்த சோழ ராஜ்யத்துக்கு விநாச காலம் ஆரம்பமாகும்'' என்றார் சேனாதிபதி.

''அதில் சந்தேகமே இல்லை. ஈழ நாட்டிலிருந்து வடபெண்ணை நதிவரையில் குழப்பமும் கலகமும் தொடங்கும்'' என்றார் மலையமான்.

''அதற்கெல்லாம் நீங்கள் இருவருமே தலைமை வகித்து நடத்துவீர்கள் போலிருக்கிறது. அது உங்கள் இஷ்டம். அதற்குள்ளே நான் சக்கரவர்த்தியிடம் விண்ணப்பம் செய்து வந்தியத்தேவரை விடுதலை செய்யப் பார்க்கிறேன்!'' என்று அருள்மொழிவர்மர் அங்கிருந்து வெளியேறுவதற்காகத் திரும்பினார்.

''இளவரசே! சக்கரவர்த்தியிடம் தாங்கள் இந்தக் கோரிக்கையுடன் போக வேண்டாம். அதனால் பெரும் விபரீதம் விளையும். தேவி! தங்கள் தம்பியைத் தடுத்து நிறுத்துங்கள்!'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

''ஆம்; குழந்தாய்! வயது சென்ற இந்தக் கிழவன் சொல்வதைக் கேள்!'' என்றார் மிலாடுடையார்.

''அதனால் என்ன விபரீதம் நடந்துவிடும் என்று கருதுகிறீர்கள்?'' என்று குந்தவை கேட்டாள்.

''யாரோ சில பாதகர்கள் ஒரு பொய்யான வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். அதைச் சொல்லவும் வாய் கூசுகிறது. பொன்னியின் செல்வர் தான் இராஜ்யம் ஆளும் ஆசையால் வந்தியத்தேவனை அனுப்பிக் கரிகாலரைக் கொல்லச் செய்ததாக நேற்று நம் சேனாவீரர்களிடம் இரண்டு பேர் வந்து சொன்னார்கள்...''

''தெய்வமே! இது என்ன பயங்கரமான அபவாதம்?'' என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

''அந்த இருவரையும் நம் வீரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? வடவாற்று வெள்ளத்தில் அமுக்கி அமுக்கி எடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் தற்செயலாக அங்கே போய் அவர்களைக் காப்பாற்றினேன்...''

பொன்னியின் செல்வர் குறுக்கிட்டு, ''இவ்வளவு கொடூரமான அபவாதத்தைச் சோழ நாட்டில் யாரும் நம்பப் போவதில்லை. நம் வீரர்களின் செய்கையிலிருந்தே தெரியவில்லையா?'' என்றார்.

''இன்றைக்கு நம்ப மாட்டார்கள், இளவரசே! மக்களுடைய இயல்பு தங்களுக்குத் தெரியாது. சில காலத்துக்குப் பிறகு மறுபடியும் இந்த வதந்தி கிளம்பும். தங்களை அறியாதவர்கள் சிலர் நம்பக் கூடும். அந்நிய நாடுகளில் இராஜ்யத்துக்காக உறவினர்கள் ஒருவரையொருவர் கொன்று கொள்வது சர்வ சாதாரணமாக இருக்கிறது. ஈழ நாட்டு இராஜ வம்சத்தின் சரித்திரம் தங்களுக்குத் தெரியுமே?...''

''சேனாதிபதி! பிற்காலத்தில் ஒரு பொய் வதந்தி பரவும் என்பதற்காக இன்றைக்கு என் பிராண சிநேகிதனைப் பாதாளச் சிறையில் விட்டு வைத்திருக்கச் சொல்கிறீர்களா?''

''பிற்காலத்தில் அல்ல, இளவரசே! இன்றைக்குத் தாங்கள் வந்தியத்தேவனின் விடுதலையில் ஊக்கம் எடுத்துக் கொண்டால் நாளைக்கே சிலர் அந்த வதந்தியில் நம்பிக்கை கொள்வார்கள். சக்கரவர்த்தியின் காதிலும் அது விழும். அதனால் தங்கள் தந்தையின் மனம் எவ்வளவு புண்படும் என்று யோசியுங்கள்!''

பொன்னியின் செல்வரின் திருமுகம் கருமேகத்தினால் மறைக்கப்பட்ட பூரண சந்திரனைப் போல் ஆயிற்று. குந்தவை தேவியைப் பார்த்து, ''அக்கா! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்றார்.

இளைய பிராட்டியின் முகம் மிக்க வேதனையைக் காட்டியது. அவர் பெரிய வேளாரைப் பார்த்து, ''சேநாதிபதி! இத்தகைய கொடூரமான வதந்தியைப் பரப்ப முயலுவோர் யாராயிருக்கும்?'' என்று கேட்டார்.

''வடவாற்றில் நம் வீரர்கள் முழுக்கி முழுக்கி எடுத்துக் கொண்டிருந்தவர்களை நான் தனியே அழைத்துக் கொண்டு போய் அவர்களை நயத்திலும் பயத்திலும் கேட்டேன். சம்புவரையர் மகன் கந்தமாறன்தான் இவ்விதம் சொல்லி அனுப்பியதாகக் கூறினார்கள்.''

அப்போது மணிமேகலை முன்வந்து, ''என் தமையன் காரியத்துக்காக நான் வெட்கப்படுகிறேன். நல்லவனாயிருந்த என் அண்ணன் பழுவூர் இளைய ராணியின் போதனையினால்தான் இப்படிப் பாதகனாகி விட்டான். உண்மையில் ஆதித்த கரிகாலரைக் கொன்றவள் நான். என்னைச் சிறைப்படுத்துங்கள்! வல்லத்திளவரசரை உடனே விடுதலை செய்யுங்கள்!'' என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறினாள்.

இளைய பிராட்டி அவளுடைய முதுகை அன்புடன் தொட்டு, ''மணிமேகலை! சாந்தமாயிரு! நீ இவ்விதம் சொல்வதை யாரும் நம்ப மாட்டார்கள். மேலும் ஏதேனும் அபவாதத்தைக் கிளப்புவார்கள். இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வழி கண்டுபிடிக்கலாம்'' என்றாள்.

பிறகு சேனாதிபதியைப் பார்த்து, ''ஐயா! தங்களுடைய புத்திமதியை

நானும் என் சகோதரனும் ஒப்புக்கொள்கிறோம். இப்போது வல்லத்திளவரசரை விடுதலை செய்ய முயல்வதால் வீண் வதந்திகள் ஏற்பட இடமுண்டு என்பது உண்மைதான். உண்மையான குற்றவாளியை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இதைக் குறித்து முதன் மந்திரி அநிருத்தரிடம் நான் கலந்தாலோசிப்பேன். அவருடைய சீடன் ஆழ்வார்க்கடியான் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைத் தேடிக் கொண்டு போயிருக்கிறான். அவன் ஏதேனும் தகவல் கொண்டு வருவான். பெரிய பழுவேட்டரையரும் பழுவூர் ராணியும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் உண்மை வெளியாகலாம். அதற்கிடையில் நான் இந்தப் பெண்ணிடம் கடம்பூரில் நடந்ததையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். அதுவரையில் பாதாளச் சிறையில் வல்லத்திளவரசர் சௌகரியமாயிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுசெய்யுங்கள். அவர் இந்தப் பயங்கரமான கொலைக் குற்றத்தைச் செய்யவில்லை என்பது நிச்சயம்!'' என்றாள்.

இச்சமயத்தில், ''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது அக்கா!'' என்றாள் கொடும்பாளூர் இளவரசி.

''சொல் வானதி!'' என்றாள் குந்தவை.

''முன்னொரு தடவை நாம் இருவரும் பாதாளச் சிறைக்குப் போய்விட்டு வந்தோமே நினைவிருக்கிறதா? அதுபோல் நாம் எல்லோருமாக இன்றைக்கும் போய்ப் பார்த்து விட்டு வருவோம். கடம்பூர் இளவரசியையும் அழைத்துப் போவோம்!'' என்றாள் வானதி.

குந்தவை பெரிய வேளாரைப் பார்த்து, ''சேநாதிபதி! தங்கள் குமாரியின் யோசனையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''என் குமாரியும் புத்திசாலித்தனமாகப் பேசக் கூடும் என்று தெரிகிறது. கரிகாலர் இறந்த அன்றிரவு அதே இடத்தில் அவருடன் இருந்தவன் வல்லத்திளவரசன். அவனிடம் விசாரித்தாலும் உண்மை புலப்படலாம்'' என்றார் சேனாதிபதி பெரிய வேளார்.

உடனேயே எல்லோரும் பாதாளச் சிறைக்குச் சென்றார்கள். சின்னப் பழுவேட்டரையர் கோட்டையை விட்டுப் போவதற்கு முன்னாலேயே தங்க நாணயங்கள் அச்சிடும் வேலையை நிறுத்திவிட்டார். ஆகையால், நாணயத் தொழிற்சாலை வெறுமையாக இருந்தது. காவற்காரர்களும் சிலர்தான் இருந்தார்கள். புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தைத் தாண்டிச் சுரங்க வழியில் பிரவேசித்துச் சென்று வல்லத் திளவரசன் வந்தியத் தேவன் அடைக்கப்பட்டிருந்த அறையை அடைந்தார்கள்.

ஆனால் அங்கே வந்தியத் தேவனை அவர்கள் காணவில்லை. அவனுடைய அறையில் சுவரில் மாட்டியிருந்த வளையங்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த வைத்தியர் மகன் பினாகபாணியைக் கண்டார்கள். அவன் இவர்களைக் கண்டதும், ''ஐயோ! ஐயோ! என்னை விடுதலை செய்யுங்கள்! விடுதலை செய்யுங்கள்!'' என்று பரிதாபமாக அலறினான்.

அத்தியாயம் ஐம்பத்துநான்கு

பினாகபாணியின் வேலை

வைத்தியர் மகன் பினாகபாணி அரசாங்கத்தில் பெரிய பதவிக்கு வருவதென்று தீர்மானம் செய்திருந்தான். வந்தியத் தேவனைச் சந்தித்த நாளிலிருந்து அவனுடைய உள்ளத்தில் இந்த ஆசை தோன்றிக் கொழுந்து விட்டு ஓங்கி வளர்ந்து கொண்டிருந்தது.

இதற்கு முன் அவன் ஈடுபட்ட சில காரியங்களில் அவன் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. நந்தினி தேவி அவனிடத்தில் சிறிது கருணை காட்டியது போலத் தோன்றியது. பிற்பாடு பழுவூர் ராணி அவனை அடியோடு மறந்துவிட்டாள். குந்தவை தேவியைப் பார்க்கப் போனபோது அவர் அவனுடன் சரியாக முகம் கொடுத்துப் பேசவும் இல்லை. பழையாறை அரண்மனை வாசலில் வந்தியத்தேவன் மீது 'ஒற்றன்' என்று குற்றம் சுமத்தியதில் அவனிடம் அடிபட்டதுதான் மிச்சமாயிற்றே தவிர லாபம் ஒன்றும் கிட்டவில்லை.

ஆனால் முதன் மந்திரி அநிருத்தர் அவனைக் கூப்பிட்டு அனுப்பிக் கோடிக் கரைக்குச் சென்று ஊமை ராணியைப் பிடித்துக் கொண்டு வரும்படி அனுப்பியபோது, இனித் தான் பெரிய பதவிக்கு வருவது நிச்சயம் என்று முடிவு செய்து கொண்டான். அந்தக் காரியத்தை எப்படியாவது சரிவர நிறைவேற்றி விட்டால் போதும்; முதன் மந்திரியின் தயவினால் அவன் அடையக் கூடாதது ஒன்றுமில்லை. பிறகு முதற்

காரியமாக வந்தியத் தேவனை ஒரு கை பார்க்க வேண்டும். அப்புறம், அந்தப் பூங்குழலியின் கர்வத்தையும் அடக்கி ஒடுக்கிவிட வேண்டும்.

இந்த மாதிரி ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டு பினாகபாணி கோடிக்கரை சென்றான். அங்கே கோடிக்கரையில் ராக்கம்மாளை மெள்ள வசப்படுத்திக் கொண்டான். அவள் அவனிடம் ஏமாந்து போனாள். ஆபத்துதவிக் கூட்டத்தைச் சேர்ந்தவன் அவன் என்று எண்ணிக் கொண்டு அவர்களுடைய முயற்சிகளைப் பற்றி அவனிடம் பேசினாள். அவள் உதவியைக் கொண்டு ஊமை ராணியைக் கண்டு பிடித்துத் தஞ்சைக் கோட்டை வாசல் வரையில் கொண்டு சேர்த்தான்.

இப் பிரயாணத்தின் போதெல்லாம் பினாகபாணியின் உள்ளம் வேலை செய்து கொண்டே இருந்தது. ஊமை ராணி சம்பந்தமான இரகசியங்களை அறியப் பிரயத்தனம் செய்தது. பாதாளச்சிறையில் அவன் ஒரு நாள் அடைபட்டிருந்த போது அங்கிருந்த பைத்தியக்காரன் ஒருவன் கூறிய விவரங்கள் நினைவுக்கு வந்தன. அப்போது அவை பைத்தியக்

சிரிப்பும் அழுகையும், வெய்யிலும் மழையும் கலந்த ஒரு விளையாட்டு கிரிக்கெட்! மழையிடை வெய்யில் காய்ந்து வானவில் ஏற்படுவதுபோல் கிரிக்கெட்காரர்கள் எச்சூழ்நிலையிலும் தங்கள் நகைச்சுவை உணர்ச்சியை மட்டும் இழப்பதே இல்லை. இதுபோன்ற கிரிக்கெட் வீரர்களின் நகைச்சுவை உணர்ச்சியை விவரிக்கும் வண்ணம் பிரபல கிரிக்கெட் நிபுணர் 'பிரியன் ஜான்ஸ்டன்' "இ லிட் ஆஃப் கிரிக்கெட்" என்னும் புத்தகம் எழுதியுள்ளார். கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத சில சிறு நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் கூறி நம்மையும் சிரிக்க வைக்கிறார்!



ஆஸ்திரேலிய டீம்! இங்கிலாந்தில் இருந்தபோது 'ஐயான் க்ரெய்க்' என்னும் ஆட்டக்காரரை எலிஸபெத் அரசி கேட்டார்: "இதுதான் நீங்கள் இங்கிலாந்துக்கு வருவது முதன் முறையா?" உடனே க்ரெய்க் சொன்னார்: "நான் சரியாக விளையாடா விட்டால் இதுவே கடைசி முறையாகவும் இருக்கும்!" க்ரெய்க்கின் அப்போதைய வயது பதினேழு!



இரண்டு விதமாக அவுட் ஆகியும் அம்பயர் டபிள்யூ. ஜி. க்ரேஸுக்கு அவுட் கொடுக்கவில்லை. இதைக் கண்டு மனம் தளராமல் அடுத்த பந்தில் இரண்டு ஸ்டம்புகளைத் தகர்த்தார் ஸி.ஜெ. கோர்ட்வெயிட். பிறகு க்ரேஸிடம் கூறினார்: "நீங்கள் இப்போதும் வெளியேற மாட்டீர்கள், இன்னும்ஒரு ஸ்டம்ப் பாக்கியிருக்கிறதே!"




பெர்ஸிபெர்ரின் என்பவரிடம், "அந்த பௌண்டரியை நீங்கள் காப்பாற்றிவிட்டீர்களா?" என்று கேட்டபோது சொன்னார்: "ஆமாம், ஆனால் அவர்கள் ஓடியே எட்டு ரன்கள் எடுத்து விட்டார்கள்!"



டபிள்யூ. ஜி. க்ரேஸ் ஒருமுறை விளையாடும்போது வந்த பந்து பெயில்ஸைத் தெறிக்கச் செய்துவிட்டது. க்ரேஸ் நைப்பாசையுடன் அம்பயரைப் பார்த்து, "இன்றைக்குக் காற்று அதிகமாக இருக்கிறது அல்லவா?" என்று கேட்டதும் அம்பயர், "ஆமாம்; இப்போது நீங்கள் பெவிலியனுக்குத் திரும்பிப் போகும்போது தொப்பி பறந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றார்.



ஃப்ரெட் ப்ரைஸ் ஒரு முறை ஏழு காட்ச்களைப் பிடித்தார். பெவிலியனில் அவர் உட்கார்ந்திருக்கும்போது ஒரு பெண்மணி, "பிரமாதம்! நானே உற்சாகத்தில் கீழே விழத் தெரிந்தேன்" என்று சொல்ல, ப்ரைஸ்சொன்னார்: "பரவாயில்லை, எனக்கு இருந்த உற்சாகத்தில் உங்களையும் 'காட்ச்' பிடித்திருப்பேன்!"



இரட்டைநாடி சரீரமுள்ள அம்பயரான ஆல்பர்ட் க்ரஸ்கெல்லி அவர் மனைவி அடையாளம் கண்டு பிடிக்கும் விதத்தைக் கூறினார்: "நகர்ந்தால் அது என் கணவர், நகராவிட்டால் அது ஸைட் ஸ்கிரீன்!"

- கே. வி. எம்.

காரனின் உளறலாக அவனுக்குத் தோன்றியது. இப்போது அவன் கூறியவற்றில் உண்மை இருக்கும் என்று எண்ணினான்.

ஊமை ராணி ஏறியிருந்த பல்லக்கு தஞ்சைக் கோட்டைக்கு அருகில் வந்த சமயம் புயலும் மழையும் அடித்து அவன் மீது மரம் முறிந்து விழுந்த தல்லவா? அதனால் ஏற்பட்ட காயங்கள் ஆறிய பின்னர் அவன் முதன் மந்திரி அநிருத்தரைப் பார்க்கப் போனான். அதற்குள்ளே பல முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. ஊமை ராணி சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பதற்காக உயிரை விட்டு விட்டாள். கரிகாலர் கொலையுண்டு இறந்துவிட்டார். அடுத்த பட்டம் யாருக்கு என்பதைப் பற்றி நாடு நகரமெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. தஞ்சைக் கோட்டை கொடும்பாளூர் வேளாரின் வசத்துக்கு வந்து விட்டது. பழுவேட்டரையர்களும் அவர்களைச் சேர்ந்த சிற்றரசர்களும் படை திரட்டிக் கொண்டிருப்பதாகச் செய்தி பரவியது. பெரிய உள்நாட்டுப் போர் மூளலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

இத்தகைய கொந்தளிப்பான நிலையில் வைத்தியர் மகன் பினாகபாணி முதன் மந்திரி அநிருத்தரைப் போய்ப் பார்த்தான். பெருங் கவலைக் கடலில் ஆழ்ந்திருந்த அன்பில் பிரம்மராயர் பினாகபாணியோடு அதிகமாகப் பேசிக் காலம் போக்க விரும்பவில்லை. தாம் இட்ட காரியத்தை அவன் நிறைவேற்றிவிட்ட படியால் அவனுக்குப் பரிசு கொடுத்துச் சீக்கிரமாக அனுப்பிவிட விரும்பினார்.

ஆனால் பினாகபாணி பாதாளச் சிறையில் தான் சந்தித்த பைத்தியக்காரனைப் பற்றிச் சொல்லத் தொடங்கியதும் அவருடைய கவனம் அவன் பக்கம் திரும்பியது. பாண்டிய ராஜ்யத்தின் புராதனமான மணிமகுடமும் தேவேந்திரன் அளித்ததாகக் கூறப்படும் இரத்தின ஹாரமும் இலங்கையில் எங்கே இருக்கின்றன என்பது அந்தப் பைத்தியக்காரனுக்குத் தெரியும் என்று கேட்டதும் அநிருத்தர் மிக்க ஆர்வம் கொண்டார். அந்த மணிமகுடத்தையும் இரத்தின ஹாரத்தையும் தேடிக் கண்டுபிடிப்பதற்குப் பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து முயன்றும் பலன் கிட்டவில்லை. அவற்றைக் கைப்பற்றும் வரையில் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதாக யாராவது ஒருவன் முளைத்துக் கொண்டுதான் இருப்பான். திருப்புறம்பயத்தில் நள்ளிரவில் ஒரு சின்னஞ் சிறு பையனைப் பாண்டிய சிங்காதனத்தில் ஏற்றி மகுடம் சூட்டிய நாடகத்தைப் பற்றி அநிருத்தர் ஆழ்வார்க்கடியான் மூலம் அறிந்திருந்தார். இம்மாதிரி யாராவது சிலர் அவ்வப்போது கிளம்பிக் கொண்டுதானிருப்பார்கள். அவர்களுக்கு ஈழத்து அரசர்களும் சேர மன்னர்களும் உதவி செய்வார்கள். பாண்டிய நாடு ஒரு வழியாகச் சோழ சாம்ராஜ்யத்துடன் சேர்ந்து விட்டதாக ஏற்பட வேண்டுமானால், சோழ சக்கரவர்த்தியே மதுரையிலும் முடிசூட்டிக் கொள்ள வேண்டும். அந்த வைபவத்தின் போது பாண்டிய வம்சத்தின் புராதன கிரீடத்தையும் இரத்தின ஹாரத்தையும் சோழ சக்கரவர்த்தி அணிய வேண்டும்.

இவையெல்லாம் முன்னமே அநிருத்தர் தீர்மானித்திருந்த காரியங்கள். ஆகையினாலேயே ஈழ நாட்டுக்குப் படையெடுத்துச் சென்ற ஒவ்வொரு சோழ தளபதியிடமும் அநிருத்தர் மேற்கூறிய மணிமகுடத்தையும் இரத்தின ஹாரத்தையும் கண்டுபிடித்துக் கொண்டு வரும்படி சொல்லி அனுப்பி வந்தார். அதுவரையில் ஒருவராவது அக்காரியத்தில் வெற்றி பெறவில்லை.

இப்போது பாதாளச் சிறையிலுள்ள ஒருவனுக்கு அவை இருக்கும் இடம் தெரியும் என்று கேள்விப்பட்டதும் அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் ஆர்வம் கொண்டது இயற்கையே அல்லவா?

வைத்தியர் மகன் இன்னொரு செய்தியும் கூறினான். அது முதன் மந்திரியின் ஆர்வத்தை அதிகமாக்கியதோடு கவலையையும் உண்டாக்கியது. அந்தப் பைத்தியக்காரன் சோழ வம்சத்தைப் பற்றி ஒரு மகத்தான இரகசியம் தனக்குத் தெரியும் என்றும், சோழ சிங்காதனத்துக்கு உரிமை கொண்டாடும் இளவரசன் ஒருவன் உண்மையில் சோழ வம்சத்தைச் சேர்ந்தவனே அல்லவென்றும் கூறியதாகப் பினாகபாணி சொன்னான்.

இதையெல்லாம் கேட்டதும் அநிருத்தர் முதலில் தாமே பாதாளச் சிறைக்குப் போய் அந்தப் பைத்தியக்காரனைப் பார்க்க எண்ணினார். பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டார். தாம் அங்கே போனால் எதற்கு என்னத்திற்கு என்ற கேள்விகள் கிளம்பும். மலையமானும் வேளாரும் அநிருத்தரிடம் பூரண நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவர் சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி மதுராந்தகன் கட்சியை ஆதரிப்பதாகவே அவர்கள் கருதி யிருந்தார்கள்.


அழகைப் பொழியும்
தாவண்கெரே
வாயில்கள்
ஸ்ரீ தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட் - பண்டைய மரபை இன்றைய வடிவாய்ப் படைக்குமிடம்!
am. dcm. 8 Tam

தாம் பாதாளச் சிறைக்குப் போனால் அதிலிருந்து ஏதேனும் புதிய சந்தேகங்கள் அவர்களுக்கு ஏற்படும். சம்புவரையரைப் பார்க்கப் போவதாகவும் எண்ணிக்கொள்வார்கள். இந்த அம்சத்தைப் பற்றி நன்கு யோசித்த பிறகு, அநிருத்தர் வைத்தியர் மகனையே உபயோகித்துக் கொள்ள விரும்பினார். தம் முத்திரை மோதிரத்தைக் கொடுத்துப் பாதாளச் சிறைக்குச் சென்று அந்தப் பைத்தியக்காரனைப் பார்த்து வரும்படி கூறினார்.

பினாகபாணி அவ்விதமே அப் பைத்தியக்காரனைப் பார்க்கப் போனான். பக்கத்து அறையில் வந்தியத் தேவன் அடைக்கப்பட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் அவனுக்குக் குதூகலமே உண்டாகி விட்டது. அந்த அறையின் வாசலில் சிறிது நின்று வந்தியத்தேவனுடன் பேச்சுக்கொடுத்தான். வந்தியத்தேவன் அவனுடன் பேசவில்லை. அதனால் ஆத்திரம் அடைந்து அவனை நன்றாகத் திட்டி விட்டு அடுத்த அறைக்குப் போனான். பைத்தியக்காரன் அவனிடம் சுமுகமாகப் பேசினான். உண்மையில் அவன் பைத்தியக்காரன் அல்ல வென்பதைப் பினாகபாணி கண்டு கொண்டான். பிறகு பாண்டிய நாட்டு மணி மகுடம்—இரத்தின ஹாரம் ஆகியவற்றைக் குறித்துக் கேட்டான். பைத்தியக்காரன் உடனே மௌனமானான். சோழ வம்சத்து இரகசியத்தைப் பற்றியும் சொல்ல மறுத்து விட்டான். ''எனக்கு முதலில் விடுதலை உத்தரவு வாங்கி வா! பிறகுதான் சொல்வேன்!'' என்று கூறி விட்டான்.

திரும்பி வந்து பினாகபாணி முதன் மந்திரியிடம் தன்னுடைய தோல்வியைப் பற்றிக் கூறினான். அவனை விடுவித்துக் கொண்டு வந்தால் நிச்சயம் பலன் கிட்டும் என்று தெரிவித்தான். முதன் மந்திரிக்கும் அது உசிதமாகத் தோன்றியது. இம்மாதிரி இராஜ்ய உரிமை பற்றிய குழப்பம் ஏற்பட்டிருக்கும் நிலைமையில் அபாயகரமான இரகசியங்களைப் பற்றிப் பேசும் பைத்தியக்காரனைச் சிறையில் வைத்திருக்கக் கூடாது என்று கருதினார். அவனைத் தமது அரண்மனைக்கே அழைத்து வந்து உண்மையை அறிய வேண்டும் என்று எண்ணினார்.

அதன்பேரில் கொடும்பாளூர் வேளாரைப் பார்த்து அவரிடம் ஒருவாறு இந்தச் செய்தியைக் கூறினார். சின்னப் பழுவேட்டரையரால் பல வருஷங்களுக்கு முன்னால் சிறையில் அடைக்கப் பட்ட கைதியை முதன் மந்திரியின் விருப்பத்தின் பிரகாரம் விடுதலை செய்வதில் பெரிய வேளாருக்கு ஆட்சேபம் ஒன்றும் தோன்றவில்லை. எனவே, அப் பைத்தியக்காரக் கைதியை விடுதலை செய்யக் கட்டளை எழுதிக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டு பினாகபாணி கர்வத்துடன் பாதாளச்சிறைக்குச் சென்றான். முதலில் வந்தியத் தேவன் அறையின் வாசலில் நின்று அவனை விடுதலை செய்ய உத்தரவு வாங்கிக்கொண்டு வந்திருப்பதாகச் சொன்னான். வந்தியத் தேவன் அதை உண்மை என்று நம்பி நன்றி கூறத் தொடங்கினான். உடனே பினாகபாணி தன் உண்மை சொரூபத்தைக் காட்டலானான். வந்தியத்தேவனை நன்றாகத் திட்டிவிட்டு ''உனக்கு நாற்சந்தி மூலையில் கழுமரத்தின் மேலேதான் விடுதலை'' என்று ஏகத்தாளம் செய்தான். பின்னர் அடுத்த அறைக்குச் சென்று பைத்தியக்காரனுடன் சுமுகமாகப் பேசினான். அவனைச் சுவரோடு சேர்த்துப் பிணைத்திருந்த சங்கிலிகளை அவிழ்த்து விட்டான். ''இதோ உனக்கு விடுதலை உத்தரவு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். இப்போதாவது உனக்குத் தெரிந்த இரகசியங்களைச் சொல்லுவாயா?'' என்று கேட்டான்.

முதன் மந்திரி அநிருத்தரிடம் அழைத்துப்போவதற்கு முன்னால் தானே அந்த இரகசியங்களை அறிந்துகொள்ள வைத்தியர் மகன் விரும்பினான்.

பைத்தியக்காரன் தன்னுடைய விடுதலையில் அவ்வளவு உற்சாகம் கொண்டவனாகக் காணப்படவில்லை. வெளியேறுவதற்கும் அவசரப் பட்டவனாகத் தோன்றவில்லை. பினாகபாணியின் வார்த்தையில் அவ்வளவு நம்பிக்கை கொண்டவனாகவும் தெரியவில்லை. ''என்ன? ஏது? உத்தரவு யார் கொடுத்தது? சிறையிலிருந்து வெளியேறுவது நிச்சயமா? கோட்டையிலிருந்து வெளியே போக விடுவார்களா?'' என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

திடீரென்று பக்கத்துச் சுவரிலிருந்து சில கற்கள் பெயர்ந்து விழுந்தன. பினாகபாணி என்னவென்று திரும்பிப் பார்த்த போது வந்தியத்தேவன் அவன் பின்னால் நிற்பதைக் கண்டான். பினாகபாணி இடுப்பில் செருகியிருந்த கத்தியை அவசரமாக எடுத்துக் கொண்டான். வந்தியத் தேவன் அவன் மீது பாய்ந்து கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். கையிலிருந்த கத்தியையும் தட்டி விட்டான். இருவரும் சிறிது நேரம் உருண்டு புரண்டு துவந்த யுத்தம் செய்தார்கள். அச்சமயம் பைத்தியக்காரன் சுவரில் மாட்டியிருந்த சங்கிலி ஒன்றைத் தூக்கிப் பினாகபாணியின் கழுத்தில் போட்டு இறுக்கினான்.

(தொடரும்)



தொழிற்சாலை சூழ்நிலை, தொழிலதிபர்கள் குடும்பப் பின்னணி, பாரம்பரியம் முதலிய அனுகூலங்கள் எதுவும் இல்லாமல், பணக்காரர் என்ற நிலைமையும் அதனின்று எழக்கூடிய செல்வாக்கும் இன்றித் தொழில் துறையில் புகுந்து, முன்னேறி, பல அற்புதங்களை நடத்திக் கொண்டு வருகிறார் திரு என். கிருஷ்ணன் என்ற மைசூர்க்காரர்.

அவருடைய இருபத்தைந்து ஆண்டு தொழில் துறை அனுபவங்களையும், அவர் தோற்றுவித்து, வளர்த்து, செழிப்புடன் போஷித்து வரும் தொழில் நிறுவனங்களைப் பற்றியும் பணிவுடன், அகம்பாவமின்றி அவரே சொல்கிறார்.

டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் மதுரைக் கிளையில் ஆதியில் சாதாரண 'சேல்ஸ்மென்'; அங்கிருந்து சிம்ஸன் கம்பெனிக்கு மாற்றம்—ஓர் ஊழியனாக. சென்றன பத்து வருடங்கள். இக்கால அளவில் இவருக்குக் கிடைத்தது மோட்டார் உறுப்புக்களை விற்கும் வியாபார நுணுக்கம்.

இந்த அனுபவம் என்ற மூலதனத்தை வைத்துக் கொண்டு தனி வியாபாரம்—1947 சுதந்திர தினத்தில் சுதந்திரமாகத் தொடங்கினார் ஸ்ரீ என். கிருஷ்ணன். நிறுவனத்தின் பெயர் அஸோசியேட்ட் டிரேடர்ஸ்.

இன்றைக்கு இதற்கு வெள்ளி விழா. சின்னஞ் சிறு அங்காடியாகச் சென்னை மௌண்ட் ரோட்டில் ஆரம்பித்து, காலப் போக்கில் வளர்ந்து, பட்டுல்லா ரோட்டுக்குக் குடி புகுந்து, திருவனந்தபுரம், ஹைதராபாத் நகரங்களில் கிளைகளுடன் பல விற்பனை உரிமைகளைப் பெற்று, மோட்டார் வாகனங்களுக்குத் தேவைப்படும் பல நுட்பமான உறுப்புக்களைத் தயாரிக்கும் நிறுவனமாகவும் மாறி, ஒரு பெரிய ஸ்தாபனமாகவே இன்று விளங்குகிறது.

மோட்டார் தொழிலுக்குச் சேவை புரிவது, மோட்டார் ரிப்பேர் நிலையங்களுக்கு உறுப்புக்களை வழங்குவது, பல உறுப்புக்களை அயல் நாட்டு நிபுணர்களின் தொழில் நுட்ப உதவியுடன் உற்பத்தி செய்வது — இவற்றுக்காக ''ஆல்லான் கம்பெனிகள்'' என்று மூன்று தனித் தனிக் கம்பெனிகள் நிறுவப்பட்டுள்ளன. திரு கிருஷ்ணன் தனி ஒருவராக இருபத்தைந்து வருடங்களுக்கு முன் ஆரம்பித்த சிறு வியாபாரம் இப்போது ஆல்போல் வளர்ந்து பரவி, பலருக்கு நிழலும் அளித்து வருகிறது. ஆரம்பத்தில் மட்டும் அல்ல, இன்றும் அதே சேவா உணர்ச்சிதான் அதிபர் கிருஷ்ணனுக்கு.

வெள்ளி விழா வைபவத்தை மைசூர் கவர்னர் தர்மவீராவின் தலைமையிலே கொண்டாடினார் திரு என். கிருஷ்ணன். விழாவையொட்டி பெங்களூருக்குப் பதினாறு மைல் தொலைவில் உள்ள அவலஹள்ளி கிராமத்தில் ஒரு மருத்துவ மனையை நிறுவி, ஸ்ரீ தர்மவீராவைக் கொண்டே திறந்து வைத்தார். தமது நிலத்திலேயே ஒரு காவல் நிலையமும் கட்டிக் கொடுத்து அதையும் வெள்ளி விழா வைபவத்தின் ஓர் அம்சமாக, மைசூர், போலீஸ் ஐ. ஜி.யைக் கொண்டு திறந்து வைக்கச் செய்தார்.

ஆல்லான் கம்பெனிகளின் புதிய கட்டிடங்களை டி.வி.எஸ்.—லூகாஸ் அதிபர் ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணா அச்சமயம் திறந்துவைத்து அவலஹள்ளியே ஒரு சிறு தொழில் நகரமாக மாறிக்கொண்டு வருவதைக் குறிப்பிட்டார். ''நாணயம், சேவை உணர்ச்சி, தளராத உழைப்பு, சோர்விலா உற்சாகம், இவற்றையே ஆதாரமாகக் கொண்டு தொழில் வளர்க்கும் திரு என். கிருஷ்ணன் போன்ற தொழிலதிபர்கள் இந்நாட்டில் நிறையத் தோன்ற வேண்டும்'' என்று சொன்னார்.

சிறு கார் உற்பத்தி பற்றிச் சிறு பிள்ளைகள் போல் விவாதித்துக் கொண்டு உருப்படியாக ஒன்றும் செய்யாமல் மத்திய அரசு உட்கார்ந்து கொண்டிருக்கையில் நமக்கு ஏற்படும் வேதனையைக் குறைக்க திரு கிருஷ்ணன் போன்றவர்கள்தான் உதவுகிறார்கள். மோட்டார் உறுப்புக்களின் உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகியவற்றில் ஊக்கம் காட்டி முன்னேற்றம் கண்டு வருகிறார்கள். மோட்டார் கார் தொழிலில் திரு கிருஷ்ணன் போன்று இன்னும் பலப்பலரும் உற்சாகத்துடன் ஈடுபட மத்திய அரசு வழிவகுக்குமேயானால் தமது மோட்டார் கார்களின் தரம் உயரவும் விலை குறையவும் வழி ஏற்படும்.

தாம் ஈட்டிய பொருளின் பலன் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற உயர் எண்ணத்துடன் திரு என். கிருஷ்ணன் தமது தாயார் ஸ்ரீமதி சுந்தரி அம்மாள் பெயரில் தமது சொத்தின் ஒரு பகுதியைத் தரும நிதியாக மாற்றி வெள்ளி விழா வைபவம் என்றும் பசுமையாக நினைவில் இருக்குமாறு செய்திருக்கிறார். அவரது சமூகப் பணிகளும், தொழிற் பணிகளும் மேன்மேலும் வளரட்டும்!

—சிவஸ்வாமி

அஸோசியேட்ட் டிரேடர்ஸ் நிறுவனத்தின் வெள்ளி விழா வைபவத்தின் போது மேடையில் இடமிருந்துவலமாக முறையே திரு டி. எஸ். கிருஷ்ணா, திரு தர்மவீரா, திரு என். கிருஷ்ணன்.


இப்பெண்ணின் பேரெழிலுக்குக் காரணமென்ன?
Lakmé
VANISHING CREAM
முத்தென
ஒளிரச் செய்யும்
லக்மே வேனிஷிங் க்ரீம்
லக்மே வேனிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தில் மறைந்து செயலாற்றுகிறது. அது உடனடியாக உங்கள் முகத்தை எழிலோங்கச் செய்கிறது. சிறிது தடவிப் பாருங்கள். முத்துப் போல் ஒளிரச் செய்யும் அதன் விசேஷ செயலாக்கம் விந்தை புரிவது தெரியவரும். உங்கள் முகமலர் முத்தென ஒளிரும்.
இந்த இலேசான படிமானத்தின் மீது சிறிது லக்மே முகப்பவுடர் பூசுங்கள். இப்போது கண்ணாடியில் பாருங்கள். நீங்கள் எழிலோங்கி எடுப்பாக விளங்குவீர்கள்!
லக்மே வேனிஷிங் க்ரீம்
Lakmé
ASP/L-86

சில மனிதர்கள் - சில நிஜங்கள்

உத்தரப் பிரதேசத் தலைவர்களில் ஒருவராகிய டாக்டர் சம்பூர்ணனந்தும் பண்டித ஜவாஹர்லால் நேருவும் நெருங்கிய நண்பர்கள். ஒரு சமயம் ராஷ்டிரபதி பவனில் நடந்த விருந்து ஒன்றுக்கு இருவரும் போயிருந்தார்கள். விருந்து முடிந்ததும் பட்லர் உயர்ந்த ரக கருட்டுக்களை விருந்தினர்களுக்கு விநியோகிக்கத் தொடங்கினன்.

டாக்டர் சம்பூர்ணனந்துக்கு உயர்ந்த ரக கருட்டுக்களைப் பிடிப்பதில் ஆர்வம் அதிகம். ஆனால் அவர், ராஜன் பாபு, பந்த், நான்டன் போன்றவர்கள் முன்னல் கருட்டுப் பிடிக்கமாட்டார், மரியாதை காரணமாக. பட்லர் நீட்டிய கருட்டுப் பெட்டியிலிருந்து ஜவா



சம்பூர்ணனந்த்

ஹர்லால் நேரு ஒரு கருட்டை எடுத்து சம்பூர்ணனந்தின் சட்டைப் பையில் திணித்தார். "இங்கே கருட்டுப் பிடிக்க உனக்கு வாய்ப்பு இல்லே. வீட்டுக்குப் போய்ப் புகை. உனக்காக ஒரு கருட்டை நான் 'திருடி'யிருக்கிறேன்" என்றார்.

அந்த வார்த்தை மெதுவாகவா ஒலித்தன? பக்கத்தில் இருந்த ராஜன் பாபு, பந்த் இவர்கள் செவிகளிலும் விழும்படி ஒலித்தன. அவர் நோக்கமே அதுதானே? ராஜன் பாபுவும் பந்தும் தங்கள் சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்கள்.

□

சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரபல வழக்கறிஞராகத் திகழ்ந்தவர் ஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திரய்யர். நாவன்மையில் சிறந்தவர்.

ஒரு ஜீவனாம்ச வழக்கு. தன் இளைய தாயாருக்கு மாதம் ஐம்பது ரூபாய் ஜீவனாம்சமாகக் கீழ்க் கோர்ட் தீர்ப்பளித்ததை ஆட்சேபித்து, உயர்நீதி மன்றத்தில் அப்பீல் தாக்கல் செய்யப்பட்



நேருஜி



ரவிவர்மா

டது. ராமச்சந்திரய்யர் சிறிய தாயாருக்காக ஆஜரானர்.

அப்பீல்தாரருக்கு ஆஜரான வக்கீல்கள் ஏராளமான சட்டப் பாயிண்டுகளைச் சேகரித்துக்கொண்டு விவாதத்துக்குத் தயாராயினர். கீழ்க் கோர்ட்டிலேயே கேஸ் கட்டுப் பெரிதாகியிருந்தது. அப்பீல்தாரரின் 'வக்கீல் சண்டப்பிரசண்டமாகப் பேச ஆரம்பித்தார். அப்போது ராமச்சந்திரய்யர் நிதானமாக எழுந்து 'ஒரு விஷயம் நான் கூறிவிடுகிறேன். அப்புறம் என் நண்பர் நிறையப் பேசலாம்' என்று சொல்லிவிட்டு, கீழ்க்கோர்ட்டில் அப்பீல்தாரர் கொடுத்திருந்த வாக்குமூலத்தின் ஒரு பகுதியைப் படித்தார். "நான் இரண்டு நாய்கள் வளர்க்கிறேன். அவைகளுக்கு மாதம் நூற்றி ஐம்பது ரூபாய் செலவாகும்" என்பதுதான் அந்தப் பகுதி. கையிலிருந்த தஸ்தாவேஜை மூடிவிட்டு ராமச்சந்திரய்யர் எல்லோருக்கும் கேட்கும்படி, 'நாய்க்கு மாதம் நூற்றி ஐம்பது ரூபாய். ஆனல் தாயாருக்கு மாதம் ஐம்பது ரூபாய் கொடுக்க ஆக்ஷேபனை' என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்து விட்டார். அவ்வளவுதான்: நீதிபதி அப்புறம் எந்த வாதத்துக்கும் இடம் அளிக்கவில்லை. தீர்ப்பு அறிவிக்கப்பட்டுவிட்டது. சிறிய தாயார் கட்சி வெற்றி பெற்றது.

□

பக்கிங்ஹாம் டியூக் சென்னை கவர்னராக இருந்த போது அவருக்கு ஒரு திடீர் ஆசைதோன்றியது. பிரசித்தி பெற்ற ஓவியர் ரவிவர்மாவைக் கொண்டு தம் முழு உருவம் ஒன்றை வரைந்து கொள்ள வேண்டும் என்பது தான் அந்த ஆசை. ரவிவர்மா ஒப்புக் கொண்டார். கவர்னர் ஓவியத்தை ஒரே நாளில் பூர்த்தி செய்தும் கொடுத்து விட்டார்.

இதற்குமுன் ஓர் ஆங்கிலேய ஓவியர் பதினெட்டு தடவைகள் கவர்னரை உட்காரச் செய்து ஓவியத்தைப் பூர்த்தி செய்ய முயன்றார்; அவரால் முடியவில்லை!-மேரு

அத்தியாயம் 25


முல்லைவாசல் பண்ணையின் எல்லையைத் தாண்டிச் சாமுண்டிக் கோட்டைக்குப் போகும் பாட்டையில் மஞ்சுளாவின் கார் புகுந்தபோது எதிரிலே ஒரு கார் வெகு வேகமாக வருவதைக் கண்டார்கள்.


"அது இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் வண்டிதான்" என்றான் சேகர். "அவரோடு சி. ஐ. டி. துரைசாமியும் இருப்பார். அவர்களோடு பேசிக் கொண்டிருக்க நமக்கு இப்போது நேரமில்லை" என்றான்.

மஞ்சுளா எதிரில் வரும் வண்டிக்கு இடம் கொடுத்தாள். அதே சமயத்தில் தன் வண்டியின் வேகத்தை இன்னும் அதிகமாக்கிக் கொண்டு பறந்தாள். வளைந்து வளைந்து செல்லும் அந்தக் குறுகலான கிராமத்துப் பாதையில் வழியில் பற்பல இடங்களில் பாதை கிளை விட்டுப் பிரிந்தாலும் நிதானம் தவறாமல் சரியான பாதையில் அவள் கார் ஓடிக் கொண்டிருந்தது. பழக்கத்தினால் ஏற்பட்டதொரு லாகவம் அந்த மென் கரங்களை அப்படி அநாயாசமாக இயக்கிக் கொண்டிருந்தது. சாமுண்டிக் கோட்டையின் விளக்குகளை மழைப் பின்னலின் ஊடே தூரத்தில் கண்டான் சேகர். சில நிமிஷங்களில் மஞ்சுளா தன் காரை டாக்டர் ரகுநாத்தின் பங்களாவுக்குள் கொண்டு போய் அங்கு நின்றிருந்த ஒரு சிறிய அழகிய காருக்குப் பின்னால் நிறுத்தினாள். அது நர்ஸ் மோகனு முல்லைவாசலிலிருந்து ஏறி வந்த கார். அவளது நெருங்கிய நண்பர் ஒருவரின் கார் அது என்றும் அதைத் தன் பொறுப்பில் சில நாள் விட்டுப் போயிருப்பதாகவும் அவள் அன்று பகலில் கூறியது சேகருக்கு நினைவு வந்தது.

டாக்டர் ரகுநாத்தினுடைய பங்களாவின் மாடியிலும் கீழேயும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. டாக்டர் தமது வீடு நர்ஸிங்ஹோம் இரண்டையும் ஒரே கட்டடத்தில்தான் வைத்துக் கொண்டிருந்தார். கோபாலும் மஞ்சுளாவும் வீட்டின் கதவைத் தட்டித் திறக்கச் செய்யப் படி ஏறினார்கள். ஆனால் சேகருக்கு வேறு ஒரு முக்கியமான காரியம் இருந்தது. நர்ஸ் மோகனு ஏறி வந்திருந்த காரின் அருகே சென்றான். சுற்றுமுற்றும் அவனது காந்தக் கண்கள் வட்டமிட்டன. யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதும் அவன் பானட்டைத் திறந்தான் — ஓசைப்படுத்தாமல். கார் என்ஜினின் மீது அவன் உடல் வளைந்து குனிந்தது. சில விநாடிகள்... அவன் நிமிர்ந்து பானட்டைத் தாழ்த்தி மூடியபின் அவன் வலக்கை ஒரு பொருளைக் கோட்டின் 'சைட்' பாக்கெட்டுக்குள் திணித்துக் கொண்டது.

'பொத்தானை அழுத்தி வருகையைத் தெரிவித்துவிட்டு உள்ளே வரவும்' என்று எழுதப்பட்டிருந்த சிறிய அறிவிப்புக்குக் கீழே இருந்த





காற்று

கௌசிகன்

'ஸ்விட்சை' அமுக்கிவிட்டு உள்ளே நுழைந்தார்கள். வரவேற்பறையில் யாரையும் காணோம். அந்த வேளையில் யாரையும் எதிர்பார்ப்பது நியாயமும் இல்லையே. அதையடுத்து டாக்டர் ரகுநாத்தின் 'கன்ஸல்டேஷன் ரூம்.' அதுவும் வெறிச்சோடிக் கிடந்தது. 'ஆபரேஷன் ரூம்' என்ற பெயர்ப் பலகையோடு கூடிய மற்றோர் அறையில், இருள் ஆட்சி புரிந்துகொண்டிருந்தது. மூவரும் சில விநாடிகள் மௌனமாக நின்றார்கள். கோபால் தன் காகிதப் பொட்டலத்தை மற்றொரு கைக்கு மாற்றிக் கொண்டான். சேகரின் கருத்தை வினாக் குறியோடு நோக்கினாள் மஞ்சுளா. வெளியில் ஒரே சீராகப் பெய்யும் மழையின் சத்தம் ஜன்னல் வழியாகக் கேட்டது. சத்தத்தினூடே யாரோ மாடிப் படிகளில் இறங்கி வரும் ஓசையைக் கேட்டான் சேகர். அடுத்து டாக்டர் ரகுநாத் அங்கு தோன்றினார்.




விட்டமின்கள் மற்றும்
தாதுப் பொருட்களுக்கான
'உணர முடியாப் பசி' உங்களுக்கு
சோர்வும் எரிச்சலும் ஊட்டுகிறது.

வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்

மட்டுமே 12 இன்றியமையாத சத்துக்களை அளிக்கிறது

அந்த 'உணர முடியாப் பசி'யைத் தீர்ப்பதற்கு





உங்கள் உடலில் விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் முக்கிய சத்துக்களுக்கான பசி நிரந்தரமாக இருக்கிறது என்பதை எந்த டாக்டரும் கூறுவார். இந்த 'உணர முடியாப் பசி'யின் விளைவு— சோர்வு, எரிச்சல், இருப்புக் கொள்ளாமை, பசியின்மை, ஜீரண சக்தி குறைவு.

எல்லா சத்துக்களும் அடங்கிய வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் சாப்பிட்டு 'உணர முடியாப் பசி'யைப் போக்குங்கள். அதில் 12 முக்கிய சத்துக்கள் உள்ளன: வளர்ச்சிக்கும், வலிமைக்கும் விட்டமின்கள்; இரத்த விருத்திக்கு இரும்புச் சத்து; நல்ல பசியெடுக்க எல்லாப் பொருட்களும்; நரம்புகளுக்கு உரமூட்ட ஃபாஸ்ஃபேட்டுகள்.

சிந்தித்துப் பாருங்கள்; உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் தேவை இன்றே!

இரண்டு அளவுகளில் கிடைக்கிறது:
250 ml 470 ml.

ஒரு [illegible] தயாரிப்பு

WVT-G-1

"அட, மஞ்சுளா.... சேகர்!" அவர்களை அங்கு அப்படி அந்த வேளையில் எதிர்பார்க்காதவரைப் போல முகத்தில் வியப்பை வழியவிட்டபடி, "உட்காருங்கள். நின்று கொண்டிருக்கிறீர்களே" என்று உபசரித்தார். "இந்த அகால வேளையில் இப்படி...?"

"அது என்ன சாபக்கேடோ டாக்டர் சார். நான் இங்கு வந்தது முதல் அகால வேளையில் அகாரணமாக அசாதாரணமான சம்பவங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. என்ன என்றே புரியவில்லை..." என்றாள் மஞ்சுளா.

"நோயாளிகள் யாராவது மாடியில் இருக்கிறார்களா?" என்று கேட்டான் சேகர்.

"நோ பேஷண்ட்ஸ்.... நர்ஸ் மோகனா தான் இருக்கிறாள் மாடியில். பிரயாணத்துக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறாள். இந்த மழையில் கிளம்புவது அத்தனை நல்லதல்ல என்று கூறினேன். ஆனால் அவள் கேட்கவில்லை. கிளம்பத்தான் போகிறாளாம்" என்றார் ரகுநாத்.

"அவளைத் தவிர வேறு யாருமில்லையா?" அவன் கேள்வியிலேயே அவனுடைய சந்தேகம் வெளிப்பட்டது.

"மோகனா மட்டும்தான். ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

அவரது வினாவுக்குச் சேகர் விடையளிக்கவில்லை. வீட்டின் பின்பக்கத்தில் அவன் கேட்கும் காலடி ஓசைகள் ஒருவருடையது மட்டுமல்ல என்பதை அவனது சூட்சுமமான காதுகள் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தன. அடுத்த சில நிமிஷங்களில் இருள் சூழ்ந்த ஓர் அறைக்குள்ளிருந்து மோகனா கவர்ச்சியை வாரி வீசிக் கொண்டு வெளிப்பட்டாள். கோபால் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"அடேடே... எதிர்பாராத சந்திப்பு!" என்று அகல விழித்து அழகாகச் சிரித்தாள் மோகனா, ஒரு சோபாவின் விளிம்பில் ஒயிலாக உடலைச் சாய்த்துக் கொண்டு நின்றவள். "கொஞ்சம் மழை மட்டுப்பட்டிருக்கிறது. டாக்டர் சார். நான் கிளம்புகிறேன். இம் மாதிரி மழையில் இரவு வேளையில் தனியாக வண்டி ஓட்டிக் கொண்டு போவதில் எனக்கு ஒரு அலாதியான இன்பம். அப்போ, நான் வருகிறேன் டாக்டர். மஞ்சுளா, வரட்டுமா? எல்லாருக்கும் வணக்கம்." நிதானமாக வந்தவள் பரபரப்புடன் வெளியேறினாள்.

வெளியே காரின் கதவு அறைந்து சாத்தப்படும் ஓசையைத் தொடர்ந்து கார் எஞ்சின் 'கிர்....கிர்...' என்று முனகுவது கேட்டது. ஆனால் 'ஸ்டார்ட்' ஆகவில்லை. சற்று இடைவெளிவிட்டு மறுபடியும் எஞ்சின் கரகரப்பதைக் கவனித்துக் கொண்டே டாக்டரின் மீதும் பார்வையைப் படரவிட்டிருந்தான் சேகர்.

"கோகிலா உங்களுக்கு டெலிபோன் செய்தாளா?" என்று கேட்டான் சேகர்.

"இன்று மாலைக்குப் பிறகு அவளிடமிருந்து எனக்கு அழைப்பு வரவில்லை. ஏன் ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டார் டாக்டர்.

"விசேஷத்துக்கென்ன? நிறைய இருக்கிறது" என்றான் சேகர் அலட்சியமாக. "இது வரை எத்தனை விஷயங்கள் நடந்திருக்கின்றன. அவற்றையெல்லாம்விட விசேஷமான சம்பவங்கள் வேகமாக உருவாகி வருகின்றன. அவையெல்லாம் உங்களுக்கு வேதனை தரக் கூடியதாக இருக்கும். விரைவிலேயே உங்கள் டாக்டர் பட்டம் பிடுங்கப் படப் போகிறது. குற்றவாளியாகச் சிறையில் அடைபடப் போகிறீர்கள். இவையெல்லாம் விசேஷமில்லையா? ஆனால் இவைகளின் வீரியத்தைக் குறைக்க வேண்டுமானால் நீங்கள் சில உண்மைகளை ஒப்புக்கொண்டாக வேண்டும்."

சேகர் பேசப் பேச டாக்டர் ரகுநாத்தின் முகம் சிவந்தது. ஆத்திர வயப்பட்டிருந்த அவர் தம்மைச் சமாளித்துக் கொண்டு பேசவே சில விநாடிகள் ஆயின. "முதலில் எதையாவது மறைத்திருந்தால் அல்லவா இப்போது உங்களிடம் அவைகள் உண்மை என்று ஒப்புக் கொள்வதற்கு? அப்படியொரு நிலை எனக்கு ஏற்படவில்லை. தவிர மிஸ்டர் சேகர், உங்களுடைய இந்தப் போக்கை நான் விரும்பவில்லை. இது என்னுடைய வீடு. இங்கு நீங்கள் வந்து என்னைக் கேவலமான முறையில் பேசி ஆதாரமற்ற அர்த்தமற்ற விஷயங்களைக் கூறிப் பயமுறுத்த முடியாது..... நீங்கள் போய் வரலாம் — குட் நைட்!"

திரும்பிச் செல்ல முயன்ற ரகுநாத் தன் முன்னே ஒரு தடை, சுவராக எழும்பி நிற்பதை உணர்ந்து திடுக்கிட்டார். கோபால் தான் அப்படி அவர் நகர முடியாமல் வந்து நின்று கொண்டான். ஆஜானுபாகுவாக, அசைக்க முடியாதவனாக.

அவனைத் தன் புறங் கையால் ஒதுக்கிவிட்டு மேலே செல்ல முற்பட்ட ரகுநாத் அது எத்தனை பெரிய தவறு என்பதை உடனே உணர்ந்தார். அது என்ன உடம்பா அல்லது கருங்கல்லா? உடற்பயிற்சி நிலையத்தின் நிர்வாகி என்பதைப் பாவம் அவர் அறிவாரா?

"அப்படிப் போய் உட்காரும்" என்று பிடித்துத் தள்ளினான் கோபால். ரகுநாத் நாற்காலியில் போய் விழுந்தார்.

"அதுதான் சரி... நாம் எல்லாருமே கூட உட்கார்ந்து கொள்ளுவோமே" என்றான், சேகர். உள்ளே போகும் வாசல் படியை மறைத்துக் கொண்டு நந்தியாகக் கோபால் உட்கார்ந்து கொள்ள, ரகுநாத்துக்கு எதிரில் சேகர் உட்கார்ந்து கொண்டான். அவன் அருகே மஞ்சுளாவும் அமர்ந்தாள்.

வெளியில் கார் கிளம்ப மறுத்து, கனைத்துக் கனைத்துக் களைத்துப் போய் ஓய்ந்து விட்டது. இதனால் சலிப்படைந்த மோகனா அதன் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டு மறுபடி அதைப் படீரென்று மூடிவிட்டு வரும் சத்தம் கேட்டது. அடுத்து வாசல் கதவில் எல்லாரது பார்வையும் பதிய அங்கு மோகனா தோன்றினாள். "கார் ஸ்டார்ட் ஆகவில்லை டாக்டர். மழையில் நனைந்ததினால் ஏதோ கோளாறு போலிருக்கிறது. நம்ம சுரேஷ் ஆடோமொபைல்ஸுக்கு ஃபோன் செய்கிறேன். எப்படியும் நான் உடனே கிளம்பியாக வேண்டுமே" என்று டெலிஃபோன் செய்ய உள்ளே வந்தாள். யாரும் அவளுக்குப் பதில் சொல்லவில்லை.

டெலிஃபோனுக்கு அருகில் சேகர் அமர்ந்திருந்தான். மோகனா டயல் செய்தபோது அந்த எண்களைக் குறித்துக் கொண்டான், தன் உள்ளங் கையில்.

''ஹலோ சுரேஷா?... நான் மோகனா பேசறேன். ஆமா... என் கார் மழையிலே இருந்ததாலே ஸ்டார்ட் ஆகல்லே. 'ஸ்டார்ட்டிங் டிரபிள்' என்... உங்க மெக்கானிக் யாரை யாவது உடனே அனுப்பி வையேன். ஆமாம், அவசரம்தான். நான் எப்படியும் இன்று விடியற்காலைக்குள் கிளம்பியாகணும். இல்லே சுரேஷ்... நான் தாமதிக்கிறதுக்கில்லே.... பிளீஸ்... ஆமா.... உடனே.... ரொம்ப தாங்க்ஸ்!''

டெலிபோனை அதன் இடத்தில் வைத்தவன் பொதுவாக, ''நான் மாடிக்குப் போய் இருக்கிறேன்'' என்று கூறிப் படிகளில் ஏறிப் போனான்.

அவன் மாடி ஏறி மறைந்ததும் சேகர் தன் உள்ளங் கையில் குறித்துக் கொண்டுள்ள அவன் பேசிய அதே எண்ணைச் சுழற்றினான்.

''யார் சுரேஷா? சற்று முன் டெலிபோன் செய்தார்களே மோகனா, அவர்களுக்காகப் பேசறேன்... நல்ல வேளை உங்கள் மெக்கானிக் இன்னும் கிளம்பல்லியே. நல்லதாய்ப் போச்சு. வரவேண்டாம் சார்! கார் சரியாப் போச்சு. ஆமா... ஓகே... குட் நைட்!'' என்று டெலிபோனை வைத்தான்.

டாக்டர் ரகுநாத் குமுறினார். ''மிகவும் கேவலமான செயல். இது என்ன சூழ்ச்சி? மோகனாவின் பயணத்தைத் தடை செய்வதுதானே உனது நோக்கம். நான் இப்போதே இதைப் போய் அவனிடம் சொல்லுகிறேன்.'' எழுந்திருந்தார் ரகுநாத்.

''உட்கார்...எழுந்திருக்காதே...!'' என்று கர்ஜித்தான் கோபால்.

பேசாமல் உட்காருவதைத் தவிர வேறு எதுவும் அவரால் செய்ய முடியவில்லை. ஆத்திரமும் அதே சமயம் ஏதும் செய்ய முடியாத நிலையும் சேர்ந்து உள்ளுறக் குமையலானார்.

''சேகர்...'' தன் காதலனை அழைத்தாள் மஞ்சுளா. ''டாக்டர் ரகுநாத்—என் மாமா—செய்த குற்றமென்ன?''

''சதிகாரர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாயே? எல்லாச் சதிகாரர்களும் எதைச் செய்வார்களோ அதையேதான் உன் மாமாவும் செய்திருக்கிறார். தர்மலிங்கம் தேடிவைத்திருக்கும் முல்லைவாசல் பண்ணையின் சொத்தில் பாதியைக் கொள்ளையிடத் திட்டம் வகுத்தவர் இந்த டாக்டர்தான்'' என்றான் சேகர், அவனுக்கே உரிய அடக்கமான பாணியில். தன் காதலனின் வாயாலேயே எல்லா விஷயங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் மஞ்சுளா வினாக்களை விதைத்தாள்.

''என் தாத்தாவின் சொத்தை இவர் எப்படிக் கொள்ளையடிக்க முடியும்? புரியவில்லையே?''

''நான் இதுவரை அறிந்திராத மிக மோசமான, பண்பற்ற வஞ்சகச் செயலைப் புரிந்திருக்கிறார் இந்தப் பெரிய மனிதர்!'' நிதானமாக விவரிக்கலானான் சேகர். ''உன் தாத்தாவின் உயிலையும் அதன் தொடர்பான உன் தகப்பனாரின் உயிலையும் ஒப்பிட்டுப் பார். அப்போது தெரியும், உன் மாமா செய்த மிகப் பெரிய மோசடியின் அமைப்பு. இரண்டு நிதரிசனங்கள். உன் அப்பா முதலில் இறப்பாரானால் உன் சித்திக்குச் சில லக்ஷங்கள் மட்டுமே கிடைக்கும். ஆனால் உனக்கோ நான்கு கோடிக்கும் அதிகமாகக் கிடைக்கும். அல்லது உன் தாத்தா முதலில் இறந்து உன் தகப்பனார் இருப்பாரானால் உனக்கு இரண்டு கோடி உன் சித்திக்கு—இந்த டாக்டரின் தங்கைக்கு—இரண்டு கோடி என்று சொத்து சமமாகப் பிரியும். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தன் கணவன் முதலில் இறந்து தனக்குக் கிடைப்பதை விடத் தன் மாமனார் முதலில் இறந்தால் பல மடங்கு அதிகமாகக் கிடைக்கும். ஆகவே முதலில் பெரியவர்தான் இறக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அதன்படியே நடத்தியும் காட்டினார்கள்...''

''ஆனால்...சேகர்...?''

''இவ்வளவு பெரிய ஆஸ்தியில் பாதியை அடைவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஓர் உபாயத்தினால் திட்டமிட்டு உருவாக்கினார்கள்.''

''ஆனால்...'' குறுக்கே தன் கேள்வியினால் வெட்டினாள் மஞ்சுளா. ''என் தாத்தா, அப்பா இவர்களின் மரணம் இயற்கையானது தானே?''

''இயற்கையான மரணம்தான். இருவரில் யாரும் சூழ்ச்சிக்குப் பலியாகிக் கொல்லப்படவில்லை. நோயின் கடுமையினால்தான் இருவருமே இறந்திருக்கிறார்கள். அவர்கள் மரணத்திலே கோளாறில்லை. அவர்கள் இறந்த காலங்களிலேதான் இவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள்.''

''சேகர்...?'' ஏதோ கேட்க நினைத்தவளைப் பேசவிடவில்லை சேகர்.

''உன் தாத்தா தர்மலிங்கம் முதலில் இறந்ததாக வெளி உலகத்துக்கு அறிவித்தால் உன் பங்குக்கான சொத்து பாதியாகக் குறையும். அதே சமயம் கோகிலாவின் சொத்துப் பல மடங்கு பெருகும். இங்குதான் சதிகாரர்களின் கொடுமை நிறைந்த திட்டம் இருக்கிறது. உன் சொத்தில் பாதியை அபகரித்துக் கொள்ளக் கொலையை — இல்லை கொலைகளை — நான்கு கொலைகளைச் செய்யுமளவுக்குத் துணிந்திருக்கிறார்கள்.''

'''என் தாத்தா முதலில் இறந்ததாக வெளி உலகத்துக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக' என்று சொன்னீர்களே சேகர், அப்படியானால் உண்மையில் அவர் முதலில் இறக்கவில்லையா? எனக்குப் புரியவில்லையே'' என்று குழம்பினாள் குழந்தை மனத்தோடு மஞ்சுளா.

''மூன்று வாரமும் இரண்டு இரவுகளுக்கும் முன்னால், இந்தப் பிராந்தியத்தில் புயல் அடித்ததே அந்த இரவுக்கு முல்லைவாசல் பண்ணையில் உன் சிந்தனையைக் கொண்டு போய் நிறுத்து மஞ்சுளா. இத்தனை நிகழ்ச்சிகளுக்கான சதி ஆரம்பமானது அந்த இரவிலேதான். அன்று புயல் ஊரில் மட்டும் வீசவில்லை. உன் குடும்பத்தினுள்ளும் வீசியது. அன்று உன் தோழி நிர்மலாவுக்கு அவள் பருகும் காப்பியிலே தூக்க மருந்து கலந்து கொடுக்கப்பட்டது. அவள் தன் படுக்கையில் மயங்கிக் கிடந்தாள். அப்போதுதான் இந்தச் சதித் திட்டம் செயல்படலாயிற்று. விடிவதற்கு முன் அது வெகு வேகமாக வளர்ந்து வெகுதூரம் முன்னேறி விட்டது. அதாவது


இப்பொழுது
ஃப்ரெஸ்காவை
உணர்ந்து பாருங்கள்
Beauty Talc
fresca
இரண்டு அளவுகளில்
கிடைக்கிறது.
கோத்ரெஜ் அளிக்கும்
ஃப்ரெஸ்கா பியூடி டால்க்
ஃப்ரெஸ்கா என்றாலே புத்துணர்ச்சிதான்!
Interpub GF-3 TM

இந்தச் சதியில் ஈடுபட்ட எவரும் அதிலிருந்து மீளமுடியாதபடி மிகத் திறமையாக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. உன் தோழி நிர்மலா சொன்னது நினைவிருக்கிறதா? 'உன் சித்தி என்னை மறுபடி உன் அப்பாவைப் பார்க்கவே அனுமதிக்கவில்லை' என்று சொன்னாளில்லையா? இன்னொன்றும் கூறினாள் நிர்மலா. 'டாக்டர் ஈசுவரன் அன்று காலையில் உன் தகப்பனாருக்குச் சிகிச்சை அளிக்க வந்தபோது அவர் முகத்தில் அடித்தாற்போல் அவரைத் திருப்பி அனுப்பினாள் உன் சித்தி. உன் அப்பாவின் வைத்தியப் பராமரிப்பு முழுமையும் அன்றே டாக்டர் ரகுநாத்திடம் ஒப்படைக்கப்பட்டது'—நிர்மலா சொன்னது நினைவுக்கு வருகிறதா மஞ்சு?'' என்று கேட்டான் சேகர்.

மௌனமாகத் தன் காதலனையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் மஞ்சுளா. அவள் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. தன் காதலனிடமிருந்து அடுத்து வரும் அதிர்ச்சி தரும் செய்தியை எதிர்பார்த்து மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.

''அன்று காலை — அதாவது புயல் வீசிய இரவுக்கு மறுநாள் காலை உன் தகப்பனாரின் நர்ஸோ அல்லது அவருடைய டாக்டரோ உன் தகப்பனாரின் அறைக்குள் போக அனுமதிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல. உன் தாத்தாவும் கூட அதன் பிறகு தன் மகனுடன் பேசுவதற்கு — ஏன் காணவே அனுமதிக்கப்படவில்லை. தாத்தா உன்னிடம் என்ன கூறினார்? 'உன் சின்னம்மா உன் அப்பாவுடன் நான் அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறேன் என்று குற்றம் சாட்டி அவன் படுக்கையை மறு கோடிக்கு மாற்றிவிட்டாள்' என்று குறைப்பட்டுக் கொள்ளவில்லையா? அது எப்போது? அந்தப் புயல் அடித்த இரவுக்குப் பிறகுதான் இல்லையா? இவைகளின் உட்கருத்துத்தான் என்ன? நிர்மலாவை நிரந்தரமாகவும், டாக்டர் ஈசுவரனை ஓர் எல்லைக்கப்பாலும் (தேவை ஏற்பட்டாலன்றி) எழுந்து நடமாட முடியாத உன் தாத்தா இனி எப்போதுமேயும் தொடர்பு கொள்ள முடியாதபடியும் உன் அப்பாவிடமிருந்து பிரித்துவிடத் திட்டமிட்டார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள். அந்த வினாடியிலிருந்து உன் அப்பா படுத்திருப்பதாகச் சொல்லப்பட்ட அந்த அறைக்குப் போவதிலிருந்து எல்லாருமே தடுக்கப்பட்டார்கள்.''

'''படுத்திருப்பதாகச் சொல்லப்பட்ட' என்றால்...?'' குழப்பத்தோடு கேட்ட மஞ்சுளாவின் குரல் நடுங்கியது.

சேகர் பதற்றப்படவில்லை. ஒரே நிதானமாகப் பேசினான். ''மஞ்சுளா, நீ இங்கு வருவதற்கு முன்னால்வரை உன் சித்தி அந்த அறைக்குள் யாரையுமே அனுமதிக்கவில்லை. இருவரைத் தவிர. புதிய நர்ஸ் மோகனா, புதிய டாக்டர் ரகுநாத். இம்மூவரும் சதித் திட்டத்தின் முக்கிய அங்கத்தினர்கள். இப்படி இவர்கள் யாரையும் உன் தகப்பனாரின் அறைக்குள் விடாமல் கட்டிக் காத்ததற்கு முக்கிய காரணம் இருந்தது. அதற்குக் காரணம் உன் தகப்பனாரின் உடல் நோயல்ல...'' சேகர் ஒரு விநாடி நிறுத்தினான். பிறகு தொடர்ந்தான். ''உன் தகப்பனார் முன்பே இறந்து விட்டிருந்ததுதான்!''

''சேகர்...!'' கிறீச்சிட்டாள் மஞ்சு. ''நீ... நீங்கள் விஷயங்களை ரொம்பவும் குழப்புகிறீர்கள் சேகர். என் அப்பா நேற்றிரவு தானே இறந்தார்!''

சேகர் மௌனமாக ஆனால் உறுதியாகத் தலையை அசைத்தான், இல்லை என்பதற்கு அடையாளமாக.

''ஆனால்... நான் என் அப்பாவோடு பேசினேனே...அது...?''

''அது தெரியும் மஞ்சு. நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய், அப்பாவோடுதான் பேசினோம் என்று...'' அமைதியாகச் சொன்னான் சேகர். ''அன்றொரு நாள் — பயங்கரமான புயல் அடித்ததே அன்றைய இரவே உன் தகப்பனார் இறந்துவிட்டார் மஞ்சுளா.''

சேகர் கூறியதைக் கேட்ட மஞ்சுளா அப்படியே இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள். கோபாலுக்கு வியப்பான வியப்பு. டாக்டர் ரகுநாத் தம் இருக்கையில் உட்கார்ந்திருக்க முடியாததோர் அவஸ்தையிலிருந்தார்.

சேகர் தொடர்ந்தான். ''உனக்கு நினைவிருக்கிறதா மஞ்சு? நிர்மலா நம்மிடம் தன் கதையைக் கூறும் போது என்ன சொன்னாள்? 'புயல் உன் தந்தையை வெகுவாகப் பாதித்திருந்தது. இந்த வேளையில் ராமுவும் இல்லாமல் தாமும் எழுந்திருக்க முடியாத நிலையில் இருப்பதினால் பண்ணையைப் பற்றி ரொம்பக் கவலைப்பட்டார். எழுந்திருக்க முயன்ற அவருக்கு நான் மயக்க மருந்து கொடுத்து அது வேலை செய்யும் வரை அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தேன். அப்போது உன் அம்மா அங்கு வந்து நான் பார்த்துக் கொள்வதாகக் கூறி என்னை உணவருந்த அனுப்பினாள். நான் மறுபடி உன் தகப்பனாரைக் கவனிக்கக் கிளம்பும் போது உன் அம்மா வந்து, 'அவர் தூங்குகிறார். இப்போது நீ அங்கு போக

பாராட்டுகிறோம்

1942ம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தின் நியாய சிரோமணியாக ஆன ஸ்ரீ ஸ்ரீராம தேசிகன் வடமொழி, தென்மொழியின் இலக்கியப் பாலமாகப் பல பயனுள்ள பணிகளைச் செய்தவர். பாரதியாரின் பொறுக்குமணியான பல கவிதைகள், சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டம், கம்பராமாயணம், வேமனப் பதியங்கள், திருப்பாவை ஆகியவற்றை ஸம்ஸ்கிருத சுலோகங்களாக இயற்றி வடமொழியின் வளத்துக்கு மேலும் வளம் ஏற்றிய பெருமையைக் கண்டவர். சமீபத்தில் தமிழின் பெருமையைப் பறைசாற்றும் ஔவையாரின் நீதிக்கோவையை மொழிபெயர்த்து வெளியிட்டவர்.

வளங்குன்றாத வடமொழிக்கு பல்யமான பணி செய்துவரும் இவருக்கு ஜனாதிபதி இவ்வாண்டு பாராட்டு வழங்கியுள்ளார். தென்னாட்டில் வடமொழிக்கு ஒரு புள்ளியாக விளங்கும் இவரைக் 'கல்கி' நேயர்களின் சார்பில் நாமும் பாராட்டுவோம்.



வேண்டாம்' என்று கூறினாள்.' — இப்படிச் சொன்னாள் இல்லையா? உன் தகப்பனார் தூங்குவதாக உன் தாயார் நிர்மலாவிடம் கூறியது அப்பட்டமான பொய். தூங்கிக் கொண்டுதான் இருந்தார் — அதாவது இனி எப்போதுமே எழுந்திருக்காத தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார். அந்தப் புயல், அதனால் ஏற்படும் சேதத்தின் கவலை, கவனிப்பாரற்ற நிலையில் உள்ள பண்ணை எல்லாமாகச் சேர்ந்து ஒரு பெரிய அதிர்ச்சியாகவே, பலவீனப்பட்டுப் போயிருந்த அவர் இதயத்தினால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தூக்க மருந்தும் சேரவே அவருக்கு மீளா உறக்கத்தைக் கொடுத்து விட்டது.''

''என்னால் நம்ப முடியவில்லை, சேகர்!'' மஞ்சுளா அரற்றினாள். துக்கத்தினால் அவள் குரல் கம்மிப் போயிருந்தது.

''நம்பும்படியான ஆதாரங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றாகச் சொல்லுகிறேன், கேட்டுக் கொண்டு வா.'' சேகர் தொடர்ந்தான்.

''புயல் வீசியதற்குப் பிறகு உன் தகப்பனாரிடமிருந்து உனக்குக் கடிதங்கள் ஏதுமில்லை. உன் தாயார்தான் எழுதினாள். 'அப்பாவுக்கு உடல் ரொம்பவும் பலவீனமாக இருப்பதால் கடிதம் எழுத முடியவில்லை' என்று தான் எழுதுவதற்குக் காரணம் காட்டி இருந்தாள் இல்லையா? புயல் வீசிய இரவுக்குப்பின் யாரையும் உன் தகப்பனாரின் படுக்கையறைக்குள் நுழைய விடவில்லை உன் தாயார். அவருடைய தேவைகள் அனைத்தையும் தானே கவனிக்கப் போவதாக அறிவித்தாள். பண்ணையை நிர்வகிக்கும் பொறுப்பில் பெரும் பகுதி சில காலமாகவே உன் சித்தியிடம்தானே இருந்தது. இப்போது முழு அதிகாரமும் அவள் கைக்கு மாறியது.''

மஞ்சுளா பிரமை பிடித்தவளைப் போல் அமர்ந்திருந்தாள். தன் தகப்பனார் மூன்று வாரங்களுக்கு முன்னமேயே இறந்துவிட்டார் என்ற செய்தி அவளுக்குத் தாங்க முடியாததாக இருந்தது. அந்த எண்ணத்திலிருந்தே விடுபடாதவளாக.... ''அப்படியானால் என் சித்தி, இந்த டாக்டர் ரகுநாத் எல்லாரும் என்னிடம் பொய் சொல்லி ஏமாற்றி இருக்கிறார்கள், என் தகப்பனார் உயிரோடு இருக்கிறார் என்று!''

''ஆமாம். மிகவும் குரூரமான, படுமட்டமான பொய்யும் ஏமாற்றும்தான் அது. உன் சித்தி அந்த அறையில் கட்டுக் காவலுடன் காத்து வந்தது உன் தகப்பனாரை அல்ல. ஒரு குற்றத்தின் ரகசியத்தைத்தான். நர்ஸ் மோகனா அங்கு எந்த நோயாளிக்கும் தொண்டு செய்யவில்லை. அப்படிச் செய்வதாக நடித்து வந்தாள். டாக்டர் முல்லைவாசலுக்கு அடிக்கடி போனது உன் தகப்பனாருக்குச் சிகிச்சை செய்யவோ, தூக்கம் வராத அவருக்குத் தூக்க மருந்து தரவோ அல்ல. சதித் திட்டங்களை வகுப்பதற்காகத்தான். உன் தகப்பனார் இருந்த அறை நோயாளியின் படுக்கையறையாக இல்லை. நாம் அன்றிரவு அங்கு போகும் வரை அது காலியாக, சதிகாரர்களின் ஆலோசனைக் கூடமாயிருந்தது.''

''காலியாகவா....?'' வியப்போடு கேட்டாள் மஞ்சுளா.

''டாக்டர் சாருக்குத் தெரியுமே. நான் கூறுவது உண்மைக்குப் புறம்பானதா, சொல்லுங்கள், மிஸ்டர் ரகுநாத்?'' ருத்ரமாக வினவினான் சேகர்.

டாக்டரின் தாடைகள் இறுகின. அவருக்கு வந்த ஆத்திரத்தின் தன்மை அதன் அழுத்தத்தில் நன்கு தெரிந்தது. எந்த விநாடியும் சேகர் மீது பாய்ந்து அவனைக் குதறிவிடுவார் போலிருந்தது. கோபால் ஒரு 'ஹூங்'காரம் போட்டானோ, அவர் அடங்கினாரோ?

டாக்டர் பதில் சொல்லாததினால் சேகரே தொடர்ந்தான். ''புயல் அடித்த அன்றைய இரவிலிருந்து உன் அப்பாவின் படுக்கையறை காலியாகத்தான் இருந்தது. உன் தோழி நிர்மலா நம்மிடம் கூறியது உனக்கு நினைவிருக்கலாம். காதலன் ராமு, கருப்பூரிலிருந்து திரும்பி வருவதை அவள் அன்று மாலை எவ்வளவு துடிப்போடு எதிர்பார்த்திருந்தாள் என்பதைக் கூறினாள். அன்று இரவு குடித்த காப்பி ருசியில் மாறுபட்டிருந்ததாகவும், என்றுமில்லாதபடி அன்று தனக்குத் தூக்கம் வந்ததாகவும் சொன்னாள் இல்லையா? சதிகாரர்களின் திட்டம் அந்தக் கட்டத்திலிருந்துதான் செயல்படத் தொடங்கியது. நோயின் உபாதை தாங்காமல் தூக்கம் வராமல் தவிக்கும் உன் தகப்பனாருக்கு எந்த மருந்தைக் கொடுத்து அவரை நினைவிழக்கும்படி செய்து தூங்கச் செய்வார்களோ அதே மருந்தை அவளுக்குக் கொடுத்து அவளைச் செயலிழக்கச் செய்தார்கள். அவள் நினைவிழந்து கிடக்கும் போது, காலையில் ஒரு 'விஸ்கி' (மது வகை) பாட்டிலை அவளது தலையணைக்கு அடியில் பதுக்கி வைத்து அவள் கடமையில் இருக்கும் போது குடித்துவிட்டு மயங்கிக் கிடந்ததாகக் குற்றம் சாட்டி நிரந்தரமாகவே அவளை அங்கிருந்து அப்புறப்படுத்தினார்கள். அவளால் அந்த மயக்க நிலையில் எழுந்திருக்க முடியாவிட்டாலும், தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளைக் கனவு போல் அவளால் உணர முடிந்தது. அன்று அவள் கூறியதை மறுபடி நினைவுபடுத்திக் கொள் மஞ்சுளா. 'என் படுக்கையருகே, என் முகத்துக்கு நேராக ராமு வந்து நின்று என் தோளைக் குலுக்கி 'எஜமானர் எங்கே? நீ ஏன் அவர் அறையில் இல்லை?' என்று கேட்டார்' என்று கூறினாளில்லையா? ராமு எஜமானர் என்று குறிப்பிட்டது உன் அப்பாவைத்தான். அவன் வந்த போது நோயாளிப் படுக்கையில் உன் அப்பா இல்லாததைப் பார்த்திருக்கிறான். ஆகவே, ராமு கொலை செய்யப்பட்டிருக்கிறான்.''

மஞ்சுளா அமைதியாகக் கேட்டாள் தன் காதலனிடம்: ''அந்த ஒரு காரணத்துக்காக மட்டுமே ராமு கொல்லப்பட்டானா சேகர்?''

''இதைவிட இன்னும் ஆபத்தான ஓர் உண்மையையும் அவன் கண்டிருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதாவது உன் தகப்பனாரின் இறந்த உடல் மாடியிலிருந்து கீழே கொண்டு வரப்பட்டதையும் பார்த்திருக்கிறான்....'' மஞ்சுளா முகம் வெளுக்க, உடல் நடுங்க, வியப்பு அழுத்த அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

(தொடரும்)

போர்ஹென்ஸ் பற்பசையால் [illegible] பிரஷ் கொண்டு பல் துலக்கினால் ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்

சிறியோர், பெரியோர், யாவரிடமிருந்தும் தாமாகவே தேடிவந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கும் போர்ஹென்ஸ் பற்பசையின் அற்புதமான விளைவுகளைப் பாராட்டுகின்றன. அந்தக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிமிடெட்டின் எந்த அலுவலகத்திலும் காணலாம்.

"போர்ஹென்ஸ் பற்பசைக்கும், அதை நான் தவறாமல் உபயோகிக்கச் சொன்ன டாக்டருக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்... இதன் விளைவு, எனது 75வது வயதிலும், ஒரே மாதிரியாகப் பளிச்சென்று பளபளப்பான என் பற்கள் ஆரோக்கியமான ஈறுகளில் உறுதியாக வேரூன்றியுள்ளன..."

—[illegible] போஸ், கல்கத்தா

"உலகப் புகழ் பெற்ற உங்கள் பற்பசையை என் சிறு பிராயம் முதல் தவறாது உபயோகித்து வருகிறேன். இன்று என்னுடைய ஒவ்வொரு பல்லும் வலுவாக இருக்கிறது ... நான் போர்ஹென்ஸை எல்லா வகையிலும் சிறந்த பற்பசையாகக் கருதுகிறேன். ஏனெனில் அது பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை. அது ஒன்றே போதுமே...!"

—என். என். சட்டர்ஜி, கோயம்புத்தூர்

பற்களைத் தக்க முறையில் பராமரிக்க, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் பற்பசையையும், போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத்பிரஷ்ஷையும் உபயோகியுங்கள் ... தவிர, உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!



இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்.

இந்தப் புத்தகத்தைப்பெற, (தபால் செலவுக்காக) 20 பைசா தபால் தலையை "மானேர்ஸ் டெண்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1" என்னும் முகவரிக்கு அனுப்புக. புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது.

K6

பெயர் ______________ வயது ______________

முகவரி ______________________________

*எந்த மொழியில் புத்தகம் வேண்டுமோ, அதன் கீழ் தயவு செய்து கோடிடவும். ஆங்கிலம், இந்தி, மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி, தமிழ், தெலுங்கு, மலையாளம், அல்லது கன்னடம்.

போர்ஹென்ஸ் பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

90F-182 TAM

ஆகஸ்டு மாதம் 29ம் தேதி திரு அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களுக்குத் திருச்சி எழுத்தாளர் சங்கம் ஒரு பாராட்டுவிழா நடத்தியது. காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும், சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளும் அவருக்கு முறையே "கவிதாமணி". "உபயபாஷா பிரவீண" என்ற விருதுகளை வழங்கியிருப்பதை யொட்டி அவரைப் பாராட்டத் திருச்சி தமிழ்ச் சங்கத்தில் நடந்தது விழா. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். திரு கிருபானந்த வாரியார் ஆசி வழங்கினார். கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியாரின் சிறப்பியல்புகளை இக்கட்டுரை விளக்குகிறது. □

அதிசய மனிதர்

★ அகிலன்

விடுதலைப் போராட்ட காலத்திலே நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் கொண்ட ஜீவானந்தம் போன்ற தன்னலமற்ற தியாகிகள் தலைமறைவாக வாழ்ந்த நாட்கள் பலப்பல. அவர்களைத் தம் கிராமத்து வீட்டில் வைத்து உபசரிப்பதை ஒரு தலைசிறந்த அறமாகக் கருதினார் ஓர் இளைஞர். பிறகு நம் நாட்டுக் கிராமங்களையே புரட்சிகரமாக மாற்றிவிட வேண்டுமென்று நினைத்து, "கிராம ஊழியன்" என்ற பெயரில் துறையூரிலேயே ஒரு பத்திரிகையையும் தொடங்கினார். பிற்காலத்தில் தமிழ்நாட்டின் தலைசிறந்த சிறுகதை ஆசிரியர் கு. ப. ராஜகோபாலனை ஆசிரியராகக் கொண்டு அது வெளிவந்தது. இளம் எழுத்தாளர்கள் சிலரை நாட்டுக்கு அறிமுகப் படுத்தி வளர்த்த பெருமை அதற்கு உண்டு.— இதைச் செய்தவரும் அதே இளைஞர்தாம்.

பின்னர் நாட்டில் எங்குமே நடக்காத ஓர் அற்புதத்தை அவர் திருச்சியில் நடத்திக் காட்டினார். பத்து எழுத்தாளர்களை ஒன்றுகூட்டி அவர்களை ஒற்றுமையாக இயங்கச் செய்வதென்றால் அது தமிழ்நாட்டில் நடக்கக் கூடிய காரியமா? திருச்சியில் அந்த அதிசயம் நடக்கத்தான் செய்தது. வெவ்வேறு கருத்துக்களும் கொள்கைகளும் விருப்பு வெறுப்புக்களும் கொண்ட எழுத்தாளர்கள் தாங்கள் சமுதாயத்தின் ஒரு முக்கியமான அங்கம் என்பதை உணர்ந்தார்கள். தங்கள் ஆற்றலையும் தொழில் நெறிகளையும் வளர்த்துக் கொள்ள அவர்கள் அந்த அமைப்புக்குள் ஒரு குடும்பத்தினராகக் கூடினார்கள். அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கும் சாதி வேறுபாடுகளுக்கும் அப்பால் நின்று இயங்கிய ஒரு வலிமையான சங்கம் திருச்சி எழுத்தாளர் சங்கம். அந்தச் சங்கத்துக்குத் தந்தையாகவும், தாயாகவும், தொண்டராகவும், தலைவராகவும் விளங்கியவரும் அந்த அதிசய மனிதரே!

அவர் பெயரை இனியும் நான் கூறுதிருக்கலாமா? 'ரெட்டியார்' என்று சொன்னால் போதும்; எழுத்தாளர்களைப் பொறுத்தமட்டில் அவர் அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்தான். கவிஞர், கட்டுரையாளர், பத்திரிகாசிரியர், சிந்தனையாளர், பக்தர் என்று பல்வேறு துறைகளில் சித்தி பெற்றவர் அவர்.

என்றாலும் என்னைப் பொறுத்தமட்டில் அவர் மனிதர்; உயர்ந்த மனிதர்; மனிதர் என்ற சொல்லுக்குரிய பல பண்புகளைக் கொண்ட நிறைகுடம் அவர். விளம்பரங்களைக் கண்டு ஓடி ஒளிந்து விடுவார்; விழா மேடைகளுக்கு வர அஞ்சுவார். புகைப்படக்காரர்களுக்குத் தப்புவார்.

உழைப்பே அவர் உயிர்மூச்சு; எளிமை நிறைந்த வாழ்க்கையே அவர் வழிமுறை; பிறருக்கு உதவும் இயல்பு அவர் இரத்தத்தோடு கலந்தது. இந்தக் கால ஆடம்பரத்துக்கும் படாடோபத்துக்கும் பலியாகாமல், வசதியிருந்தும் அதைப் பெருக்கிக் கொண்டு கார்களும் பங்களாக்களுமாக உருள ஆசைப் படாமல் குடத்துக்குள் குத்துவிளக்காகச் சுடர் விடுவதில் ஆனந்தம் அடைபவர் ரெட்டியார்.

அவர் ஆசைகளோ அவருடைய சொந்த வளர்ச்சிகளைப் பற்றியவை யல்ல. அனைத்து இந்தியாவிலுமுள்ள தமிழ் எழுத்தாளர்களை ஒன்றுசேர்த்து நாட்டில் ஒரு பண்பாட்டுத் துறைப் புரட்சியே நடத்த வேண்டும் என்ற தீவிரம் அவருக்கு உண்டு. அவர் நடத்தும் 'எழுத்தாளன்' பத்திரிகை அவர் எதை உண்மை என்று நம்புகிறாரோ, அதைச் சிறிதும் தயவு தாட்சண்யமின்றி வெளியிடும் துணிவு கொண்டது. அச்சத்தையும் ஆசையையும் விட்டொழிக்க அயராது உழைக்கும் வித்தகர் அவர்.



தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், வடமொழி இவற்றில் வல்லவரான ரெட்டியார், அண்மையில் ஆதிசங்கரரின் 'சௌந்தர்ய லஹரியை 'அழகு வெள்ளம்' என்ற தமிழ்க் கவிதை நூலாக இயற்றியுள்ளார். அதோடு ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தையும் தமிழ்ப் படுத்தியுள்ளார்.

ரெட்டியார் இந்த நாட்டின் சொத்து. நாட்டில் நற்சொத்துக்களை வளர்ப்பவர். அவர் நூறாண்டு நல்வாழ்வு வாழ இறைவன் திருவருள் புரிவானாக.

தென்றலின் மூச்சு எழுந்து முகத்தில் மோதிற்று. மீனுவின் முகத்தில் பொங்கிய வியர்வை, பனித் துளிகளாகச் சில்லிட்டு அடங்கிற்று.

கண்ணாடி போட்ட படம் ஹாலில் மேஜை மேலிருந்து குனிந்து பார்க்கிறது. ஜெயாவும் அவள் கணவனுமாக நலங்கு முடிந்து வெளியே வந்தபோது எடுத்த படம். கூந்தலில் பூவிதழ்களும், கன்னத்தில் குங்குமச் சிவப்பும் மாறாமல் நிற்கும் தோற்றம்.

இந்நேரம் அவள் என்ன செய்து கொண்டிருப்பாள்?

ஜயம் மணமாகிக் கணவன் வீட்டுக்குப் போய் விட்டாள். பிருந்தாவன எக்ஸ்பிரஸ் வண்டியின் ஜன்னலுக்கு வெளியே அவள் கையை நீட்டித் தாயாரின்மேல் கைபொத்தி, "கடிதம் போடும்மா!" என்று கண்டம் கலங்கச் சொன்னபடி கிளம்பியது நேற்றுப் போல நினைவிருக்கிறது.

மணி ஒன்பது. அதற்குள் இரவு அடங்கலாயிற்று. அநேகமாகக் காலையில் சீக்கிரமாகத் தொழிலுக்குப் போகிறவர்களின் வீடுகள் அவை. விடியற்காலையிலேயே ஜன்னல்களின் விளக்குகள் கண் விழித்துவிடும். இரவு இவ்வளவு நேரத்துக்கே உறக்கத்தின் போர்வை மூடிவிடும்.

மணி அப்போதுதான் வீடு திரும்பி இருந்தான். "அப்பா இன்னும் வரவில்லையா?" என்று நான்கு தடவைகள் கேட்டு விட்டு ராஜி தூங்கி விட்டாள். மின் விசிறிக்கு அடியில் உட்கார்ந்து, ராஜியின் தூங்கும் முகத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான் மணி.

மணியின் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியாது.

தன் பெண்ணிடமிருந்து கடிதம் வந்த மறு நாளே மீனு 'மள மள'வென்று பெரிய கடிதமாக நெஞ்சைக் கொட்டி எழுதி விடுவாள். ஜயத்திடமிருந்து அடுத்த கடிதம் வருவதற்குத்தான் நாளாகும். ஒரு வாரம்.... பத்து நாட்கள்.

பொழுது போவது சிரமமாகத்தான் இருந்தது. வீட்டு வேலைகளின் அவசரமும் நெரிசலும் போதவில்லை. மணி முன்பெல்லாம் மாலை நேரத்தில் சீக்கிரம், திரும்பி விடுவான். விடுமுறை நாட்களில் வீட்டில் இருப்பான். இப்போது இரண்டும் இல்லை. தோய்க்கிற கல்லில் துணி மீது சாரல் தெறிக்கும் சோப்பு நுரையில், சாதத்தின் மேல் பருப்பும் நெய்யுமாகப் பளபளத்து வழியும் உருகலில், விரல்கள் ஓட மனமின்றி அப்படியே நிலைத்து நிற்கும். மனத்தில் ஓர் ஏக்கம் உருப் பெற முடியாமல் மழை மேகமாய் அலையும். ஜயத்தின் பிரிவு. அப்புறம் நேர்ந்து விட்ட ஒரு வெறுமை.

குடும்ப வாழ்க்கையின் பலன் முழுவதையும் அனுபவித்து, குழந்தைகளுக்குச் செய்யவேண்



தலைகீழ்ப் பாடம்!

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

நாள் முழுதும் உழைத்த சலிப்புங்கூட, அந்தக் கண நேர உணர்ச்சியில் பொங்கும் பாலில் தெளித்த நீரென அடங்கிற்று.

"உன் பெரிய பெண் இன்றைக்கும் கடிதம் போடவில்லையா?"

"ஊஹும்" என்று தலையை ஆட்டிவிட்டு, நெற்றியைப் புடவைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள். "ஞாயிற்றுக்கிழமை எழுதுவாள். 'நிறைய வேலை இருந்தது. எழுத முடியவில்லை' என்று சமாதானம் சொல்லி."

"வேடிக்கைதான். என்னைவிட அதிகமான வேலையா? நான் எப்படியோ எல்லாருக்கும் எழுதிக் கொண்டுதானே இருக்கிறேன்?"

டிய கடமையையும் முடித்து அனுப்பி விட்டு, செயலொடுங்கிச் சோர்ந்துவிட்ட நிலையா? ஒருபுறம் நேரமும் இன்னொருபுறம் செலவழிக்க வசதியும் குறுகி, தனக்குத் தானே கட்டுண்டு நின்றுவிட்ட நிலையா? இருவிதமாகவும் வாழ்க்கை தடம் அழுந்தி ஒரே சீராக ஓடத் தொடங்கிவிட்ட சலிப்பா? எதனாலும் அவர்கள் வாழ்க்கை திடீரென்று இப்படிச் சோபையற்றுப் போய்விட்டது?

அந்த நாள் ஞாபகம் வரும்.

அப்போது மணி பொள்ளாச்சியில் இருந்தான். ஆழியாறு அணைக்கட்டில் வேலை. வெய்யில் என்றும் மழை என்றும் பாராத [illegible] வேலை. அது உடம்புக்கு ஒத்துக்

சொல்லாமல் தான் புறப்பட்டு வந்து, கல்லூரியில் 'லெக்சரர்' வேலையில் அமர்ந்து விட்டாள். கையிலே புத்தகக் கட்டும், டிபன் பாக்ஸுமாகப் போகிற வேலையானாலும், அளவுக்கு உட்பட்ட, வேளாவேளைக்குச் சோறு கிடைக்கிற வேலை இது.

எவ்வளவு வேலை இருந்தாலும் திடீர் திடீரென்று வீட்டுக்குத் திரும்பி வந்து விடுவான். "இன்று மழை. காங்கிரீட் இல்லை." "இன்று மின்சாரம் நின்று போயிற்று. இயந்திரம் வேலை செய்யவில்லை" என்று சொல்



விக்கொண்டு. வெய்யிலின் சூடு நன்றாக அடங்கு முன்பே இருவருமாக வெளியே கிளம்பிவிடுவார்கள்.

ரோஜாக்கள் என்றால் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். முசைஸ் வரைக்கும் போய் அருமையாகச் சேகரித்துக் கொண்டு வந்தாள், வகை வகையான ரோஜாக் கன்றுகளை. ஆனால் அவை பொள்ளாச்சி மண்ணுக்கும் வெய்யிலுக்கும் நிலைத்து வளரவில்லை. பூக்கவும் இல்லை. மலையிலே பூத்து, மண்ணிலே வளம் காண முடியாத மலர்களைப் போல், அன்று நினைவில் செழித்த, இன்று வடிவம் காண முடியாதனவாக எத்தனை அநுபவங்கள் ?

உற்சாகத்தின் முறுக்குத் தளர்ந்து, அசதி மேலிட்டுத் தலையணைமீது சாயும் நேரம். அவர்கள் கண்கள் சந்திக்கும். மணி சொல்வான்: "நீ இப்போதெல்லாம் முன்போல் இருப்பதில்லை. என்ன சலிப்பு உனக்கு ?"

வழக்கம்போலக் கைகள் வளையமாக விழுந்து சரிந்து அடங்கிவிடும். அவன் அரவணைப்புக்கும்கூட அவளிடம் மறு பதில் இராது.

கணக்கென்றும், கடமை என்றும் வரும் போது சில சமயம் வாய்ப் பேச்சும்கூட மென்மை மாறும். கோபமே வராத மணியின் குரல்கூடத் தடித்து உயரும். வெளியே போய் விடுவான், அதை மேலே பொங்க விடாதபடி. இல்லாவிட்டால் எழுந்து பின்னால் கையைக் கட்டிக் கொண்டு அறையில் முன்னும் பின்னுமாக உலாவுவான், நடையை அளந்தபடியே.

அன்று விடுமுறை நாள். அபூர்வமாக வீட்டில் இருந்தான் மணி. சாய்வு நாற்காலியில் அமர்ந்து புத்தகம் எதையோ படித்துக்

கொண்டிருந்தான். கீழே அமர்ந்து 'போட்டோ ஆல்ப'த்தைப் பிரித்துப் படங்களைக் கண்ணால் அளந்து கொண்டிருந்தாள் மீரு. பெரிய அளவில் அமைந்த அந்த நாளைய ஆல்பம் அது. முதற்பகுதியில் அவர்களுடைய திருமணத்தின் போது எடுத்த படங்கள். பிறகு ஜயம் குழந்தையாக இருந்த போது எடுத்த படங்கள். பிறகு படிப் படியாக அவர்கள் வாழ்க்கையின் வளர்ச்சியைக் காட்டும் படங்கள். கடைசியில் அவ்வளவும் ஜயாவின் கலியாணத்தின் போது எடுத்தவை.

கண்ணகல, ஏதோ ஓர் ஆர்வத்துடன், தன்னுடைய திருமணப் படங்களை ஜயத்தின் கலியாணப் படங்களுடன் ஒப்பிட்டுக் கொண்டிருந்தாள் மீரு. ஓரக் கண்ணால் அதைக் கவனித்தான். அவன் முகத்தில் புன்னகையின் அரும்பொளி நிழல் தட்டிற்று. எதுவும் சொல்லவில்லை.

''ஜயம் கடிதம் போட்டிருக்கிறாள்.''

''என்ன எழுதியிருக்கிறாள்?''

''அவர்கள் இரண்டு பேரும் ஊட்டிக்குப் போகிறார்களாம்'' என்று நிறுத்தினாள் மீரு, எதையோ சொல்ல அவன் தூண்டுதலை எதிர்பார்ப்பது போல.

''குட்! அப்புறம்?''

''நம்ம இருவரையும்கூட வரச் சொல்லி எழுதியிருக்கிறாள், உங்கள் பெண்!'' ஜயத்தை அப்படிக் குறிப்பிட்டதிலோ, அவள் சொன்ன செய்தியினாலோ, குரலில் ஒரு தித்திப்பு. விழிகள் சுழன்றன.

''வெரிகுட்! கிளம்ப வேண்டியதுதானே?'' மணி வாயை விட்டுச் சிரித்தான். பின்னணியில் ஜன்னலுக்கு வெளியே ஒரு பெரிய பூக் கிண்ணம் தலையை ஆட்டிச் சிரித்தது.

''பதில் எழுதிவிடு. உண்மையாகத்தான். நாமும் ஒரு மாறுதலுக்குப் போய்விட்டு வருவோம்.''

அவன் குரலையும் பேச்சையும் நம்பாதவளைப் போல் மீரு தலை நிமிர்ந்து பார்த்தாள். அதில் பொய்ம்மை ஒலிக்கவில்லை.

மேடாக உயர்ந்த புல்வெளியில், டூரிஸ்ட் பங்களா நிமிர்ந்து நின்றது. இரண்டாவது மாடியில் அடுத்தடுத்த அறைகள். ஜயாவும் அவள் கணவனும் தங்கி இருந்த அறைக்கும், அவர்கள் தங்கி இருந்த அறைக்கும், பொதுவாகப் பின்புறம் ஒரு பால்கனி.

பொட்டானிகல் கார்டனில் உலாவுதல், ஏரியில் படகுப் பிரயாணம், யூகலிப்டஸ் மர வரிசைகளுக்கு நடுவே நின்றபடி காற்றின் தண்மையை ரசிப்பது, கடைத் தெருவில் புதுமையான சாமான்களுக்கான பேரம், இப்படிப் பகல் பொழுது கழிந்து விட்டது.

மாலை முதிர்ந்து இருள் செறியும் நேரம்.

பால்கனியில் அவர்கள் இருவரும் மட்டும் உட்கார்ந்திருந்தார்கள். ஜயா தன் கணவனோடு சினிமாவுக்குப் போய் விட்டாள்.

கரியவானத்தின் கிண்ணம் கவிழ்ந்திருந்தது. வாரி இறைத்தது போன்ற நட்சத்திரங்கள். நகரம் முழுவதும் விளக்குகளின் ஒளி வரிசையில் ரம்மியமாகத் தெரிந்தது.

''என்ன யோசனை உங்களுக்கு?''

''அந்த நாளில் ஆனைமலைக்குப் போனபோது, அட்டைக் கட்டிப் பங்களாவில் உட்கார்ந்திருப்போமே, — அதை நினைத்துக் கொண்டேன்.''

மறுகணம் அவளுக்கு உடல் சிலிர்த்தது. அவளுக்கும் அதே யோசனை. ஏதோ ஓர் அழகிய புதிர் ஒளிவிட்டு அவிழ்ந்ததுபோல் இருந்தது.

''ஜயம் எதற்காக இங்கு வந்திருக்கிறாள் தெரியுமா?''

''என்ன கேள்வி? இது அவர்களுக்குத் தேனிலவு!'' என்றாள் மீரு, முகம் சிவக்க.

''நாம் ?''

அந்தக் குறை ஒளியில் அவன் புன்னகையின் குறும்பு அவளுக்குத் தெரிந்தது. அவள் பதில் சொல்லவில்லை.

''நமக்கு இது இரண்டாம் தேனிலவு.''

அவள் கண்கள் அவனைச் சந்தித்தன. புதிதாய் அவன் உருவத்தைக் காண்பது போன்ற ஒரு பிரமை. அந்தப் பேச்சிலும் பார்வையிலும் தன்னையே புதுப்பித்துக் கொள்வது போன்ற உணர்ச்சி இதழ் அவிழ்ந்து நின்றது.

''நம்மை இங்கே அழைக்கும்படி நான்தான் ஜயத்துக்கு எழுதினேன். கலியாணம் ஆகுமுன் இருந்த தனிமையை மறக்க, ஒருவருக்கொருவர் மனம் புரிந்து கொள்ளத் தேனிலவு போக வேண்டியதுதான் குழந்தைகள். அலுத்துச் சலித்துவிட்ட நம் வாழ்க்கையை நானே ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டேன்; அன்றைக்கு நீ 'ஆல்பத்'தை வைத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்ததைப்போல. நமக்குள் விடிந்து விட்ட இந்தப் புதுத் தனிமையை ஒதுக்க, புரிந்து கொண்டபின் நமது உணர்ச்சிகளுக்கு மறுபடியும் ஒரு புது மெருகு போட, அப்படி ஒரு தேனிலவு நமக்கும் தேவை என்றுதான் எனக்குத் தோன்றியது. ஓர் இரண்டாவது தேனிலவாக.''

அவன் குரலில் பொருத்தமற்ற உணர்ச்சி ஏதும் தொனிக்கவில்லை. எதையோ சொல்லி மழுப்பும் ஏளனமும் இல்லை அதில். நுரைகிழ்ப் பாலாய், அவள் மனம் அவன் காணக் கிடப்பது போலத் தோன்றியது. வர்ணப் படுதாக்களாக நலுங்கும் எத்தனையோ எண்ணங்கள். அவளால் பேச முடியவில்லை.

''அனுபவித்த ஒன்றை மறுபடியும் புதிய கோணத்தில் பார்க்கும் அனுபவத்திலும் ஒரு புதுமை இருக்கத்தான் செய்கிறது. பழகி அனுபவித்த ஒன்றை மறுபடியும் நினைவில் சரிக்கட்டி அனுபவிக்கும்போது அதுவே ஒரு புதிய உணர்ச்சியாகிறது.''

நீட்டிய அவன் கால்களின் ஸ்பரிசத்தில் அவள் பாதங்களில் ஒரு புத்துணர்ச்சி பரவிக் கொண்டிருந்தது. கவர்ச்சியிலும், இளமையின் வேகத்திலும் அன்று அவர்களை இணைத்த உணர்ச்சி வித்து. இன்று அது ஓர் அழகிய மரம். பூத்துக் குலுங்கும் அம்மரத்திலிருந்து வித்துக்கள் உதிர்ந்து கொண்டே இருக்கின்றன ; இன்னும் எத்தனையோ புதிய உணர்ச்சிகளுக்கு வழி திறப்பது போல.

''என்ன நான் சொல்வது ?'' என்று அவள் கை விரல்களைப் பற்றி மெதுவாக அழுத்தினான் மணி. மீருவின் விரல்கள் பதில் சொல்வது போல அவன் விரல்களுடன் பிணைந்து கொண்டன.



"ட்ராப்"

"போனால் வராது, பொழுது போனால் நிற்காது" என்ற தொடர், அமெச்சூர் நாடகங்களைக் குறிக்கத்தான் எழுந்ததோ என்று நான் நினைப்பதுண்டு. ஏனெனில் ஓர் அமெச்சூர் நாடகத்தை ஒருமுறை நடத்துவதே சிரமம். அப்படியிருக்க ஓர் அமெச்சூர் நாடகம் முப்பத்தைந்து தடவை நடத்தப்பட்டிருக்கிறது என்பதை மகத்தான சாதனை என்று தான் கூறவேண்டும்.

உதயா பைன் ஆர்ட்ஸ் குழுவினர் தயாரித்து நடித்து வரும் 'ட்ராப்' (Trap) தான் அந்த நாடகம். இது ஒரு துப்பறியும் திகில் நாடகம். அடிப்படைக் கதை இது தான்:

சிம்லாவில் இருக்கும் தன் பங்களாவை நிர்மலா என்ற இளம் பெண் விருந்தினர் விடுதியாக மாற்றி, மனத் திருப்தியோடு விருந்தினர்களை வரவேற்று, முகமலர்ச்சியோடு நடத்த வேண்டும் என்று விரும்புகிறாள். அவள் கணவன் சேகர் அதற்குத் துணை நிற்கிறான். பத்திரிகையில் விருந்தினர் விடுதி பற்றிய விளம்பரம் செய்யப்படுகிறது. அதைக் கண்ட நால்வர் முன்னதாகக் கடிதம் எழுதிப் பதிவு செய்து கொண்டு விடுதிக்கு வந்து சேருகின்றனர். ஒருவர் அழையா விருந்தாளியாக நுழைகிறார். பிறகு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் டில்லியில் நடந்த கொலைக்குத் துப்புக் கண்டு பிடிக்க இந்த விடுதிக்கு வருகிறார். விடுதியில் ஒரு பெண்மணி கொலை செய்யப்படுகிறாள். விருந்தினர் விடுதித் தலைவி நிர்மலாவே கொலைகாரன் கையில் அகப்பட்டுத் தவிக்கிறாள். கடைசிக் காட்சியில் கொலைகாரன் போலீஸ் இன்ஸ்பெக்டரால் சுடப்படுகிறான்.

வசனங்கள் அருமையாக எழுதப்பட்டிருக்கின்றன. அளவாகவும் இருக்கின்றன. எந்தப் பாத்திரமும் அதிகம் பேசாதது அதிசயிக்கத்தக்கதுதான். ஆங்கிலத்தின் தழுவலான இந்நாடகம் முழுக்க, முழுக்க நடை, உடை பாவனை எல்லாமே மேல் நாட்டுப் பாணியில் அமைந்திருப்பதில் அதிசயம் எதுவும் இல்லை.

இந்நாடகத் தயாரிப்பாளர் சாரதியே இன்ஸ்பெக்டராக வந்து மிகத் திறமையாக நடிக்கிறார்.

ஒரே 'செட்'டில் நடக்கும் இந்நாடகத்தில் ஒரு குறையையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். நாடகத்தின் ஸஸ்பென்ஸாக உள்ள சிக்கலான நிகழ்ச்சியை (அதாவது அநாதாசிரமத் தலைவியின் கதையை) வார்த்தைகள் மூலமாகவே விளக்க முற்படும்போது திகில் குறைகிறது, ஸஸ்பென்ஸ் தளர்கிறது, நம் பொறுமை கைவிட்டு விடுகிறது! இதைக் கொஞ்சம் கவனித்து மாற்றியமைத்தால் நாடகத்துக்கு இன்னும் மெருகிட்டது போல் இருக்கும்.


"இருள்" என்ற நாடகத்தை உருவாக்கி மேடை ஏற்றிப் புகழ்பெற்ற பத்ருதான் இந்நாடகத்தை எழுதியிருக்கிறார்.

கல்பனா நிர்மலாவாக வந்து மிகச் சிறப்பாய் நடித்தார். பேச்சு, பாவம் எல்லாமே நன்றாய் இருந்தன. திகில் உணர்ச்சியோடு அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் நன்றாய் நடித்தார். அநாதை ஆசிரமத் தலைவி சாரதா, மேரி சேகர், ரமேஷ் ஆகிய பாத்திரங்கள் இதுவரையில் நாம் ஏற்கனவே பார்த்த நாடக பாத்திரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. அநாவசியமாக மேடையில் எந்தப் பாத்திரமும் தோன்றவில்லை. இது நாடகத்தின் சிறப்பு அம்சம்.

'கிம்ளி' சீனிவாசன் பார்வையே நடிக்கிறது. வார்த்தைகளைக் குறைத்து முகத்தோற்றங்களைக் கொண்டே நடித்திருப்பது பாராட்டுக்குரியது. மேஜராக வரும் காளப்பன் அமைதியாக நடித்து நாடகத்தை, 'த்ரில்லிங்'காக முடித்துவைக்கிறார்.

இதுவரையில் எந்த நாடகமேடையிலும் நான் கண்டிராத ஒரு புது மாதிரியான காட்சியை இந்நாடகத்தில் கண்டு வியந்தேன். மேடையில் ஒருபுறமாக இருந்த அந்த விடுதியின் முகப்பு அறை முன்னுக்கும் பின்னுக்குமாக ஓடி, திகிலை உச்சகட்டத்துக்குக் கொண்டு போய், ரஸிகர்களின் கையொலியையும் பெற்றது.

மேடை அமைப்பு, காட்சி ஜோடனை, நாடி நரம்புகளிலெல்லாம் ஒலிக்கும் திகில் ஊட்டும் வாத்திய இசை, ஒளி விளக்குகள் ஆகிய எல்லா அம்சங்களும் சேர்ந்து இந்த நாடகத்துக்குப் பெரும் வெற்றியைத் தந்திருக்கின்றன. ஆகவே, நம் பாராட்டுதல்களில் அவற்றுக்கும் பங்கு உண்டு. — காந்தன்



பக்குவ முறை: ½ கோப்பை துருவிய தேங்காய், நெய். 60 கிராம் முந்திரிப் பருப்பு (நறுக்கப்பட்டது). 30 கிராம் உலர் திராட்சை. 1 பேக்கெட் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் (எந்த சுவையும் இருக்கலாம்). ½ லிட்டர் பால். 3–4 டேபிள் ஸ்பூன் சர்க்கரை.

1. துருவிய தேங்காயை 1 அல்லது 2 டீஸ்பூன் நெய்யில், இளம் சூட்டில், வெளிறிய பழுப்பு நிறமாகும் வரை வறுக்கவும். கூடவே, இரண்டு டீஸ்பூன் நெய்யில் முந்திரிப் பருப்பைத் தனியே வறுத்துக் கொள்ளவும். வெளிறிய பழுப்பு நிறமாகும் போது உலர் திராட்சையை சேர்க்கவும். உலர் திராட்சை உப்புவதற்குத் தொடங்கியதும், அடுப்பிலிருந்து இறக்கிவிடவும். 2. சிறிதளவு பாலில் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடரைக் கரைக்கவும். மிஞ்சியுள்ள பாலை சூடாக்கவும். பிறகு அதில் கரைத்துள்ள கஸ்டர்டு பவுடரைச் சேர்த்து நன்கு கிளறவும். சர்க்கரையை சேர்க்கவும். அடுப்பை அணைத்துவிடவும். 3. 2 டேபிள்ஸ்பூன் தேங்காய், 2 டேபிள்ஸ்பூன் முந்திரிப் பருப்பு மற்றும் உலர் திராட்சையை அழகுபடுத்துவதற்காகத் தனியே எடுத்து வைக்கவும். மிஞ்சியதைக் கஸ்டர்டுடன் சேர்க்கவும். நன்றாகக் கிளறி, நெய் தடவிய அச்சில் ஊற்றவும். ஆறியதும் அதைத் திருப்பிப் போட்டு, துண்டுகளாக வெட்டி, தேங்காய், உலர் திராட்சை மற்றும் முந்திரிப் பருப்பால் அழகுபடுத்தவும். குளிர வைத்துப் பரிமாறவும்.

இதுபோல் இன்னும் பல வகையான தின்பண்டங்களைத் தயார்செய்து, உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின்வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்

இழையிலும், வளப்பத்திலும், மென்மையிலும் சிறந்தது பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு. பல்வேறு வகையான புட்டிங்குகளையும் தின்பண்டங்களையும் தயாரிக்க எப்போதும் உங்கள் வசம் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் இருக்கட்டும்: இது அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப்படுத்தப்பட்டிருப்பதால், வெரய்டி கஸ்டர்டு பவுடர்களில் மிகவும் சிறந்தது.
பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் சைவ உணவுக்குக் குந்தகமற்றது—முட்டை கலவாதது.



ஒவ்வொரு பேக்கிலும் 6 இனிமையான சுவை வகைகள்

இலவசம்! புதிய பக்குவ முறை நூல் தெ. 3. இன்றே ஒரு பிரதிக்கு எழுதுங்கள்.
தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ முறை செட்டை ஆங்கிலம் / இந்தி / வங்காளி / தமிழ் / தெலுங்கு / மலையாளம் / குஜராத்தி / மாராத்தி / கன்னட மொழியில் இலவசமாக அனுப்ப வேண்டுகிறேன்.

பெயர் ....

முகவரி ....

....


இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக: பப்ளிஸிடி டிபார்ட்மென்ட்,
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி, (இந்தியா) பிரை. லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பீஆர்). K-6

உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க, மேன்மையான பொருளையே உபயோகியுங்கள்.

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்—1. (பீ ஆர்).

சகல போக விற்பனை ஏஜெண்டுகள்: பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், சென்னை—1 மற்றும் அவர்களது கிளைகள்.



கடைசியில் பச்சை விளக்கு எரிந்த போது....

அட்டைப்படக் கதை

அந்த இளைஞனைப் பார்த்தால் படித்த பிள்ளையாய் இருந்தான். ஆனால் பெட்டியில் ஜன்னலோரத்து இடம்தான் தனக்கு வேண்டும் என்று அங்கிருந்த சக பிரயாணிகளுடன் அவன் சண்டையிட்டுக் கொண்ட போது, 'கொஞ்சம்கூடப் பொறுமை காணுமே இவனுக்கு' என்று தோன்றியது. கடைசியில் கூச்சலைக் கட்டுப்படுத்த நான் தலையிட்டு அவனைச் சமாதானப் படுத்த வேண்டியதாயிற்று. அவனுடைய சூடு நிறைந்த கத்தல்களை அடக்கி அவனை அமைதிப்படுத்தி நான் உட்கார்ந்திருந்த ஜன்னலண்டை இடத்திலேயே அவனை நெருக்கி உட்கார வைத்துக் கொண்டேன்.

எங்கள் இருவர் பேச்சும் எங்கெங்கெல்லாமோ சுற்றி வளைத்துக் கொண்டிருந்தது. இடையில் ஒரு குட்டி ஸ்டேஷன். வண்டி ஐந்து நிமிஷங்களாவது நிற்கும் என்று தோன்றியது. பிளாட்பாரத்தில் தேநீர் வந்தது. என் செலவில் இருவரும் தேநீர் சாப்பிட்டு மீண்டும் பேசத் தொடங்கினோம். எங்கள் பேச்சு சுவாரசியத்தில் வண்டி ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு மீண்டும் ஓடத் தொடங்கி விட்டது என்பதையும் மறந்துவிட்டோம்.

பேச்சினிடையில் என்னை ஓர் எழுத்தாளன் என்று அவனிடம் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டிய நெருக்கடியான கட்டம் வந்தது. என் பெயரைக் கேட்டதும் அவன் என்னுடைய கதைகள் பலவற்றைப் படித்திருப்பதாகச் சொல்லிச் சிரித்துக் கொண்டான். நானும் சிரித்து வைத்தேன். கடைசியில் எங்களுடைய பேச்சு காதலைப் பற்றியும் காதல் திருமணத்தைப் பற்றியும் அலசத் தொடங்கியது. நான் பேசினேன்: "காதல் என்ற வார்த்தைக்கு இந்தக் காலத்தில் உண்மையான பொருளைக் காணமுடிகிறதா, மிஸ்டர்?"

"அவ்வளவாகக் காண முடிவதில்லையே தவிர, நடைமுறை வாழ்க்கையில் காதல் திருமணங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோமே?"

"முற்காலத்தில் காதலுக்கு இருந்த பொருளுக்கும் இக்காலத்தில் உள்ள பொருளுக்கும் உங்களால் வேற்றுமை காண முடிகிறதா?"

"இல்லையே! முற்காலத்தில் காதலர்கள் தனிமையில் சந்தித்தார்கள். தோழர், தோழியர் மூலமாக எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். இக்காலத்தில் இந்த மாதிரி அதிகமாக நிகழ்வதில்லை. ஆனால் ஒருவரையொருவர் நேரடியாகவோ கடிதம் எழுதியோ பேசிக் கொள்கிறார்கள். முறை எதுவாக இருந்தாலும் காதல் என்பது எக்காலத்துக்கும் ஒன்றுதான் என்று எனக்குப் படுகிறது."

"இன்னொரு விஷயம். இலக்கியங்களில் நாம் காணுகிற காதலை நடைமுறை வாழ்க்கையில் அநேகமாகக் காண முடியுமா?"

"முடியாது! நிச்சயமாகக் காண முடியாது."

"மிஸ்டர் சுந்தரேசன்! இன்னொரு பிரச்னை என்னிடத்தில் இருக்கிறது. சமீபத்தில் ஒரு வாரப் பத்திரிகையில் ஒரு கதையைப் படித்தேன். அதில் ஓர் ஆணும் பெண்ணும் மனமொத்துக் காதலிக்கிறார்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர்களுடைய காதல் வளர்கிறது. ஒரு நாள் அந்தப் பெண்ணினுடைய வீட்டில் அவளுக்குக் கல்யாணப் பேச்சு நடைபெறுகிறது. 'நான் இவரைத்தான் மணந்து கொள்வேன்' என்று காதலனின் பெயரைக் குறிப்பிட்டுப் பெற்றோரிடம் சொல்லத் துணிச்சலில்லை அவளுக்கு! காதலனுடன் ஓடிப் போய் விடவும் விருப்பமில்லை. கடைசியில் 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று வெகு இலகுவாகக் காதலனிடம் சொல்லிவிட்டு அவளுடைய பெற்றோர் குறிப்பிட்ட வேறு ஒரு பிள்ளையை அவள் மணந்து கொள்கிறாள். இது உண்மையிலேயே அவளுடைய காதலனுக்கு இழைத்த துரோகமாகாதா?"

"ஆமாம்! அவள் காதலனுக்கு அது ஒரு துரோகமாகத்தான் படும். ஆனால், பெற்றோருக்குப் பயந்த பெண்ணாதலால் அவர்களுடைய பேச்சை மீற முடியாமல் அவள் வேறு ஒருவனை மணந்து கொள்கிறாள்."

"அப்படியானால் அவளால் ஆசைப்பட்ட கணவனை அடைய முடிவதில்லை அல்லவா?"

பார்வதி மணாளன்

''ஆமாம்!''

''எந்நேரமும் காதலனுடன் இப்படி வாழலாம் அப்படி வாழலாம் என்று ஆயிரமாயிரம் கனவுகளைக் கண்ட ஒரு பெண் அக் கனவுகளைக் கலைத்துவிட்டு விருப்பமே இல்லாத ஓர் ஆண் பிள்ளையுடன் நடத்தும் வாழ்க்கை ஒரு வாழ்க்கையாகுமா? அதில் அவளுக்கு ஒரு சுவை இருக்கத்தான் செய்யுமா?''

''காதலனிடத்தில் நீங்காத அன்போ, பாசமோ இருக்கும் பட்சத்தில் பலவந்தமாக இன்னொரு வாலிபனுக்குக் கழுத்தை நீட்ட நேரும்போது அவன் எவ்வளவுதான் அவளை அன்பாக நடத்தினாலும் அவளுடைய காதலனிடம் அவள் எதிர்பார்த்த வாழ்க்கை அவளுக்கு அமைவது சந்தேகம்தான்!''

''அப்படியானால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இருக்க நேர்ந்த ஒரு பெண் என்ன தான் செய்ய வேண்டும்?''

''காதலித்ததையும், காதலனையும் மறந்துவிட்டு, தான் கண்ட 'காதல் கனவு'களையும் நன்றாகக் கழுவித் தேய்த்து விட்டுத் தன்னை—தன் மனத்தை—நன்றாகத் தூய்மைப்படுத்திக் கொண்டு அவளுக்குத் தாலி கட்டிய கணவனையே தெய்வமாக மதித்து அவனையும் மகிழ்வித்துத் தானும் மகிழ்வதுதான் ஒரு நல்லியல்புள்ள பெண்ணுக்கு அழகு!''

''நன்றாகச் சொன்னீர்கள், சுந்தரேசன்! நீங்கள் சொன்ன கருத்தையே நானும் வற்புறுத்த விரும்புகிறேன். ஆனால் நான் படித்த கதையில் வந்த பெண் என்ன செய்கிறாள் தெரியுமா? கணவனிடம் மனம் திறந்து பழகாது அவனிடம் எப்பொழுதும் சண்டை விட்டுக் கொண்டிருந்தாள். அவன் சொன்னதை அவள் ஏற்பதில்லை. இவள் செய்வதை அவன் ஒப்புக்கொள்வதில்லை. இப்படி எலியும் பூனையுமாக வாழ்ந்ததால் அவர்களால் 'வாழ்க்கையையே' அனுபவிக்க முடியவில்லை. இல்லற வாழ்க்கையை இருவருமே நினைத்துப் பார்க்கக் கூட விரும்பவில்லை. அந்த அப்பாவிக் கணவனுக்கோ மனைவியின் இந்த விசித்திரமான போக்கைப் புரிந்துகொள்ளும் சாதுரியமில்லை. வெளி உலகத்துக்குக் கணவன் மனைவியாக இருந்தார்களே தவிர, வீட்டில் தனித் தனி உயிர்களாகவே இருந்து வந்தார்கள். அவளால் தன்னுடைய காதலனை மறக்க முடியவில்லை. கணவனிடத்தில் தன்னுடைய காதலைப் பற்றியும் சொல்ல முடியாது. மனத்துக்குள் புழுங்கினாள். தினம் தினம் படுக்கையில் புரண்டு அழுதாள். அவள் பிரச்னைக்கு ஒரு முடிவே கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள்'' என்று சொல்லிவிட்டுக் கொஞ்சம் நிறுத்தினேன்.

''என்ன, தற்கொலை செய்து கொள்வதென்று முடிவெடுத்து விட்டாளா?'' என்று பரபரத்தான் சுந்தரேசன்.


''அப்படியே முடிவெடுத்துச் செய்திருந்தாலும் பரவாயில்லையே! அத்துடன் கதை முடிந்திருக்குமே!''

''பின் என்ன செய்தாள்?''

''சாவைப் பற்றியும் நினைக்காமல் தன்னுடைய கணவனிடம் உண்மையைச் சொல்லவும் மனமில்லாமல் கடைசியில் தன் காதலனையே தேடிப் போனாள்!''

சுந்தரேசன் கண்களை அகல விரித்துக் கொண்டு என்னைப் பார்த்தான்.

''தன் காதலனைச் சந்தித்து, 'எனக்கு என் கணவனைப் பிடிக்கவில்லை. உங்கள் நினைவு என்னை எப்பொழுதும் வாட்டிக் கொண்டிருக்



கிறது. நீங்கள் இல்லாமல் இந்த உலகத்தில் என்னால் உயிர் வாழ முடியாது' என்று சொல்லி 'ஓ'வென்று கதறி அழுதாள். இப்படி அவள் பேசிய பிறகு அந்தக் காதலன் என்ன செய்திருக்க வேண்டும்?''

''அவன் உண்மையிலேயே சமூகத்துக்குப் பயந்தவனு யிருந்தால், நல்லவனு யிருந்தால், 'நீ சொல்வது ரொம்பத் தவறு! எப்பொழுது ஒருவனைக் கணவனுக, ஏற்றுக் கழுத்தை நீட்டி விட்டாயோ, அவனோடு வாழ்வதுதான் ஒரு குடும்பப் பெண்ணுக்கு அழகு' என்று புத்திமதி சொல்லியிருக்க வேண்டும்.''

''ரொம்ப சரி! அப்படித்தான் அவனும் புத்திமதி சொல்லி அனுப்பி வைத்தான். ஆனால், காதலில் அவளுக்கு இருந்த பிடிப்பு, பிணைப்பு அவளை மீண்டும் மீண்டும் காதலனையே தேடிச் செல்லும்படி தூண்டியது. அவனுக்குக் காதலில் ஏற்பட்ட தோல்வியின் கனம் ஒருபுறமிருக்க, இவளுடைய வாழ்க்கை இப்படி அலைக்கழிக்கப்படுகிறதே என்ற துயரம் அழுத்தத் தொடங்கியது. இந்தப் பிரச்னைக்குச் சீக்கிரம் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்று நினைத்தான். அவன் உயிருக்குயிராக நேசித்த காதலி படும் துயரம் காணப் பொறுக்கவில்லை!''

''இருவரும் ஓடிப்போய் எங்காவது பிழைத்துக்கொள்ளலாம் என்றுதான் நினைத்து விட்டானே?''

''அதுதான் இல்லை! 'நான் இந்த ஊரில் இருப்பதினுலேதானே தன்னை வந்து அடிக்கடி தொந்தரவு செய்கிறுள். வெளியூர் எங்கேயாவது சென்றுவிட்டால் அவள் தன் கணவனுடன் சந்தோஷமாக வாழ ஆரம்பித்துவிடுவாள்' என்று நினைத்தான். அப்படியே அவனுடைய காரியாலயத்தின் சென்னைக் கிளையிலிருந்து திருச்சிக் கிளைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு கிளம்பி விட்டான்!''

''ரொம்பப் புத்திசாலித்தனம் சார் இது!''

''இதற்கிடையில் அவளுடைய கணவனுக்கு அவளுடைய காதல் விவகாரம் தெரிய வருகிறது!''

''ஐயையோ! அப்புறம்?''

''அப்புறமென்ன, அவனுக்கு வந்த ஆத்திரத்தில் அப்படியே வெட்டிக் குழி தோண்டிப் புதைத்திருப்பான் என்றுதானே எதிர்பார்ப்பீர்கள்?''

''ஆமாம்! அப்படித்தான் எதிர்பார்த்தேன்!''

''ஆனல் அதுதான் இல்லை. அவளுடைய காதல் விவகாரம் அவனுக்கு எப்படித் தெரிய வந்தது தெரியுமா? அவளுடைய காதலனே அவளுடைய கணவனைச் சந்தித்து நடந்தவற்றைக் கூறி அவள் மனம் நோகாமல் வாழும்படி கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கொண்டு அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டான். அவனும் அவளை நன்ருகப் புரிந்து கொண்டு அவளைச் சிரித்த முகத்துடன் வாழ வைக்கத் தொடங்கினுன். இத்துடன் கதை முடிகிறது. இந்த முடிவை உங்களால் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ள முடிகிறதா மிஸ்டர் சுந்தரேசன்!'' என்று கேட்டேன்.

''ஏன் ஒப்புக் கொள்ள முடியாது சார்! எதுவும் அசம்பாவிதம் நடப்பதற்கு முன்னலேயே அவளுடைய காதலன் முன்வந்து உண்மையைச் சொல்லி விடும்போது அதில் ஆத்திரப்படுவதற்கு என்ன இருக்கிறது?''

சுந்தரேசன் என்னைக் கேட்டார். நான் சொன்னேன்:

''மிஸ்டர் சுந்தரேசன்! நன்ருக யோசனை செய்து மனசை அலசிப் பார்த்து உங்கள் முடிவைச் சொல்லுங்கள். தன் மனைவி மாற்றுன் ஒருவனுல் விரும்பப்பட்டவள் என்ற கசப்பான உண்மையைக் காதாரக் கேட்ட பிறகும்கூட ஒருவன் அவளுடன் வாழ்க்கையைத் தொடருவான் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?''

சமூகத்தின் மீதுள்ள ஆத்திரத்தில் இப்படி அழுத்தம் திருத்தமாக அவரிடம் கேட்டு வைத்தேன். அவரும் எனக்குச் சளைத்தவராகக் காணேம்!

''ஆமாம் சார்! நாமும் வாழ்கிறேம் என்று பெயர் பண்ணிக் கொண்டு ஒருவரையொருவர் விலகி நின்று ஓர் அர்த்தமற்ற உறவை ஏற்றுக் கொள்வதைவிட உண்மையை, உண்மை நிலவரத்தை ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்று எனக்குப் படுகிறது!''

''சரி! இந்தக் கதையின் ஆசிரியன் இந்த முடிவைத்தான் எதிர்பார்க்கிறுன். அவன் எதிர்பார்க்கிற சமுதாயம் இப்படித்தான் அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில், உணர்ச்சிப் பிறிடலில் இப்படிப்பட்ட கதாபாத்திரங்களை நம்மிடையே நடமாடவிட்டு 'டிரையல்' பார்த்திருக்கிறுன். இந்த முடிவை நீங்களும் மனித சமுதாயமும் மனப் பூர்வமாக ஏற்றுக் கொண்டால் அந்தக் கதாசிரியனுக்கு அதுவே ஒரு மாபெரும் வெற்றி! ஆனல்!...'' என்று இழுத்தேன்.

''என்ன சார்! ஆனல்...''

''மிஸ்டர் சுந்தரேசன்! சில உண்மைகளைப் பத்திரிகைகளில் படிக்கும்போது, சில தருமங்களைக் கதைகளில் தரிசிக்க நேரும்போது நமக்கு அவை பரிசுத்தமானவை, பயன்படக்கூடியவை என்று தோன்றக் கூடும். ஆனல் அதே உண்மைகளையும் மனேதர்மங்களையும் நம்முடைய சொந்த வாழ்க்கையில் சந்திக்க நேரும்போது நாம் கொஞ்சம் வளைந்து கொடுக்கிறேம். எந்த ஓர் உண்மை, ஒரு தருமம் ஊரறிய, உலகறிய நல்லது என்று நம் உள்ளுணர்வு ஏற்றுக் கொள்கிறதோ, அதே உண்மை, அதே தருமம் நம்மைப் பாதிக்கும்போது அவைகளின் தாக்குதலில் பொறி கலங்கும்போது அவைகளை வெறுக்கத் தொடங்குகிறேம். நாலு பேருக்கு நியாயம் சொல்லப் புறப்படுகின்ற நாம் சில சமயங்களில் அதே நியாயத்தை நமக்காக ஏற்றுக் கொள்வதில்லை. உதாரணத்துக்கு இந்தக் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். இது வெறும் கற்பனைக் கதை! இதுவே ஒரு மனிதனின் வாழ்க்கையில் பங்கேற்க நேர்ந்தால், அவன் இந்தக் கதையின் முடிவை ஏற்றுக் கொள்வானு? முதலில் நீங்களே அந்தப் பெண்ணின் கணவனுக நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனைவி இன்னொருவனைக் காதலித்திருக்கிறுள் என்கிற உண்மையை

நீங்கள் அறிய நேர்ந்த பிறகும்கூட உங்களால் அவளுடன் வாழ்க்கையை நடத்த முடியுமா?''

இவ்வளவு நேரம் பேசியதில் எனக்குப் புருவத்தில் வேர்வை பனித்திருந்தது. துடைத்துக் கொண்டேன். ஒரு கணம் யோசித்து விட்டு அவர் பேசினார்:

''ஏன் சார் முடியாது? என் மனைவியோ அல்லது அவளது காதலனோ உண்மையை மூடி மறைத்து விட்டு ஒரு 'கள்ள வாழ்க்கை' வாழ ஆரம்பித்திருந்தார்களானால் அது எனக்கு ஒரு பேரிடியாகவே இருக்கும். அது ஒரு பெரிய இழப்பாகவே படும். உண்மை வெட்ட வெளிச்சமாகி விட்டதால் களங்கம் கற்பிப்பதற்கோ மனச் சலனம் கொள்வதற்கோ இடமே இல்லை. சத்தியமாகச் சொல்கிறேன் சார்! இந்தக் கதையில் நடந்த சம்பவம் மாதிரியே என் வாழ்க்கையிலேயே நடந்திருந்தாலும் கூட நான் என் மனைவியை ஏற்றுக்கொள்ளத் தயங்கவே மாட்டேன்!''

''சபாஷ் மிஸ்டர் சுந்தரேசன்! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இதுவரைக்கும் நான் சொன்ன கதை பத்திரிகைக் கதையல்ல! அது நான் கட்டிவிட்ட கதை! உங்கள் மனைவி விமலாவின் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் எடுத்துக்கொண்ட கடைசி முயற்சி இது! விமலாவுக்கு மணம் பேசியாகி விட்டது என்ற செய்தி என் காதுக்கு எட்டியதுமே அவளைப் பற்றிய நினைப்பை யெல்லாம் கட்டுப் போசுக்கி விட்டேன். மிஞ்சியிருப்பது அவளுடைய இந்த ஒரு புகைப்படம்தான்! இதுவும் இனி என் கையில் இருக்க வேண்டாம்!''

என் கண்களில் கண்ணீர்! உதடுகளில் நடுக்கம் துடிக்கிறது. மனத்தில் ஒருவகைப் பெருமிதம் பீறிடுகிறது. விமலாவின் புகைப்படத்தைச் சுந்தரேசனின் கையில் திணிக்கிறேன்.

''விமலாவை உங்கள் கையில் ஒப்படைத்து விட்டேன். அவளைக் கண் கலங்காமல் காப்பாற்றுங்கள்!''

—இதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை.

பெட்டிக்கு வெளியே ஒரே இருட்டு. சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தது.

''நான் இப்போதே என் விமலாவைப் பார்க்கவேண்டும்!''—துடித்தார் சுந்தரேசன்.

இருட்டென்றும் பாராமல் பெட்டி படுக்கையுடன் இறங்கிவிட்டார்.

கடைசியில் பச்சை விளக்கு எரிந்தபோது விமலாவுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்து விடும் என்ற நம்பிக்கையில் வண்டி 'கடகட'க்கத் தொடங்கியது!

சினிமா அலவன்ஸ்!

எந்தக் கம்பெனியிலாவது சினிமாப் பார்ப்பதற்கு அலவன்ஸ் கொடுத்து விடுமுறையும் கொடுத்துப் பார்த்திருக்கிறீர்களா? அப்படிப்பட்ட கம்பெனி இருக்கிறது! அதுதான் சினிமா விளம்பர நிறுவனமான 'பிளேஸ்' கம்பெனி.



நாங்கள் வெளியிடும் எல்லா ஸ்லைடுகளும் முறையாகக் காட்டப்படுகின்றனவா என்பதைச் சோதிப்பதற்காகத் தங்கள் பிரதிநிதிகளுக்கு லீவும் அலவன்ஸும் கொடுத்து சினிமாப் பார்க்க அனுப்பி வைக்கிறார்கள் அக்கம்பெனியினர்!

- மு. இரவீந்திரன்

சினிமா நட்சத்திரங்களின் கிரிக்கெட் போட்டி, சட்டசபை உறுப்பினர்களின் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவை நமக்கு அத்துபடி. மேற்கு ஜெர்மனியிலோ ஜெர்மன் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோஷ்டிக்கும் சிறைக் கைதிகளின் கோஷ்டிக்கும் இடையே கால்பந்தாட்டப் போட்டி, 'சீக்பர்க்' சிறையில் நடந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒரு 'கோல்' கூடப் போட முடியவில்லை. சிறைக் கைதிகளோ ஏழு 'கோல்'கள் போட்டு வெற்றி பெற்றனர். ஜெர்மன் நீதித் துறை அமைச்சர் ஜெர்கார்ட் ஜான், வட ரைன், மேற்கு பாலியா நீதித் துறை அமைச்சர் ஜோசப் நீபர்கர் முதலியோர் இந்தக் கால்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டனர்.

இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தி, சமுதாயத்தில் மீண்டும் நல்லவர்களாக வாழச் செய்யும் பிரச்னையை மக்களுக்கு உணர்த்தவே இக் கால்பந்தாட்டப் போட்டி நடத்தப் பட்டது. இதன் பின்னர் கைதிகளும், பாராளுமன்றஉறுப்பினர்களும்கலையான விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். ''விருந்தினர்''களுக்கு வறுத்த கறியும் குளிர் பானமும் கொடுத்துக் கைதிகள் வரவேற்றனர். விடுதலைக்குப் பின்னர் சமுதாயத்தில் நல்லவிதமாக வாழக் கைதிகளுக்கு இயன்றவரை உதவி செய்வதாகப் பல பாராளு மன்ற உறுப்பினர்கள் உறுதி அளித்தனர். (பு.பி.எஸ்.)



பழமொழிகள்

ஒரு நல்ல கதை என்றால் அது சுருக்கமாக இருக்க வேண்டும். கெட்ட கதை யென்றால் மிக மிகச் சுருக்கமாக இருக்க வேண்டும்.

●

நீந்துவதற்குப் பல வழிகள் உண்டு. ஆனால் மூழ்குவதற்கு வழி ஒன்றுதான்.

●

திசைகாட்டிக் காற்றாடி என்ன நினைக்கிறது தெரியுமா? காற்று எந்தப் பக்கம் அடிக்க வேண்டும் என்பதைத் தான்தான் நிர்மாணிப்பதாக!

எமில் கிரோத்தி

●

கொரியப் பழமொழி

ஒருவன் கடல் போன்ற பள்ளத்தைக்கூட இட்டு நிரப்ப முயன்று வெற்றி அடையலாம். ஆனால் ஒரு பேராசை பிடித்த மனிதனின் இதயத்தை இட்டுநிரப்ப இயலாது.

படுத்தபடியே ஜெயித்தவர்!

கென்னடி சகோதரர்களில் இளையவரான செனட்டர் எட்வர்ட் கென்னடி இந்தியாவுக்கு வந்தார், வங்கதேச அகதிகளின் நிலையினை அறிந்து செல்ல. (படம்)

எட்வர்ட் கென்னடி ஜனநாயகத் தந்தை வாஷிங்டன் பிறந்த நாளிலே 1932ல் பிறந்தார். ஒன்பது குழந்தைகளிலே இவர்தான் கடைக்குட்டி. "அந்தக் கடைசிப் பிள்ளையைக் கவனிக்கக்கூட ஆள் இல்லை. பெரிய பிள்ளைகளுக்குக் கிடைத்தது போக எஞ்சியவையும், அவர்கள் வேண்டாமென்று போட்ட விளையாட்டுச் சாமான்களுமே கடைப் பிள்ளைக்குக் கிடைக்கும்" என்று சொல்கிறார் எட்வர்ட்.

எட்வர்டுக்கு ஐந்து வயது நடந்தபோது தந்தையார் பிரிட்டனில் அமெரிக்கத் தூதராக நியமனம் பெற்றார். அதுமுதல் எட்வர்டால் ஓர் ஊரில் ஒரு தேசத்தில் மட்டும் தொடர்ந்து படிக்க முடியவில்லை. உயர் நிலைப் பள்ளிப் படிப்பைப் பத்து பள்ளிகளில் படித்துக் கடத்தார். உலகப் பிரமுகர்களையெல்லாம் நேரில் காணும் பேற்றினை இளமையிலேயே பெற்றார்.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் படிக்கையில் செய்த குறும்பு ஒன்று நெடுங்காலம் இவருக்கு மனத் துயரினைத் தந்தது. ஸ்பானிய மொழி இவருக்கு வருவதேயில்லை. ஒருமுறை பெயில் மார்க் வாங்கி விட்டார். அடுத்த பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. தமக்குப் பதிலாகப் போய் ஸ்பானிய மொழிப் பரீட்சையை எழுதுவதற்குத் தம் நண்பன் ஒருவனைத் தயார் செய்து அனுப்பியும்விட்டார். ஆசாமி பரீட்சை மண்டபத்திலேயே பிடிபட்டார். அப்புறம் என்ன? இருவருமே ஓராண்டு காலத்துக்கு 'சஸ்பெண்'டாயினர். இச்சம்பவத்தைத் தேர்தல் சமயத்தில் அவருக்கு எதிராகக் கொண்டு பிரசாரம் செய்தார்கள். அப்போதெல்லாம் அறியாப் பருவத்தில் செய்த இப்பிழைக்காக எட்வர்ட் வருந்துவாராம்.

இராணுவத்தில் சேர்ந்து பிரான்சிலும் ஜெர்மனியிலும் பணியாற்றிய பின்னர் சட்டத்தில் பட்டம் பெற்றார். மூத்த சகோதரர் ஜான் கென்னடி செனட் தேர்தலுக்குப் போட்டியிட்டபோது இவர் பொறுப்பாகப் பிரசார வேலை செய்து பழகினார். போட்டி யிடுவதற்குரிய வயது வந்தவுடன் தம் சகோதரர் காலி செய்த அதே ஸ்தானத்துக்குப் போட்டியிட்டு வென்று, அமெரிக்க வரலாற்றிலேயே இவ்வளவு இளைஞரான செனட்டர் கிடையாது என்ற புகழ் பெற்றார். அதற்கடுத்த பொதுத் தேர்தலில் ஆஸ்பத்திரியில் படுக்கையில் கிடந்தவாறே போட்டியிட நேர்ந்தது. பதினொரு லட்சம் வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி கண்டார்.

1964ல் விமான விபத்துக்குள்ளானார். இவருடைய அருமை நண்பரும் அந்தரங்கச் செயலருமான அன்பர் அவ்விபத்தில் இறந்தார். எட்வர்ட் கென்னடிக்கு முதுகெலும்பு முறிந்து, இடது சுவாசக் குழலில் படுகாயம் ஏற்பட்டது. ஆறு மாதங்கள் ஆஸ்பத்திரி ஸ்ட்ரெச்சரிலேயே குப்புறக் கிடந்தார். அப்போதுகூடப் பேராசிரியர்களைத் தருவித்து அரசியல், நிர்வாகத் துறைகளில் பாடம் கேட்டு வந்தார்.


'படுத்துக் கொண்டே ஜெயித்து' செனட்டிற்கு வந்த கென்னடி இப்போது முற்றிலும் மாறியிருந்தார். இடுப்பிலே எப்போதும் உலோக பெல்ட் அணிந்து நிமிர்ந்தே இருக்க வேண்டிய இடர்ப்பாடுகள் இருந்தாலும், செனட் மன்ற விவாதங்களிலும் நடவடிக்கைகளிலும் தீவிர நாட்டம் கொண்டார். எந்த ஒரு பிரச்னையைப் பற்றியும் பேச முற்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட பிரச்னையை நன்கு அறிந்த நிபுணர்களைக் கலந்து ஆலோசித்துப் போதிய தெளிவு பெற்ற பின்னரே வாயைத் திறப்பாராம்.

1968ல் ராபர்ட் கென்னடியும் சுட்டுக் கொல்லப்பட்ட பின், கென்னடி குடும்பத்துக்கெல்லாம் தலைமை ஏற்க வேண்டிய பொறுப்பு நேரிட்டதால் பொது வாழ்விலிருந்து கொஞ்சம் ஒதுங்கினர். சில மாதங்களுக்கு முன் 'சப்பாடிக்' என்ற இடத்தில் இவர் ஓட்டிச் சென்ற கார் விபத்துக்குள்ளானதிலிருந்து இவர் மீது பல அவதூறுகள் கிளப்பப்பட்டன. அடுத்த ஜனாதிபதியாகப் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்ளக் கூடும் எனச் செய்திகள் பரவின.

'Ted' எனப் பிரியமாக அழைக்கப்படும் எட்வர்ட் கென்னடியின் எதிர்காலப் புகழை இவையெல்லாம் குறைக்கவில்லை. தெளிந்த அரசியலறிவும் திடமான அறத் துறைச் சார்பும் படைக்கலமாகக் கொண்ட எட்வர்ட் கென்னடி உலக அரசியல் அரங்கையே கவரத் தொடங்கி விட்டார்.

—குழந்தைநாதன்





லக்ஷ்மியின்
அழகு மிளிர அணியும்
சுகத்திற்கு....
அன்றுடம் உடுப்பதற்கும்,
எல்லா விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்
உகந்த துணி
கவர்ச்சியான அணி-
இலேசானது சுருங்காதது-
நேர்த்திமிக்க டிசைன்கள்
பாலீனு-வாயில்களும்
மேம்பட்டது.
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
VEK LM 296 TM



உலகம் உள்ளளவும்..

கோமகள்



அழகிரிசாமி செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் எத்தனையோ இருந்தன. தம்மிடம் எமன் அத்தனை சீக்கிரம் நெருங்கிவிட முடியாது என்று சவால் விடும் கருங்காலிக்கட்டை தான் அவர். கிராமத்தின் வளமான நெய், பாலிலும், தூசு கலக்காத காற்றிலும், செயற்கையின் பிடியில் சிக்காத இயற்கையான குளிரிலும், வெப்பத்திலும் வளர்ந்த உரம் பாய்ந்த சரீரம்.

அழகிரிசாமி என்றால் உயர் மட்டத்தில் அறியாதவர்களே இருக்க முடியாது. அவரது அபிப்பிராயத்துக்கோ, அவரிடம் பிறக்கும் கருத்துக்கோ எல்லாரும் தலை சாய்ப்பதே வழக்கம். எல்லாத் துறைகளுக்கும் மொத்தமான அறிவை நல்கும் துறையின் பின்னும் இயங்கும் ஏக அவருடையது. அந்தக் கைக்கும், அவரது கருத்துக்கும் உலகம் அளிக்கும் மதிப்பே தனி. எத்தனை ஆயிரம் கைக் குலுக்கல்கள்! எத்தனை வரவேற்புரைகள்! எத்தனை கனிவான புன்னகைகள்!

அவர் ஈடுபடாத துறை எது? சட்டமா, நிர்வாகமா? கல்வியா, ஆலையா?! திட்டப் பிரிவா, திரைப் படமா? அயல்நாட்டுப் பிரச்சினையா? எல்லாவற்றுக்கும் அவர் கூறும் கருத்தை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் மன நிலையிலேயே சிந்தித்துப் பார்ப்பார்கள்.

இப்போது ஒரு வாரமாக எல்லாத் துறைகளுமே பிரமிப்படைந்த நிலையில் அவற்றின் கூட்டங்களையும், நிர்வாக வாதங்களையும் தள்ளி வைத்துக்கொண்டு காத்திருந்தன. நாலைந்து முக்கிய பேச்சுக்கள் தேதி மாறின. இப்படி அவர் ஒரு தலைவலி என்றுகூடத் தேதி மாற்றி வைத்துக் கொண்டதில்லையே....ஊசி முனையளவுகூட நேரம் தாமதமாகாமல் வரும் தகுதி படைத்தவர் அல்லவா அவர்?

அழகிரிசாமி புரண்டு படுக்கிறார். அந்த உடல் சலனத்துக்குக் காத்திருந்து,

கிடைத்துவிட்ட பூரிப்பில் அவர் மனைவி மீனாம்பா அவசரம் அவசரமாக ஹார்லிக்ஸைக் கரைத்துக் கொண்டு ஸ்பூன், ஸ்பூனாக அவர் வாயிலிட்டு வறண்ட நாக்கை நனைத்து உயிர்ப்பூட்டுகிறாள். அவர் நா எப்படித்தான் வெளுத்துக் கிடக்கிறது!

கண்களைத் திறக்கா விட்டால் விடமாட்டார்கள் போலிருக்கிறதே என்று எண்ணைத் தின்றாரோ என்னவோ அவர் கண்கள் மெள்ளத் திறக்கின்றன. மனைவியை, மகளை, மருமகளை உற்றுப் பார்த்ததின் மூலம், அந்த முகங்களின் அயர்வை ஒற்றி எடுத்தது அவர் பார்வை. கூடவே கதவோரம், டாக்டர் தடுத்ததாலோ, மரியாதை காரணமாகவோ தயங்கி நின்ற உருவங்களின் வெள்ளை வேஷ்டி நுனிகள், டெரிலின் பேண்ட் பட்டிகள் தென்படுகின்றன. உள்ளூற ஒரு திருப்தி ரேகை ஓடுவதின் மூலம் ஏற்படும் தெம்பை அவர் நன்றாக உணர்கிறார். மேஜையில் மருந்து வகைகளுடன் குவிந்திருக்கும் ஆப்பிள் பழங்களும், மலைப் பழங்களும் இன்றும் பலர் வந்துவிட்டுச் சென்ற சுவட்டைக் காட்டி நின்றன.

டெலிபோன் மணி அடிக்கிறது. அந்த ஓசை நோயாளியை உறுத்தும் என்ற அச்சத்தோடு ஓடிச் சென்று அதை எடுத்துக் கொள்கிறான் மருமகப்பிள்ளை சபாபதி. என்ன இருக்கும்.... எல்லாம் அவர் உடல் நிலையைப் பற்றிய விசாரிப்பாகத்தான் இருக்கும்! யாருமறியாமல் அவருள் ஒரு பெருமிதம் சூழ்ந்து கொண்டது.

அவர் தீர்த்த தலைவலி பிரச்னைகள் கொஞ்சமா, நஞ்சமா? விரல் விட்டு மடக்கிவிட முடியுமா? அந்தச் சமயத்தில் அவரது கருத்துக்களுக்குத்தான் எத்தகைய ஆதரவு, ஆமோதிப்பு! அவர் புன்னகைக்குத்தான் எத்தனை பொருள், எத்தனை சிறப்பு! நவ உலக நிர்மாணக் குழுவிலிருந்து, தனித் துறைகள் அத்தனையிலும் அவர் பெயர் இடம் பெற்றது.

அழகிரிசாமி நினைவுகளின் சலனத்தால் கண் திறந்து பார்க்கிறார். தன்னருகே தலை குனியும் அருமைப் பெண் சாரதையிடம், ''காப்பி வேண்டும்!'' என்று மெல்லிய குரலில் கேட்டார்.

மீனாம்பா காப்பி எடுத்து வருவதற்கு உள்ளே ஓடுகிறாள்.

கதவருகே தயங்கித் தயங்கி நின்றவர்களும் அவரருகே வந்து தத்தம் ஆதங்கத்தை வெளிக் காட்டிக் கொண்டார்கள். ''இப்போ எப்படி இருக்கு?''

தன்னம்பிக்கை தவழும் மெல்லிய புன்னகை ஒன்று அவர் உதடுகளில் தெரிகிறது. எனக்கொன்றும் ஆகிவிடாது என்று அபயம் அளிக்கும் அறிவின் புன்னகையோ அது!

மீனாம்பா கொண்டு வந்த காப்பியை, வந்திருந்த பிரமுகர்களில் ஒருவரான, மாடர்ன் அகாடமியின் தலைவர் பரமானந்தம் வாங்கி அழகிரிசாமியின் வாயில் மிடறு மிடறாக விட்டார். நட்பின் கழுகந்தோடு அவர் செய்த உபசாரத்தை மற்றவர்கள் பொறுமையோடு பார்க்கத் தவறவில்லை.

முக்கிய பிரமுகர்கள் மறக்க முடியாத நிகழ்ச்சியோடு கட்டப்பட்டவர்களில்லையா? மாடர்ன் அகாடமியின் தலைவர் பரமானந்தம் அழகிரிசாமியிடத்தான் ஒவ்வோர் ஆண்டும் தம் அகாடமி விழாவுக்குரிய யோசனைகளைக் கேட்பார். அழகிரிசாமி சுற்றாத இடமோ, பங்கு பெறாத சங்கீத விழாவோ உலகில் ஏது? கர்நாடக இசையிலிருந்து, ஜாஸ் இசை வரை அவர் ரசிக்காத சங்கீதம் ஏது? எனவே, அழகிரிசாமி தம் அபூர்வ யோசனைகளை உதிர்த்து உதவும்போதெல்லாம் ஒரேவிதப் புகழ்ச்சியில் நனைந்து விடுவார்.

''ஏதானும் சாப்பிடுறீங்களா, மாமா?'' என்று சபாபதி குரல் கொடுக்கிறான்.

தம் சாதனைகளையே எண்ணி எண்ணித் தெம்பை ஊக்கிக் கொள்ளும் அவருக்கு அதிலிருந்து மீள மனசு வரவில்லை. எனவே, வேண்டாம் என்று தலையசைக்கிறார்.

தென்னிந்திய வைதிக சங்கத்தின் தலைவர் சாமிநாதன். அவர் ஒரு தரம் நவராத்திரியின் போது கோயிலில் ஒரு விசேஷ பஜனை ஏற்பாடு செய்திருந்தார். அதில் சிறப்பம்சம் என்னவென்றால், ஏதோ ஒரு வெளிநாட்டுக் கலைத் தூதுகோஷ்டி, நகரத்தில் வந்து தங்கி, நமது கலாசாரத்தை அறியும் ஆவலில் அந்த பஜனைக்கு வந்திருந்தனர். அவர்கள் கையில் காமிராவும், குறிப்பேடும் தயாராக இருந்தன. ஆனால் குறிப்பிட்ட நேரம் நெருங்கிக் கொண்டு வந்ததே ஒழிய பஜனை கோஷ்டி வரவில்லை. வெளிநாட்டவர்களை உபசரிக்கும் முக்கிய பங்கு கொண்ட அழகிரிசாமி காரை விட்டு இறங்கியதுமே நிலைமையை ஊகித்தார். கூட்டமோ அதிகம். நேரே உள்ளே வந்து சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரைப் பார்த்தார்.

சேவைக்குக் காத்திருந்த நாலைந்து வைதிகர்களை அழைத்துக் காதும், காதும் வைத்தாற் போல் பேசினார். தம் தலைப்பாகையைப் பிரித்து உதறி இடுப்பில் கட்டிக் கொண்டார். நாமாவளியும், பஜனையும் இரண்டுபட்டன. காமிராக்கள் 'க்ளிக், க்ளிக்'கென எரிந்து ஒளிர்ந்தன. புரந்தர தாசரும், தியாகையரும் உருகிய பாவமயமான பாட்டுக்களை அந்த பஜனை கோஷ்டியும் பாடி உருகியது. அந்த நெருக்கடி இப்படி நிலைமையைத் தீர்த்ததோடு முடியவில்லை. விஷயமறிந்த பத்திரிகை வட்டாரம் அழகிரிசாமியின் பக்தியைப் புகழ்ந்து பத்தி பத்தியாகப் புகழ் வாசகங்கள் தள்ளின.

இப்படி எத்தனை எத்தனை நெருக்கடித் தீர்வுகள். அவர் இல்லையென்றால் அவையெல்லாம் இல்லையென்றாகி இருக்குமோ?

மேலும் இரண்டு வாரங்கள் சென்றன. அழகிரிசாமியின் உடல் நிலையில் கணிசமான அபிவிருத்தி இருந்தாலும், உடம்பு பலவீனப்பட்டுக் கிடந்தது. டாக்டர்கள் அவருக்கு ஓய்வு தேவை என்று புலம்புகின்றனர். அவரால் ஓய்ந்திருக்க முடியுமா? அவர் செய்ய வேண்டிய காரியங்கள் மலைபோல் பெருகிக் கிடக்குமே...இந்த வெறும் பழரசத்தையும், நீர் வடிவ உணவையும் மட்டும் சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் எப்போது எழுந்து நடமாடுவது? எப்போது அலுவல்களைக் கவனிப்பது?

''உங்களை முதலில் கவனித்துக் கொள்ளுங்கள். மற்றவற்றைப் பற்றிப் பிறகு

நடந்து
செல்வதை
இன்பமாக்குவது...
பாட்டா
ஸிதாரா



இந்த மாத நாவல்

தியாகம் தேவையில்லை!

மன்ஹர் சௌஹான்



சலிக்கப்படலாம்'' என்று சமாதானப்படுத்து கிறாள் சௌபதி.

வர வர டெலிபோன் விசாரிப்புகள் குறைந்து போயின. நேரில் வந்து பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து போயிற்று. அதைவிட அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்திகள் என்னவென்றால்... அவருக்காகத் தேதி மாறிய கூட்டங்கள் நடந்து முடிந்து விட்டன. அது மட்டுமல்ல, நல்ல முடிவெடுத்ததாகவும் அறிவிப்பு செய்தன. திடீரென்று மாநிலத்தில் தோன்றிய சில பிரச்னைகளைத் தீர்க்கப் பெயர் தெரியாத புதிய ஆசாமிகள் உருவாயினர். பிரச்னைகளும் தீர்ந்துவிட்ட விதம் அவரை ஆச்சரியப்படுத்தியது. என்றாலும், அவரளவு அவற்றைக் கையாண்டு தீர்க்க முடியுமா? பிரச்னையின் துளிரை, யார் வேண்டுமானாலும் வெட்டி விடலாம். அதன் அடிவேரை அவரைப் போல் யாரால் கெல்லி எறிய முடியும்? ஆனால் அவரிடம் அறிவுரை வாங்கிய அவரைச் சுற்றியுள்ள உலகம் நன்றியை மறந்து விடாது என்பதுதான் உண்மை! இதற்காகத்தான் அவர் தன் வாழ்நாள் முழுதும் சொந்த வேலைகளையும் ஒதுக்கி விட்டு, பொதுப் பணிகள் ஏற்று உதவிகள் செய்தாரா?

அவரைச் சுற்றி வந்தவர்கள் எல்லாம் மனசை விற்றவர்களா? அவரை விட்டு மற்றவர்களை யெல்லாம் தத்தம் சங்கத்துக்கு, கழகத்துக்கு அழைப்பதிலிருந்தே கண்கூடாகப் புரிகிறதே....அரசாங்கப் பிரச்னை ஒன்றுகூட அல்லவா, ஒரு வேற்று மாநிலக்காரரிடம் யோசனை கேட்கப் போயிருக்கிறது? அவர் வரும் வரை பொறுக்கக் கூடாதா, அல்லது அவரைக் கேட்டுவிட்டுப் பிறர் உதவியை நாடக் கூடாதா? இவர்களைப் பழி வாங்க அவர் செய்ய வேண்டியதெல்லாம் சிந்தனை அல்ல... ராஜிநாமா! அவருக்கு உடம்பு முடியவில்லை என்ற சாக்கை வைத்துக் கொண்டு, புதியவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு தருபவர்களுக்கெல்லாம் இதுதான் தக்க தண்டனை! யார் வந்தாலும் அவரைப் போல் பிரச்னைகளையோ, நெருக்கடிகளையோ சமாளிக்க முடியுமா என்ன? எனவே, அவரைச் சூழ்ந்த அந்த உலகைப் பழி வாங்க அவர் துடித்த ஒரே துடிப்பு கால் காகிதம் தருவதுதான்! இலாகாக்கள், சங்கங்கள், சம்மேளனங்கள் எல்லாம் அவர் பிடியினின்றும் விடுபட்டுத் தறிகெட்டு ஓட வேண்டும்! அவற்றைத் திறமையாக, மென்மையாக ஆளும் கைகளின்றி மூளிபட வேண்டும்! ஒரே வேகம், ஒரே ஆயாசம். ஒரே கோபம், ஒரே பரிதவிப்பு. ஒரே அலுப்பு, ஒரே தவிப்பு.

பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் அவரது ராஜிநாமாச் செய்தி! காரணம் விளக்கப்படவில்லை என்ற மர்மப் புலம்பல். அவரே சொல்லாத நிலையில் நினைக்கத் தோன்றும் காரணங்களின் விளக்கங்கள்!

ஓய்வு! ஓய்வு!

'துவாரகா'வின் குளிர்ச்சி பொருந்திய தரைகளிலும், பூந்தருக்கள் சூழ்ந்த தென்றலிலும், செல்வச் செழிப்பைப் பிரதிபலிக்கும் உணவுகளிலும் ரசிக்க முடியாத ஓய்வு! சாப்பாடு, தூக்கம், கொஞ்சம் உடற்பயிற்சி, பத்திரிகை வாசிப்பு, மாலை உலா.... ஒரு பிக்சருக்குக்கூடப் போய்ப் பழகியிராதவர். திரைப்படம் பார்க்காதவர். ஓயாமல் எதிர்ப்படும் பிரச்னைகளைச் சுலபமாகத் தீர்க்கும் சிந்தனை சக்தி ஓய்ந்து கிடந்தது.

இப்படிப்பட்ட ஓய்வு தேவையா? வெளி உலகம் பழகிய முகங்கள் எல்லாம் வேம்பாய்க் கசந்தன. பொழுதும் போகவில்லை.

''அப்பா! மாடர்ன் அகாடமியில் கச்சேரி இருக்கு, அப்பா!'' என்றாள் சாரதை.

அவர் செவிகளில் சம்பந்தப்படாத புறம்பான விஷயமாக அது ஒலித்தது. ''சீசன் டிக்கெட்டுதான் இருக்கே... நீயும், மாப்பிள்ளையும் போய் வாருங்களேன்.''

''அவருக்கு வேலை இருக்கப்பா!''

''உன் அம்மா இல்லையா?''

''உடம்பு சரியில்லையப்பா. நீங்களும் ஓய்வாகத்தானே இருக்கீங்க...ஒரு மாறுதலா இருக்கும், வாங்கப்பா!''

''நானா?''

''நீங்கள் வந்தால் என்னப்பா?''

''சரி; வந்தால் என்ன? புறப்படு.''

சாரதை காரோட்டி ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டாள். தன்னுடன் காரில் வந்தமர்ந்த தந்தையை வியப்பு வழியப் பார்த்தாள். அவருக்கே உரிய தலைப்பாகை, கோட், டை, பாண்ட் எல்லாம் இல்லை. எட்டு முழ பின்லே வேஷ்டி. மல் ஜிப்பா. கால்களைக் கவ்விப் பளபளக்கும் பூட்ஸ் இல்லை, செருப்பு அணிந்திருந்தார். முகத்தின் முதிர்ச்சியில் புன்னகை ரேகை. அதனை மீறும் அழகோடு நெற்றியில் மூன்று விபூதி ரேகை. எல்லாம் விட்டிருக்கும் கோலம்.

''அப்பா! தலைப்பாகை வேண்டாமா?''

''அது உத்தியோக உடுப்பு, என் வேலையின் சின்னம்! இப்போது நான் சாதாரண மனிதன்.'' அவர் குரலில் வருத்தமா, ஏக்கமா? கொஞ்சம் கோபம் கலந்த நயமா? எதுவும் சாரதைக்குப் புரியவில்லை.

" இல்லேப்பா. உங்களை நீங்கள் என்றே புரியவில்லை. நேரு குல்லாய் இல்லாமல், ராதாகிருஷ்ணன் தலைப்பாகை இல்லாமல் இருப்பது போல் என்னவோபோலிருக்கிறது..." மிக கௌரவப்பட்ட மனிதர்களாலேயே தன் தந்தையைக் குறிப்பிட்டு விட்ட மகிழ்ச்சி அவன் குரலில்.

" என்னை யாருக்கும் அடையாளம் புரிய வேண்டாமே!" விரக்தியா, வெறுப்பா அது?

சாரதை காரை மெதுவாக ஓட்டி வேகம் கூட்டினாள்.

" மெதுவாகப் போம்மா. கொஞ்சம் லேட்டாகட்டும் !"

"ஆகட்டும்பா!"

மாடர்ன் அகாடமியின் சின்னஞ்சிறு முகப்பு விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. உள்ளே பேச்சு ஆரம்பித்துவிட்டதற்கான பேரமைதி நிலவியது. வாயிலில் நின்று தெரிந்தும், தெரியாத இலேசான தலையசைப்பால் வரவேற்பதாகப் பாவனை புரிய முயலும் மனிதர்கள் அவருக்குத் தெரியாதவர்கள்தான், அவரைத் தெரியாதவர்கள் என்று சொல்லிவிட முடியுமா? இருவரும் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டனர். நிரம்பத் தெரிந்தவர்கள் எதிர்ப்படாத திருப்தி அவருக்கு.

மேடை ஒளியில் பிரகாசிக்கிறது. அன்று தான் ஆரம்ப விழா. யாரோ ஒரு 'பொடிசு' பேசுகிறான். 'ஹூம்! இளரத்தம்' என்று அவர் கருதிய எண்ணம் பொல பொலக்க, மேடை மீதிருந்த வாலிபன் தன் சாதுரியப் பேச்சால், அவர் நெஞ்சருகே நிற்கும் பாத்யதை பெற்று விட்டான். இசை என்பதற்கு ஒரு வடிவம் தந்து பேசும் பேச்சுக் கலையின் நுண்ணிய இழைவுகள் அவர் கருத்தில் பதிந்தன. இசையை உணர்ந்திருக்கும் உள்ளம் புரிந்தது. தியாகையர், புரந்தரதாசர் போன்ற மகான்களின் மேதைத் தன்மையை, ஓரிரு பாட்டுக்களை எடுத்து அவன் ரசமாகப் பிழிந்து கொடுத்த அமுதத்தை அவரும் ஏற்றுக் கொண்டார். என்றாலும் அவர் மனத்துள் ஓர் ஏக்கம் நிலவியது.

பாடகியின் பாட்டு இனிமையான ரீங்கரிப்பாகச் சபாவைச் சூழ்ந்தது. அந்த நுகர்ச்சி ஏற்ற நேரம், அவரது ஏக்கம் மறந்த நேரம்.

ஒன்பதடிக்க மூன்று நிமிடங்கள் இருந்தன. பாடகி மங்கள அடியை ஆரம்பிக்கும்போதே காரை நாடும் பிரமுகர்கள் குழுவில், அழகிரிசாமியும், சாரதையும் முன்னேறினார்கள்.

அன்றிரவு அவருக்குத் தூக்கம் வரவில்லை.

அந்த வாலிபன் மிக அழகாகப் பேசினான். உயர்ந்த கருத்துக்களை, புதிய உவமை பூக்கக் கூறினான். மக்கள் கைகொட்டி அவனை உற்சாகப்படுத்தினார்கள்.

ஆனால் அவர் நினைத்தபடி அவர் வராததினால் எந்த விழாவும் நிற்கவில்லை. அவர் பங்கு பெறாததால் எந்தக் கூட்டமும் வெற்றிநடை போடாமலில்லை, சிதைந்துவிடவில்லை. எல்லாவற்றையும்விட அவர் சிந்தனைகளின் தூண்டுதல் இல்லாமலேயே, இளைஞர்கள் இவ்வுலகை ஆள முடியும் என்று சவால் விடுவதுபோல் அவர் ஒத்துழைப்பைப் புறக்கணிக்கிறார்கள்!

புதிய சமுதாயத்திடம் தோற்றுவிட்ட உணர்வோ அவருக்கு?

இன்னும் எத்தனையோ விழாக்கள், கூட்டங்கள், அவர் இல்லாமல் நடப்பதைப் பார்த்தார் அழகிரிசாமி. ஓரிருவர் அவரைப் புகழும் அடைமொழிகளை அருவையோடு வெறுத்தார். அவரைத் தூர இருத்திப் புகழ்ச்சி என்ன வேண்டியிருக்கிறது? துன்பமே தனிமையின் நரகமாக அமைந்தாற் போலிருந்தது அவருக்கு. எனவே, விடுபட இயலாது கொந்தளிக்கும் தம் ஆற்றலறிவை எழுதுவதின் மூலம் வெற்றிக் காரியமாக்க ஆரம்பித்தார். சிந்தனையின் திசை மாறிய போது அவர் தம்மையும், தம் குறைகளையும் பூரணமாக உணர்ந்து கொள்ள ஆரம்பித்தார்.

அவர் தமக்குள் நாணினார். தம்மை விட்டதால் மற்றவை எல்லாமே தறிகெட்டு ஓட வேண்டும் என்றுதானே கருதினார்? தாம் இல்லாமலும் அந்த ஸ்தாபனங்கள் முன்னேற வேண்டும் எனக் கருதவில்லையே? அந்த அளவு சுயநலத்தை வளர்த்தது அவர் தவறு அல்லவா? அவர் கரங்களின்றி அவை மூலி படவேண்டும் என்று நினைத்து ராஜிநாமா பண்ணியது தவறல்லவா?

இப்போது அதைச் சமாளிக்க ஆள் உண்டு. தீர்த்து வைக்க அறிவும், ஞானமும் படைத்த புது யுக வாலிபர்கள் உண்டு என்று உணரும் போது அருவை ஏற்படுவானேன்? உலகம் உள்ளளவும் புதுப் பிரச்னைகள் எழுந்து கொண்டேயிருக்கும் என்னும் போது, அதற்காகப் புதியவர்கள் தயாராக வேண்டாமா? வயோதிகம் வந்தடைந்துவிட்ட அவருக்குப் பின் இந்தச் சமுதாயம் தனக்குரியவற்றைத் தானே தீர்த்துக்கொள்ளக்கற்க வேண்டாமா?

"ஆம்!" என்றது அவரது அறிவாற்றல் மிக்க சிந்தனை உள்ளம்.

"மாமா! கங்கிராஜுலேஷன்ஸ்! உங்களுக்கு ஜனாதிபதி விருது கிடைத்திருக்கிறது!" என்றான் சபாபதி.

"அப்பா! உங்களை வெளிநாடு செல்லும் ஒரு முக்கிய தூதுகோஷ்டிக்குத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.... உலகம் உங்களை மறக்கவில்லை, அப்பா!" என்றாள் சாரதை.

"இந்த அழைப்புக்கு முன்பே அதை நான் உணர்ந்து விட்டேன் அம்மா! உலகம் எனக்கும் ஒரு பாடம் கற்பித்திருக்கிறது சாரதை. 'நீ தேர்ந்த அறிவாளியாக இருக்கலாம், ஆனால் மற்றவர்களுக்கு வழி விடு. அப்போது தான் உதிர்ந்த மலரை அடுத்து மொட்டு பூப்பது போல், உலகம் சிந்தனையை வளப்படுத்தும், தழைக்கும், கொழிக்கும்' என்று அறிவுறுத்துகிறதம்மா அது!"

சாரதை வியப்போடு அவரைப் பார்த்தாள்.

அவர் அமைதியின் சிரிப்போடு புன்னகை பூத்தார்! வாலிபம் அவரை மதிக்கிறது. அவரது தலையீட்டை இளந் தலைமுறை ஏற்கிறது. ஆயினும் பிறருக்கு வாய்ப்புத் தரும்படி இளைஞருலகம் வேண்டி நிற்கிறது. அதுதான் உண்மை! உலகம் உள்ளளவும் எல்லோரும் எதிர்பார்க்கும் விருப்பம் இது! இதை உணர்ந்து கொண்ட பூரணத்தின் பொலிவே அந்தப் புன்னகை!


மணமான தம்பதியர்

இதோ ஒரு புதிய, முற்றிலும் சோதிக்கப்பட்ட
வசதியான கருத்தடைச் சாதனம்...

டெல்ஃபென் க்ரீம்

கருத்தடை க்ரீம்

கணவன்–
மனைவி
இருவருக்கும்
ஏற்றது.



டெல்ஃபென் என்பது என்ன?

டெல்ஃபென் ஒரு உடனடியாகப் பயன்தரும் கருத்தடை க்ரீம்.

டெல்ஃபென் மென்மையானது, எரிச்சல் அளிக்காதது.

டெல்ஃபென் உபயோகிக்க இன்பமானது ஏனெனில் அதிலே ஒரு மென் மணம் உண்டு. எண்ணெய்ப்பசையற்ற அது உடைகளைக் கறை படுத்தாது.

டெல்ஃபென் உபயோகிக்க எளிதானது, வசதியானது. தேவைப்படும்போது மட்டுமே அதை பயோகியுங்கள்.

டெல்ஃபென் சிக்கனமானது. பெரிய ஏகானமி சைஸ் டியூப் நாற்பது தடவைகள் உபயோகிக்கப் போதுமானது: ஒரு தடவை உபயோகிக்கும் செலவு 15 காசு மட்டுமே.

டெல்ஃபென் வைத்தியர் குறிப்பு இன்றியே மருந்துக் கடைகளில் தயாராகக் கிடைக்கிறது.

டெல்ஃபென் பற்றிய விவரங்கள் யாவும் உங்கள் டாக்டருக்குத் தெரியும், அதை உபயோகிக்கும் முறைபற்றி அவரே விளக்குவார்.

டெல்ஃபென் அமெரிக்காவிலுள்ள ஆர்தோ பார்மஸூடிகல் கார்பொரேஷனைச் சேர்ந்த விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆர்தோ நிறுவனம் கருத்தடைச் சாதனங்களின் ஆராய்ச்சியிலும், அபிவிருத்தியிலும் நிபுணத்துவம் பெற்றது. இதை மனதில் கொண்டுதான், டாக்டர்கள் ஆர்தோ தயாரிப்புக்களை சிபாரிசு செய்கின்றனர். இலட்சக்கணக்கான மக்கள் இன்றும் டெல்ஃபெனை நம்புகின்றனர்.

50கி 100கி. டியூபுகள் மற்றும் கையடக்கமான பிளாஸ்டிக் பைகளில் டெல்ஃபென் இப்போது கிடைக்கிறது. புதிய 2.5கி. அப்ளிகேடர் மூலம் டெல்ஃபெனை உபயோகித்து மேலும் சிக்கனம் செய்யுங்கள்.

படக்கப்படங்களுடன் கூடிய இலவச கைப்புத்தகத்திற்கு எழுதுக:

டிபார்ட்மென்ட் எஸ், எத்னூர் லிட்., 30ஏ, ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்–26.

டெல்ஃபென் க்ரீம் நம்பிக்கையின் மறு பெயர்

பதிவு பெற்ற டிரேடு மார்க்.

JAISONS/EIB.TAM



இன்றுதான் டி. கே.சியைப் பற்றிய கவிதையைப் படித்தேன். ரொம்பவும் ரசித்தேன். ஒன்றையும் விடாது அவரை ஞாபகப் படுத்தி யிருக்கிறார் கவிஞர் சோமு. யுனிவர்ஸிடி படிப்பை அவர் காரசாரமாய்த் தூற்றுவதை முதற்கொண்டு, தமிழ் ஆர்வம் அவரிடம் எடுத்த மேம்பாடு வரை பாகரங்கள் அமைந்திருந்தன.

மயிலை
14—8—71 — வி. சந்திரசேகரன்

பெருமாள்புரம் சோமயாஜுலு தோட்டத்தில் 9 — 8 — 71 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் மாகாண மகாநாடு நடைபெற்றது. மாகாணக் கமிட்டித் தலைவர் திரு என். சோமயாஜுலு அவர்கள் தலைமை வகித்து முதியவர்களான 75 வயது நிரம்பியவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, வந்திருந்தவர்களுக்கு விருந்தளித்தார்கள்.



மாகாணம் முழுவதிலுமிருந்து 120 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். தேசத்தின் தற்கால அரசியல் நிலையையும் காந்திஜி வகுத்துத் தந்துள்ள அரசியல், சமய, ஒழுக்க நெறிகள் அறவே பாழ்பட்டு நிற்பதையும் எடுத்துச் சொல்லி ஒரு நல்ல தலைமை உருவாக வேண்டும் என்று பலரும் பேசினார்கள்.

விட்டலபுரம்,
12—8—71 — வேங்கடாச்சாரி

* அரசியல் : சட்டத் திருத்த மசோதா மீது நடந்த விவாதத்தின் ஊடே பேசிய திரு மோகன் குமார மங்கலம் அவர்களின் வாக்குவாதம் பலருக்குக் கவலையையும் வருத்தத்தையும் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. நீதிபதிகள் பணக்காரச் சூழ்நிலைகளில் உருவானவர்களாம்! அவர்கள் பழைமை நோக்குக் கொண்டவர்களாம்! அதாவது நமது நீதிபதிகள் சட்டங்களை விளக்கும் போது (Interpret) தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களால் பாதிக்கப்படுகிறார்கள், அது அவர்களது தீர்ப்பையும் பாதிக்கிறது என்று திரு மோகன் குமாரமங்கலம் அவர்கள் மறைமுகமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

★ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

பல காலம் புகழ்பெற்ற வழக்கறிஞராகப் பணியாற்றிய ஒருவர் இங்ஙனம் பேசியிருப்பது எவ்வளவு வருந்தத்தக்கது!

அவர் மேலும் சொன்னார்: ''நீதிபதிகளும் நம்மைப் போன்ற (பாராளுமன்ற அங்கத்தினர்கள்) வர்கள்தான் (As good or as bad as M.P.'s)'' என்று. ஆனால் திரு குமாரமங்கலம் அவர்களுக்கே தெரியும், மக்கள் மனத்தில் நீதிபதிகள் ஓர் உயர்ந்த இடத்தை வகிக்கிறார்கள் என்றும், அரசியல் வாதிகள் வகிக்கும் இடம் அதைவிடத் தாழ்ந்ததுதான் என்றும்.

''நானும் ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியும் சமமானவர்கள்தாம்'' என்று யாரும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் திருமோகன் குமார மங்கலமும் அவருடைய அரசியல்வாதி நண்பர்களும், தாங்களும் மக்களால் நீதிபதிகள்போல மதிக்கப்பட வேண்டும் என்று உண்மையிலேயே விரும்புவார்களானால் அவர்கள் இன்னும் நிறையப் பாடுபடவேண்டும்.



நமது அரசியல்வாதிகள் எல்லாரும் தங்கள் நடத்தையிலேயும் அறிவிலேயும் நமது நீதிபதிகள் போல் ஆகட்டும். அதைவிட எது நமக்கு மகிழ்ச்சி தரக் கூடும்? ஆனால் நீதிபதி ஸ்தானத்துக்கு உயர முடியாத அரசியல் வாதிகள் நீதிபதிகளைத் தங்களது ஸ்தானத்துக்கு இழுத்தால் வருந்துவதைத் தவிர நாம் வேறு என்ன செய்ய முடியும்?

திருவண்ணாமலை,
14—8—71 — ஏ. சந்திரசேகர ஐயர்

சோ. வி. மணிசேகரனின் 'முல்லைத் தேர்' கதையினைப் படித்து வியப்புற்றேன். தமிழ் அறிந்த ஆசிரியர், ''முல்லைப் பூக்கு மட்டும் அங்கு பஞ்சமிருந்தது. நாட்டைச் சுற்றி முல்லைக் காடமைத்து மணக்கச் செய்யவேண்டும் என்று எவ்வளவோ முயன்றான். முடியவில்லை'' என எழுதி உள்ளார். அக்கருத்து பற்றியே கதையும் மேலே செல்கிறது. ஆயின் இலக்கியம் உரைப்பதோ எதிர்மாறானது.

புறநானூற்றில் கபிலர் பாரியின் நாட்டைச் சிறப்பித்து,


> ''பெயல் பிழைப்பறியா.....
> பின்ன கொரகின்
> முள்ளெயிறு புரையப்
> பாசிலை முல்லை முகைக்கும்
> ஆய்தொடி அரிவையர்
> தந்தை நாடே''

எனக் கூறியுள்ளார்.

(மழை தவறாது பெய்யும். இளம் காட்டுப் பூனையின் கூரிய பற்களைப் போன்ற முல்லை அரும்புகளை முல்லைக் கொடிகள் முகிழ்த்தன.)

சென்னை — 17
18—8—71 — இரா. மோகன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
VALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon